முகப்பு:

அருள்மிகு தியாகராஜ சுவாமி
திருக்கோயிலின் தோற்றம்,
திருவொற்றியூர்

திருக்கோயில்

ஆசிரியர்: ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

மாலை: 22 || சித்தார்த்தி ஆண்டு-தைத் திங்கள்-சனவரி-1980 || மணி: 4

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை — 600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப் பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 15—00 உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங் களுக்கு, ஒரு இதழ் ரூ. 1—25 வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் ''சந்தாதாரர்'' ஆகலாம்.

தனிப்பட்ட 'சந்தாதாரர்கள்' ஒவ்வொரு வரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடு மாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் *[PINCODE]* எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவு செய்து வரிசைப் படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறை யாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற் பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொரு வருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9—60 ஆகின்றது. ஆதலால் வெளி நாட்டுச் சந்தா, ரூ. 20—00-ல் இருந்து ரூ. 25—00 ஆக ஜனவரி 1978 முதல் மாற்றி அமைக்கப் பட்டது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப் போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

கும்பகோணத்திற் கோயில்கள்
—திரு ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

வள்ளலாரும், அவர் கண்ட நெறியும்
—திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்

நான் கண்ட சாதுக்கள்
—டாக்டர் இரத்தினவேல் சுப்பிரமணியம்

திருத்தென்குரங்காடுதுறைக் கல்வெட்டுகள்
—திரு வே. மகாதேவன், எம்.ஏ

சித்திரகூடத்துச் செங்கண்மால்
—பேராசிரியர் ந. சுப்புரெட்டியார், எம்.ஏ., பிஎச்.டி.

அருணகிரிநாதரின் கருணை மொழிகள்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

பேதையும் மேதையுமான சீதை
—திரு புரிசை.சு. முருகேச முதலியார்

சிறந்த ஒரு திருப்பாடல்
—திரு கா.அ.ச. ரகுநாயகன், எம்.ஏ.

திருவண்டப்பகுதி
—டாக்டர் தேவசேனாபதி, எம்.ஏ., பிஎச்.டி.

திருவாசகத்தில் சைவசித்தாந்தம்
—திரு க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி.

தித்திக்கும் தெய்விகத் தீந்தமிழ் —ஆசிரியர்.

நடராஜ சிவம் —திரு சுத்தானந்த பாரதியார்

நால்வர் தமிழ் —ஆசிரியர்.

சிவஞான போதம்
—டாக்டர் ச.கங்காதரன், எம்.ஏ., பிஎச்.டி

சிவஞான சுவாமிகளின் உவமைக் கவித்திறன்
—திரு ந.ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.

இந்து சமய அறநிலைய (ஆட்சி)த் துறை வெளியீடு

கும்பகோணத்திற் கோயில்கள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

தமிழகத்தின் பழம்பெரு நகரங்களுள் ஒன்று, கும்பகோணம். அது சங்ககாலம் முதலே புகழ்பெற்றுச் சிறந்து விளங்கியது என்பது,

> ''அழும்பில் அன்ன அறாஅ யாணர்
> பழம்பல் நெல்லின் பல்குடிப் பரவைப்
> பொங்கடி படிகயம் மண்டிய பசுமிளைத்
> தண்குட வாயில்''

எனவரும் அகநானூற்றுப் பாடல் (44) வரிகளிற் புலனாகின்றது. பல்லவரும் (கி.பி. 300-900), சோழரும் (கி.பி. 900-1300), நாயக்க மன்னர்களும் (1600-1700) ஆகியோர் பலர், கும்பகோண நகரத்தின் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் பெரும்பணி ஆற்றியுள்ளனர்.

''கோயில்கள் நிறைந்தது கும்பகோணம்'' என ஒரு பழமொழியுண்டு. அதன்படி இந் நகரத்திற் பல கோயில்கள் எழிலுற அமைந்து விளங்குகின்றன. இதனைச் சூழ்ந்தும், அணித்தாகவும் பற்பல கோயில்கள் உள்ளன. அவைகளைப் பற்றிய சில குறிப்புக்களை இங்கே காண்போம் :—

சிவபெருமான் கோயில்கள்:

(1) **கும்பேசுவரர் கோயில்** : இது கும்பகோணம் நகரத்தின் நடுவே அமைந்துள்ளது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் இதனைப் பாடியுள்ளனர். இக்கோயிலின் நீளம் 750 அடி; அகலம் 250 அடி; மொத்தப் பரப்பு 1,87,500 சதுர அடி என்பர். இதன் முதன்மையான கோபுரம் 128 அடி உயரமுடையது. அதன்கண் அழகிய பல சிறந்த சிற்பங்கள், நுட்பமாக அமைக்கப் பெற்றுள்ளன. இது நான்கு பிராகாரங்கள் கொண்டது. விநாயகர், முருகர், பிட்சாடனர், சப்தகன்னியர், திருமகள் ஆகியோரின் சந்நிதிகள், பிராகாரங்களில் அமைந்துள்ளன. 'நவராத்திரி மண்டபம்' என்னும் இடத்தில், ஒரே பெருங் கருங்கல்லில் 27 நட்சத்திரங்களும், 12 ராசிகளும் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. கருங்கல்லில் செய்யப்பட்டுள்ள அற்புதமான பழமைமிக்க நாகசுரங்கள் இரண்டு, இக்கோயிலில் உள்ளன. அமுத கும்பமே இலிங்கமாக அமைய, இங்கு இறைவன் எழுந்தருளி இருத்தலின், அமுதகும்பேசர் என்பது இங்குள்ள இறைவனுக்குப் பெயர். எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்கி எல்லா மங்களங்களையும் உண்டாக்கி வருதலின், இங்குள்ள அம்பிகைக்கு மங்களாம்பிகை என்பது பெயர். தலமரம் வன்னி.

(2) **நாகேசுவரர் கோயில்** : இதனைக் 'குடந்தைக்கீழ்க்கோட்டம்' எனத் திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார். இத்தலத்தில் இறைவனை ஆதிசேடன் பூசித்துப் பேறு பெற்றதனால், இங்குள்ள இறைவன் நாகேசுவரர் என வழங்கப்படுகின்றார். இத்தலத்தைச் சூரியனும் வழிபட்டுப் போற்றியுள்ளான். அதன் அடையாளமாக, இப்பொழுதும் சித்திரை மாதம் 11, 12, 13 தேதிகளில் சூரியனின் ஒளி, இவ்விலிங்கத்தின் மீது படிதலைக் காணலாம். இதனைச் சூரியன், இறைவனுக்குச் செய்யும் வழிபாட்டு நிகழ்ச்சியின் அறிகுறியாகப் பெரியோர்கள் கூறுவர். இங்ஙனம் மேற்குறிப்பிட்ட நாட்களில் சூரியனின் ஒளி கருவறையில் உள்ள திருவுருவின்மீது படியும்படி, கோயில் அமைக்கப்பட்டுள்ள முறை மிகவும் வியக்கத்தக்கது. இக்கோயிலில் உள்ள முருகனின் திருமுன்னர் அமைந்துள்ள அர்த்தநாரீசுவரர் வடிவமும், பிட்சாடனர் வடிவமும், கலைத்திறனும் கவினும் மிக்கவை.

(3) **மடந்தைபாகர் கோயில்:** இது நாகேசுவர சுவாமி கோயிலின் உள்ளேயுள்ள, கூத்தப்பெருமானின் கோயிலாகும். இது மிகவும் பழமையானது. ''குடந்தைக்கீழ்க் கோட்டத்து எம் கூத்தனார்'' எனத் திருநாவுக்கரசர் இங்குள்ள கூத்தப்பெருமானைக் குறிப்பிட்டுள்ளார். இது தேர்வடிவத்தில் அமைந்துள்ளது. யானைகள் முயன்று இழுப்பதுபோல, இக்கோயில் சிறந்த முறையில் அமைக்கப் பெற்றுள்ளது. சுவாமி நாகேசுவரர், மடந்தைபாகர்; அம்பிகை பெரியநாயகி.

(4) **காரோணேசர் கோயில் :** இது காசி விசுவநாதர் கோயில் எனவும் வழங்கப்படும். மகாமகத்தீர்த்தத்திற்கு வடகிழக்குப் பகுதியில் இக்கோயில் அமைந்துள்ளது. இங்குள்ள இறைவனே, கங்கை முதலிய நதி தேவதைகளைக் காசியினின்று அழைத்து வந்து, மகாமகத் தீர்த்தத்தில் மூழ்கச் செய்து உய்வித்தருளினார் என்பது தலவரலாறு. இராவணனை அழித்தற் பொருட்டுத் திருமாலுக்குத் தனது ஆற்றலின் ஒரு கூற்றைக் கொடுத்தருளினமையால், காயாரோகணர் என இங்குள்ள இறைவனுக்குப் பெயர் அமைந்தது. காயாரோகணம் என்பதே காரோணம் என வழங்குகின்றது. சுவாமி காசி விசுவநாதர், சோமநாதர்; அம்பிகை விசாலாட்சி, தேனார் மொழியம்மை.

(5) **சோமேசர் கோயில் :** இங்கு இறைவனைச் சோமன் (சந்திரன்) வழிபட்டுப் பேறு பெற்றான். ஆதலின் இது சோமேசர் கோயில் எனப் பெயர் பெற்றது. இங்கு வியாழன் என்னும் பிருகற்பதியும் வழிபட்டு அருள் பெற்றார். ஆதலின் வியாழச் சோமேசர் எனவும் பெயர் வழங்கும். வியாழச் சோமேசர் என்பதனையே, பாமர மக்கள் பொருளறியாமையால் 'ஏழைச் சோமேசர்' என வழங்கி வருகின்றனர். வியாழனது திருவுருவம் இக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ளது. பிரமதேவனின் அமுதகும்பம் வைக்கப் பெற்றிருந்த உறி (சிக்கம்) இறைவன் எய்த அம்பினால் அறுபட்டு விழுந்த இடமாதலின், இக்கோயில் சிக்கேசம் எனவும் வழங்கப்படும்.

(6) **நாளிகேரேசர் கோயில் :** மகாமகக் குளத்திற்குக் கிழக்குப் பக்கத்தில் இக்கோயில் உள்ளது. அபிமுகேசர் கோயில் எனவும் வழங்கும். அமுத கும்பத்தின் வாயின்மேல் வைக்கப் பெற்றிருந்த நாளிகேரம் (தேங்காய்) விழுந்த இடமாதலின், நாளிகேரேசர் கோயில் எனப் பெயர்பெற்றது. கங்கை முதலிய நதி தேவதைகள், மகாமகத் தீர்த்தத்தில் நீராட வந்த பொழுது, அபிமுகமாக (மேற்குத் திசையாக) இறைவன் இங்குக் காட்சி தந்தருளியதனால், அபிமுகேசர் கோயில் எனவும் இது பெயர் பெற்றது. சுவாமி நாளிகேரேசர் (அபிமுகேசர்), அம்பிகை அமுதவல்லி.

(7) **யக்ஞோபவீதேசர் கோயில் :** இது மகாமகக் குளத்திற்கு மேற்கு மூலையில் அமைந்திருக்கின்றது. அமுத குடத்தின்மீது இருந்த யக்ஞஉபவீதம் (பூணல் நூல்) விழுந்த இடத்தில் தோன்றியதனால், இங்கு இறைவன் இப்பெயர் பெற்றான். கௌதமர் இங்குப் பூசித்துப் பேறு பெற்றார். ஆதலின், இக்கோயில் கௌதமேசர் கோயில் என்றும் வழங்கப்பெறும்.

(8) **பாணபுரேசம் :** இறைவன் வேடனின் வடிவத்தில் வந்து அமுதகும்பத்தினை நோக்கித் தமது வில்லிற் பூட்டிய பாணத்தினை எய்திய இடம் ஆதலின் பாணபுராணம் எனப் பெயர் பெற்றது. பாணபுரத்திலுள்ள ஈசர் பாணபுரேசர் என வழங்கப்படுகின்றார். பாணபுரம் என்பது பாணதுறை என்றாகி, அதுவே பின்னர் வாணாதுறை என மருவி வழங்குகின்றது. முன்னொரு காலத்தில் திருவருள் உணர்ச்சியின்றித் திரிபு உணர்ச்சியால் வியாச முனிவர் பொருளல்லாவற்றைப் பொருளென்று கூறிய குற்றம் நீங்கப் பூசித்த தலம் இது.

(9) **மாலதிவனேசர் கோயில் :** மாலதி வனம் (குருக்கத்தி மலர்க்காடு) ஆக இருந்த இடத்தில் அமைந்த கோயில். ஆதலின், இங்குள்ள இறைவன் மாலதிவனேசர் எனப் பெயர் பெற்றார். இக்காலத்தில் இது, 'கம்பட்ட விசுவநாதர் ஆலயம்' என வழங்குகிறது. தஞ்சை அரசர்களின் ஆட்சிகாலத்தில் பொற்காசுகள் அடிக்கும் கம்பட்டம் (Mint) இவ்விடத்தில் அமைந்திருந்தது. ஆதலின் இக்கோயிலிலுள்ள விசுவநாதர், கம்பட்ட விசுவநாதர் என வழங்கப்படுவாராயினர். இதனுடைய சின்னங்களை இப்போதும், இக்கோயிலின் வடகிழக்கு மூலையில் காணலாம்.

(10) **கயிலாயநாதர் கோயில் :** காவிரி யாற்றின் வடகரையில் உள்ள மேலைக்காவிரியில் இக்கோயில் அமைந்துள்ளது. பிப்பிலாதர் என்ற முனிவருக்கு இறைவன் இங்குக் கயிலாயக் காட்சியைக் காணும் பேற்றை அருள் புரிந்ததனால், இங்குள்ள இறைவன் கயிலாய நாதர் என வழங்கப்படுகின்றார்.

திருமால் கோயில்கள் :

மேற்குறித்த 10 தலங்களும், கும்பகோணத்திலுள்ள பழம்பெரும் சிவாலயங்களாகும். இவைகளேயன்றி, இங்குப் பல திருமால் கோயில்களுமுள்ளன. அவற்றுள் மிகவும் முதன்மையானவை பின்வருமாறு:

(1) **சாரங்கபாணி கோயில் :** கும்பகோணத்திலுள்ள திருமால் கோயில்களுள், மிகவும் பழமையும் பெருமையும் வாய்ந்தது இக்கோயிலேயாகும்.

''ஆரா அமுதே அடியேன் உடலம்
நின்பால் அன்பாலே
நீராய் அலைந்து கரைய உருக்கு
கின்ற நெடுமாலே....''

என நம்மாழ்வார் புகழ்ந்து பாடியதனால், இங்குள்ள இறைவனுக்கு ஆராவமுதன் எனப் பெயர் வழங்கப்படும். ஆதலின் இதனை ''ஆராவமுதன்தளி'' எனவும் கூறுவர். இக்கோயில் பல்லவர் காலத்தது. நாயக்க மன்னர்கள் இதற்குத் திருப்பணிகள் செய்தனர். இதன் கோபுரம் 146 அடி உயரமுள்ளது, 12 நிலைகளை உடையது. திருவரங்கம் கோயிலைப் போல, இதுவும் காவிரி, அரிசில் என்னும் இரு பெரும் ஆறுகளுக்கிடையே அமைந்துள்ளது. இக்கோயிலுக்குத் தட்சிணாயன வாயில் என்றும், உத்தராயண வாயில் என்றும், இரண்டு வாயில்கள் உள்ளன. ஏம மகரிஷிக்கு மகளாக அவதரித்த மகாலட்சுமியைச் சாரங்கபாணிப் பெருமாள், இங்கு மணந்துகொண்டார். ஆதலின் கல்யாணபுரம் என்றும் இத்தலத்திற்கு ஒரு பெயர் உண்டு. சூரியனும் இங்கு வழிபட்டு அருள் பெற்றான். இக்கோயிலின் நடுப் பகுதியானது, குதிரைகளும் யானைகளும் பூட்டிய

சக்கரங்களையுடைய ஒரு தேர்போல, அமைந்துள்ளது. பெரியாழ்வார், திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், நம்மாழ்வார் ஆகியவர்கள், இக்கோயிலை மங்களாசாசனம் செய்திருக்கின்றனர். இக்கோயிலில் உள்ள பாதாள ஸ்ரீநிவாசர் சந்நிதி மிகவும் சிறப்புடையது. திருப்பதியில் உள்ள வேங்கடசுவரப் பெருமாளே இங்கு எழுந்தருளி வந்திருப்பதாக ஐதிகம்.

(2) **சக்கரபாணி கோயில்** *:* இது சுதரிசனர்தளி எனவும் வழங்கப் பெறும். ஒரு காலத்தில் சலந்தரன் என்னும் அசுரனைக் கொன்ற சக்கராயுதம், காவிரியாற்றில் புதைந்திருந்தது. அதனை எம்பெருமான் எடுத்துத் தமது திருக்கரத்தில் தரித்துக் கொண்ட தலம் இது. சூரியனது செருக்கை அடக்குவதற்காகப் பெருமாள் சக்கரவடிவம் கொண்டு இங்கு எழுந்தருளியுள்ளார் என்பது வரலாறு.

(3) **வரதராசப்பெருமாள் கோயில்***:* காவிரிப் புதுப்பாலத்தின் வடகோடியில் மேற்கு முகமாக விளங்கும் தலம். மதங்க முனிவர் வேண்டிக் கொண்டபடி காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் இங்கு வந்து தங்கிக் கோயில்கொண்டுள்ளார் எனப் பெரியோர்கள் கூறுவர்.

(4) **இராமசாமி கோயில்** *:* கும்பகோணத்தின் மேற்குப் பகுதியில், ஐயன்கடை எனப்படும் கடைத்தெருவின் தெற்கு மூலையில், இஃது அமைந்திருக்கின்றது. இராமாயண வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட அழகிய பல சிற்பங்கள், இக்கோயிலில் நிறைந்துள்ளன. தஞ்சாவூரை ஆண்ட மன்னர்களான அச்சுதப்ப நாயக்கர் (1572-1614), இரகுநாத நாயக்கர் (1614-1640) என்பவர்களின் காலத்தில் இக் கோயில் கட்டப்பெற்றது.

இவைகளேயன்றிக் காளத்தீசுவரர், வீரபத்திரர், உச்சிப்பிள்ளையார், குமாரர், பழனியாண்டவர், கோபாலர், பிரமன் முதலிய மற்றும் பலருக்குரிய கோயில்களும் கும்பகோணத்தில் உள்ளன.

பஞ்ச குரோசத் தலங்கள்:

கும்பகோணத்தைச் சுற்றிப் பற்பல கோயில்கள் உள்ளன. அவைகளுள் மிகவும் முக்கியமானவை, ''பஞ்சக்குரோசத் தலங்கள்' என்பனவாகும். குரோசம் என்பது கூப்பிடு தூரம்; சுமார் 2 கல் என்பர். கும்பகோணத்திற்கு அருகே அதனைச் சார்ந்து ஒரு குரோசம் தொலைவிற்குள் உள்ள 5 கோயில்களே, 'பஞ்ச குரோசத் தலங்கள்' எனப்படும். அவை வருமாறு:—

(1) **திருவிடை மருதூர்** *:* கும்பகோணத்திற்கு நேர் கிழக்கே 5 கல் தொலைவில் உள்ளது. தேவர்களும், விபண்ட முனிவரும் பூசித்தது. வரகுண பாண்டியர், பட்டினத்தார், பத்திரகிரியார் முதலியோர் வழிபட்டது. சுவாமி மருதவாணர், மகாலிங்கம்; அம்பிகை நன்முலை நாயகி.

(2) **திருநாகேச்சுரம்** *:* கும்பகோணத்திற்குத் தென்கிழக்கே 2.5 கல் தொலைவில் உள்ளது. ஆதிசேடன் ஆகிய நாகம் பூசித்தது. பெரியபுராணம் பாடிய சேக்கிழார் பெருமான், பெரிதும் விரும்பிப் போற்றி வாழ்ந்திருந்த தலம். இறைவன் நாகேசுவரர்; இறைவி குன்ற முலை நாயகி.

(3) **தாராசுரம்** *:* கும்பகோணத்திற்குத் தென்மேற்கில் உள்ளது. இரண்டாம் இராசராசன் அமைத்தது(1146-1173). பெரியபுராண வரலாறுகள் இங்கு அழகிய சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள 'இராஜ கம்பீரன் திருமண்டபம்' கண்டு மகிழத்தக்கது. தாரன் என்னும் அசுரன் பூசித்ததால் தாராசுரம் எனப் பெயர் அமைந்தது என்பர். ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணி பாடியபோது, அவருக்குத் தீபம் ஏந்தி ஒளிகாட்டிய காளிதேவியின் சந்நிதி, இக்கோயிலில் உள்ளது. இங்குள்ள அன்னபூரணி சிலை, மிகவும் அழகு வாய்ந்தது.

(4) **சுவாமிமலை** *:* இது கும்பகோணத்திற்கு மேற்கே 2 கல் தொலைவில் உள்ளது. முருகனின் ஆறு படைவீடுகளுள், திருவேரகம் என்பது இதுவே என்பர். சிவபெருமானுக்கு முருகன் பிரணவ உபதேசம் புரிந்த தலம். 60 படிகள் கொண்ட அழகிய செய்குன்றின் மீது, சுவாமிநாதன் ஆகிய முருகன் எழுந்தருளியுள்ளார். கோயிலின் கீழ்ப்பகுதியில் மதுரைச் சுந்தரேசுவரரும், மீனாட்சியம்மையும் எழுந்தருளியுள்ளனர்.

சிறந்த பல தீர்த்தங்கள்:

கும்பகோணம் ஒரு சிறந்த பெருநகரம் மட்டுமேயன்றி, மூர்த்தி தலம் தீர்த்தம் என்னும் மூன்று சிறப்புக்களும் ஒருங்கே அமைந்த புண்ணிய க்ஷேத்திரமும் ஆகும். இங்குப் புகழ் பெற்ற பழமையான தீர்த்தங்கள் பதினான்கு உள்ளன.

(1) மகாமகத் தீர்த்தம் : இது நகருக்கு நடுவே 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இத் தீர்த்தத்தின் கரையில் நாற்றிசைகளிலுமாக 16 மண்டபங்கள், அல்லது சிறு கோயில்கள் அமைந்துள்ளன. அவற்றில் முறையே, 1. பிரம்மதீர்த்த ஈசுவரர், 2. முகுந்த ஈசுவரர், 3. தன ஈசுவரர், 4. இடப ஈசுவரர், 5. பாண ஈசுவரர், 6. கோண ஈசுவரர் 7. பக்திகேசுவரர். 8. பைரவ ஈசுவரர், 9. அகத்தீசுவரர், 10. வியாச ஈசுவரர், 11. உமா பாகேசுவரர், 12. நிருதி ஈசுவரர், 13. பிரம்மேசுவரர், 14. கங்காதரேசுவரர், 15. முக்த தீர்த்தேசுவரர், 16. க்ஷேத்திரபாலேசுவரர் என்பவர்கள் எழுந்தருளியுள்ளனர். இத்தலத்திற்குப் பெருஞ் சிறப்பையும் புனிதத்தையும் உண்டாக்கிக் கொண்டு திகழ்வது இதுவேயாகும். இதற்குப் பாபநாச தீர்த்தம், கன்னி தீர்த்தம் எனப் பல பெயர்கள் உண்டு. கங்கை முதலிய புனித நதி தேவதைகள் பலவும், மகாமக நாளில் இதன்கண் நீராடிப் புனிதம் பெறுகின்றன என்பது வரலாறு.

குளத்தின் கிழக்குக் கரையில் நருமதையும் சரசுவதியும், தென்கிழக்கில் காவிரியும், தெற்கில் குமரியும், தென்மேற்கில் வேதவதியும், மேற்குக்கரையில் சரயுநதியும், வடமேற்கில் கங்கையும், வடகரையில் யமுனையும், வடகிழக்கில் கோதாவரியும் ஆகிய 9 புண்ணிய நதிகள் அமைந்திருக்கின்றன. கங்கை நதிக்கு எதிரில் கும்பேசுவரர் வெள்விடையின் மீது பொன் மண்டபத்தில் எழுந்தருளியிருக்க, பிரம தேவரும் நீராடினார். ஆதலின் பிரமதீர்த்தமும் இதன் வடகரையில் உள்ளது.

(2) வருண தீர்த்தம் : வருணதேவன் அகழ்ந்தது. தூமகேது நீராடி வரம்பெற்றது. இஃது இப்போது கும்பேசர் பூங்காவாக மாற்றப் பெற்றுள்ளது.

(3) பொற்றாமரைத் தீர்த்தம்: இது சாரங்கபாணி சுவாமி கோயிலில் உள்ளது. ஏமபுஷ்கரிணி எனவும் வழங்கும். 361 அடி நீளமும், 285 அடி அகலமும் உடையது. இலக்குமி தீர்த்தம், அமுதவாணி முதலிய பல பெயர்கள் இதற்கு உண்டு.

(4) சந்திர தீர்த்தம் : வியாழச் சோமேசர் கோயிலின் எதிரில் இருப்பது. சந்திரனால் அமைக்கப் பெற்றது.

(5) கௌதம தீர்த்தம்: கௌதமேசுவரர் கோயிலுக்குப் பக்கத்தில் அமைந்திருப்பது. கௌதம முனிவர் நீராடிப் பேறு பெற்றது.

(6) சூரியதீர்த்தம்: சூரியன் நீராடி அருள்பெற்ற தலம். நாகேசுவரர் கோயிலின் தெற்குக் கோபுர வாயிலுக்கு எதிரில் உள்ளது.

(7) வராக தீர்த்தம் : வராகப் பெருமாள் கோயிலுக்கு அருகே, கும்பேசுரர் திருமஞ்சன வீதியில் உள்ளது. இதன் கரையில் 'கரும்பாயிரம் கொண்ட விநாயகர்' கோயில் கொண்டுள்ளார்.

(8) காசிப தீர்த்தம் : காசிப முனிவர் அருள்பெற்றது. இது காவிரியில் உள்ள ஒரு படித்துறை. இக்காலத்தில் 'கும்பேசர் திருமஞ்சனப் படித்துறை' என வழங்கி வருகின்றது.

(9) சக்கர தீர்த்தம்: சலந்தரன் என்னும் அசுரனைக் கொன்ற சக்கரம் அசுரர்களாற் கவர்ந்து கொள்ளப்படாமல் இருப்பதற்காகக், காவிரியாற்றில் பாதுகாப்பாக மறைத்து வைக்கப் பெற்றிருந்த இடம். இறந்தவர்களின் என்பை இங்குக் கொணர்ந்து விடுதல், ஒரு சிறப்பாகக் கருதப் பெறுகின்றது.

(10) பகவத் தீர்த்தம் : பகவன் என்னும் அந்தணன், கங்கையில் இடுவதற்காகக்கொண்டு சென்ற என்பு, காவிரியாற்றில் இவ்விடத்தில் பூவாக மாறியது என்பது வரலாறு.

(11) மதங்க தீர்த்தம் : காவிரிப் புதுப் பாலத்தின் அருகில் உள்ள ஒரு படித்துறை. மதங்க முனிவர் நீராடி அருள் பெற்றது.

(12) மங்கள கூபம்: கும்பேசர் கோயிலுக்கு வடகிழக்கே, முருகப்பெருமானின் பொருட்டு, மங்களாம்பிகை தனது நகத்தால் உண்டாக்கிய ஒரு கிணறு. இப்போது திருக்குளமாக மாற்றி அமைக்கப்பட்டு விளங்குகின்றது.

(13) குர தீர்த்தம்: கும்பேசர் கோயிலில் மங்களாம்பிகையின் சந்நிதிக்கு எதிரேயுள்ள கிணறு. காமதேனுவின் குளம்பால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம். (குரம்-குளம்பு). இதன் கரையில் வெண்ணெய்ப் பிள்ளையார் கோயில் உள்ளது.

(14) அசுவத்த தீர்த்தம் : நாகேசுவரர் கோயிலில் உள்ளது. ஆதிசேடன் நீராடி அருள் பெற்றதனால், நாகதீர்த்தம் எனவும் வழங்கும். (சிங்கக் கிணறு)

முடிவுரை:

கும்பகோணத்தின் பெருமைக்குக் காரணங்கள் பல. அவற்றுள், ஆசாரிய பீடங்கள் பல அங்கு அமைந்திருப்பதும், ஒரு காரணமாகும். இங்குதான், புகழ்பெற்ற காஞ்சி காமகோடி பீடத்தின் தலைமை நிலையம் அமைந்துள்ளது. வீரசைவப் பெருமக்கள் போற்றும் குருபீடமாய் வீரசிங்காதனப்பீடம் என்னும் ஸ்ரீசாரங்க தேசிகேந்திர சுவாமிகள் அவர்களின் திருமடம், இங்கேயே விளங்குகின்றது. இத் திருமடத்தினை ஒட்டக்கூத்தரும், அருணகிரிநாதரும் புகழ்ந்து போற்றியுள்ளனர். மற்றும் வைஷ்ணவப் பெருஞ் சான்றோர்களான திருக்குடந்தை தேசிகன், திருக்குடந்தை அழகிய சிங்கர், திருக்குடந்தை ஆண்டவன் ஆகியோர் அவதரித்தருளிய திருத்தலமும் இதுவே! மூர்க்கநாயனார், கவிகாளமேகம், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை முதலிய பெரியோர்கள் பலர் இத்தலத்தில் வாழ்ந்துள்ளனர்!

இத்தகைய பல பெரும் சிறப்புக்களை உடைய கும்பகோணத் தலத்தினை, மகாமக விழாவினை ஒட்டி, நாம் அனைவரும் சென்று கண்டு தரிசித்துப் போற்றி உய்வோமாக!

R. RAJU,

வள்ளலாரும், அவர் கண்ட நெறியும்

''முத்தமிழ்க் காவலர்''
திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், திருச்சி

(1) வள்ளலார் யார்?

உலகிலுள்ள மதங்கள் நூற்றுக்கு மேற்பட்டவை. அவற்றுள் மிகப் பெரிய மதங்கள் ஒன்பது. அவைகள், இந்துமதம், பௌத்த மதம், சமணமதம், யூதமதம் கிறிஸ்தவமதம், இசுலாமியமதம், கன்பூசியமதம், டாவோமதம், ஷிண்டோமதம் என்பனவாகும். இவைகள் அனைத்தும் நாம் வாழ்கின்ற இதே ஆசியாக் கண்டத்தில் தோன்றியவை. இதனால் ஆசியாக் கண்டத்தினைக் குறிப்பிடும் போதெல்லாம் ''ஞானம் பிறந்த கண்டம்'' என்று அறிஞர்கள் கூறுவது உண்டு. மேற்குறித்த ஒன்பது மதங்களில் இந்துமதம் பௌத்தமதம் சமண மதம் கிறிஸ்தவமதம் இசுலாமியமதம் பார்ஸி மதம் என்னும் ஆறுமதங்கள், நமது இந்திய நாட்டில் பரவி நிலைபெற்று வளர்ந்து வருகின்றன. நம் தமிழ்நாட்டில் சிறப்பாகச்சைவம் வைணவம் என்னும் பழமையான சமயங்களுடன், சன்மார்க்கம் என்னும் சமயம் சிறப்பாகத் தோன்றித் தழைத்து வளர்ந்து வருகின்றது. சன்மார்க்கம் என்னும் மதம், திருமூலர்போன்ற பழந்தமிழ்ச் சான்றோர்களால் முன்னரே வளர்க்கப் பெற்று வந்திருப்பினும், அதனை அண்மைக்காலத்தில், சிறப்பாக மக்களிடையில் பெரிதும் அறிவுறுத்தி, வலியுறுத்திப் பரப்பி வளர்த்தருளியவர், இராமலிங்க வள்ளலாரே யாவர்.

(2) வள்ளலார் பெருமான்:

வள்ளல் என்னும் சொல் மிகப் பழைய ஒரு தமிழ்ச் சொல். சங்ககால இலக்கியங்களில் பாரி பேகன் காரி ஓரி அதிகமான் ஆய்வேள் நள்ளி என்னும் வள்ளல்கள் எழுவரைப் பற்றிய குறிப்புக்களைக் காண்கின்றோம். புரவலர்களுக்கும் இரவலர்களுக்கும் பெரும் பொருளை வாரி வழங்கிப் புரந்து போற்றிய மன்னர்களையும் செல்வர்களையும் வள்ளல்கள் எனப் புகழ்ந்து கூறுவது மரபாக இருந்து வருகின்றது. நமது இராமலிங்க அடிகளார் மக்களுக்கு மட்டுமேயன்றி, மன்னுயிர்களுக்கெல்லாம் தம் இன்னருளை வாரி வழங்கி அருள்புரிந்த பெருமைக்குரியவர். ஆதலின், அவருக்குவள்ளலார் என்னும் சிறப்புப் பெயர் வாய்ப்பதாயிற்று. இக்காலத்தில் வள்ளலார் என்றால், அது நமது வடலூர் இராமலிங்க அடிகளார் ஒருவரையே குறிக்கும் வகையில், காரண இடுகுறிச் சிறப்புப் பெயராக அமைந்துவிட்டது. அழிந்து போகும் பொருட்செல்வத்தை வழங்கியுதவும் செல்வர்களைக் காட்டிலும் அழிவில்லாத அருட் பெருஞ் செல்வத்தை வாரி வழங்கியருளிய மாட்சிமை நலத்தால், இராமலிங்கரை வள்ளலார் என்று போற்றுவது பெரிதும் பொருந்துவதேயாகும்.

(3) வரலாற்றுக் குறிப்புக்கள்:

இராமலிங்க வள்ளலார் சிதம்பரத்திற்கு வடக்கே ஒன்பது கல் தொலைவிலுள்ள மருதூர் என்னும் சிற்றூரில், இராமையாபிள்ளை என்னும் தந்தைக்கும், சின்னம்மை என்னும் தாயாருக்கும் 5-10-1823-ஆம் ஆண்டில் மைந்தராகத் தோன்றியருளினார். இவருக்குச் சபாபதிபிள்ளை பரசுராமபிள்ளை என்னும் இரு சகோதரரும், உண்ணாமுலைஅம்மை, சுந்தரம் அம்மை என்னும் இரு சகோதரியரும் இருந்தனர். இவர் தோன்றியருளிய எட்டு மாதங்களில் இவர்தம் தந்தையார் காலமாயினார். ஆதலின் இவர்தம் தாயாராகிய சின்னம்மையார், மருதூரைவிட்டுத் தான் பிறந்த பொன்னேரிக்குச் சென்று, தம் சகோதரருடன் சில காலம் வாழ்ந்தார். பின்னர் சிலகாலம் கழித்துச் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். வள்ளலாரின் மூத்த தமையனார், காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார் அவர்களிடம் கல்வி பயின்று, புராணச் சொற்பொழிவுகள் புரிவதில் வல்லவராய், குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். தம்பி இராமலிங்கத்திற்குக் கல்வி பயிற்றுவிக்கத் தமையனார் சபாபதிப்பிள்ளைப் பெரிதும் முயன்றும், இராமலிங்கர் இறையருள் நாட்டத்திலேயே ஈடுபட்டிருந்ததனால், சபாபதியாரின் முயற்சி பயன்பெறவில்லை. அந்நிலையில் அவரைச் சபாபதியார் சிலசமயம் சினந்து ஒறுத்து வந்தார். எனினும் அண்ணியார் பார்வதியம்மையார், இராமலிங்கர்பால் தாயினும் சாலப் பரிந்து அன்புகாட்டி உணவூட்டிப் போற்றி வந்தார். அண்ணியாரின் வேண்டுகோளுக்கு இணங்கி இராமலிங்கர் தாம் வசித்து வந்த இல்லத்தின் மேல்மாடியில்இருந்து திருத்தணிகை முருகனை வழிபட்டு, அப்பெருமானின் திருவருளால், கல்விநலம் அனைத்தும் கைவரப் பெற்றார்.

(4) வாழ்க்கைப் பகுதிகள்:

இராமலிங்கரின் வாழ்க்கையினைப் பல பகுதிகளாகப் பிரிக்கலாம். 1825 முதல் 1858 வரையில் சென்னையிலும், 1858 முதல் 1867 வரையில் கருங்குழியிலும், 1867 முதல் 1870 வரையில் வடலூரிலும், 1870 முதல் 1874

வரையில் மேட்டுக்குப்பத்திலும் முறையே வாழ்ந்திருந்தார். கந்தகோட்டத்தில் ஒரு வயது முதல் பன்னிரண்டு வயதுவரை. திருவொற்றியூரில் 12 முதல் 35 வயது வரை. சிதம்பரத்தில் 35 முதல் 44 வயது வரை. வடலூரில் 44 முதல் 47 வயது வரை. சித்தி விளாகத்தில் 47 முதல் 51 வயதுவரை வள்ளலாரின் வாழ்க்கை அமைந்தது.

(5) ஆசிரியர்கள்:

இராமலிங்க வள்ளலாருக்கு இளமைக் காலத்தில் ஆசிரியர்களாக விளங்கியவர்கள் இருவர் எனலாம். அவர்களுள் ஒருவர் காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார். மற்றொருவர் வள்ளலாரின் தமையனார் திரு. சபாபதி பிள்ளை. இராமலிங்கர் இவர்கள்பால் கற்றது ஒரு சிறிதே. அவர் கற்ற கல்வியெல்லாம் அவருக்கு இறைவனின் திருவருளால் அமைந்ததேயாகும்.

(6) சமகாலத்து உடன்வாழ்ந்தோர்:

திருவாவடுதுறை ஆதீனம்—திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள், யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலர், தொழுவூர் வேலாயுத முதலியார், பூவை அட்டாவதானம் கலியாண சுந்தர யதீந்திரர், மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியார், புரசை அட்டாவதானம் சபாபதி முதலியார், மாயூரம் முன்சீப் வேதநாயகம்பிள்ளை, மயிலை மகாவித்துவான் தணிகாசல முதலியார், நரசிங்கபுரம் வீராசாமி முதலியார், புலவர் புராணம் பாடிய திருப்புகழ்த் தண்டபாணி சுவாமிகள், கோடகநல்லூர்ச் சுந்தரசுவாமிகள், முத்துகிருஷ்ண பிரம்மம், திருச்சிற்றம்பல ஞானிகள், ஆனந்தநாத சண்முக சரணாலய சுவாமிகள், மதுரைஆதீன குருமகா சந்நிதானம் ஆறுமுகசுவாமிகள், மதுரை ஆதீனம் சிதம்பர சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள், தருமபுரஆதீனம் வேளூர்க் கட்டளை விசாரணை உலகநாதத் தம்பிரான் சுவாமிகள் முதலியவர்கள் ஆவர்.

(7) மாணவர்கள்:

இராமலிங்க வள்ளலாரின் மாணவர்களாக மிகவும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் மூவர். உபயகலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேலாயுத முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார், பொன்னேரி சுந்தரம் பிள்ளை ஆகியோராவர். தொழுவூர் வேலாயுத முதலியார் சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக விளங்கினார். திருவருட்பாவைப் பதிப்பித்தார். ''திருவருட்பா வரலாறு'' என்னும் நூலைப் பாடினார். பல நூல்களை இயற்றினார். இறுக்கம் இரத்தின முதலியார் பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தார். சுந்தரம்பிள்ளை புராணச் சொற்பொழிவுகள் ஆற்றுவதில் வல்லவராகிப் புராணிகர் பொன்னேரி சுந்தரம்பிள்ளை என வழங்கப்பெற்றார்.

(8) பண்புநலங்கள்:

இராமலிங்க வள்ளலார் பல்வேறு நிலைகளிலும், துறைகளிலும் சிறப்புற்று விளங்கினார். துறவியாக, ஞானியாக, புலவராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, எழுத்தாளராக, நூலாசிரியராக, உரையாசிரியராக, ஞானாசிரியராக, போதகாசிரியராக, மருத்துவராக, சித்தராக இங்ஙனமெல்லாம் பலவேறு வகைகளில் இராமலிங்கர் விளங்கியிருந்தார். இராமலிங்கர் காவியுடை அணியவில்லையாயினும் உலகப் பற்றுக்களிலிருந்து அறவே விடுபட்டிருந்ததனால் துறவியாகத் திகழ்ந்தார். எல்லாக் கலைஞானங்களும் கைவரப்பெற்று, சிவஞானம் மேலோங்கித் திகழ்ந்திருந்ததனால் அவரை உலகம் தலைசிறந்த ஞானிகளில் ஒருவராகப் போற்றி மகிழ்ந்து வருகின்றது. மனுமுறைகண்டவாசகம், சீவகாருண்ய ஒழுக்கம் என்னும் நூல்களை இயற்றியதனால், அடிகளார் மிகச் சிறந்த புலவராகவும், நூலாசிரியராகவும் எழுத்தாளராகவும் கொண்டாடப் பெற்றார். ஒழிவிலொடுக்கம் தொண்டமண்டலசகதம் சின்மயதீபிகை ஆகிய நூல்களைப் பதிப்பித்ததனால், ஒரு சிறந்த பதிப்பாசிரியராக விளங்கியமை தெரிகின்றது. ''வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்'' என்னும் ஒழிவிலொடுக்கச் செய்யுளுக்கு, அடிகளார் வரைந்துள்ள அரிய இனிய விரிவுரை, அடிகளார் ஒரு ஒப்புயர்வற்ற உரையாசிரியர் என்பதனைப் புலப்படுத்துகின்றது. தம்முடைய மாணாக்கர்களுக்கு அவர் போதகாசிரியராகவும் ஞானாசிரியராகவும் இருந்தமை, யாவரும் அறிந்தது. தம்மை வந்து அடைந்த அன்பர்களின் நோய்கள் பலவற்றை நீக்கியதனால் அடிகளார் ஒரு சிறந்த மருத்துவராகவும், சித்தராகவும் பொலிந்தருளினார். தமக்கென ஒரு தனிக் கொள்கை ஒருநெறி ஒருகொடி ஒருசபை ஒரு மந்திரம் ஒருவழிபாட்டுமுறை என்னும் ஆறினையும் அடிகளார் வகுத்தருளினார். அவர்தம் தனித்தன்மையினையும், பெருஞ் சிறப்பினையும் இவைகள் ஆறும் விளக்குகின்றன எனலாம்.

(9) தொண்டுகள்:

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளலார் பல செயற்கரும் தொண்டுகளைச் சமுதாய நலங்கருதிச் செய்தருளினார். திருக்குறள் வகுப்பு, முதியோர் கல்வி, தமிழ் வடமொழி ஆங்கிலம் என்னும் மும்மொழிகளையும் கற்பிக்கும் பாடசாலை ஆகியவற்றை நடத்தியதுடன், பிறரை நடத்துமாறும் பணித்தருளினார். கல்வெட்டு ஆராய்ச்சியிலும் அடிகளார் ஈடுபட்டிருந்தார்.

(10) செயற்கரும் செயல்கள்:

நாம் எண்ணங்களைக் கோடிக்கணக்கில் எண்ணுகின்றோம். எழுத்துக்களை இலட்சக் கணக்கில் எழுதுகின்றோம். கொள்கைகளை ஆயிரக்கணக்கில் பேசுகின்றோம். குறிக்கோள்களை நூற்றுக்கணக்கில் கொட்டுகின்றோம். திட்டங்களை அளவில்லாமல் வகுக்கின்றோம்.

ஆனால் செயலில் ஒன்றையாவது உருவாகச் செய்யும் ஆற்றல் நமக்கில்லை. அதனாலேயே திருவள்ளுவர் ''மக்கள் அடுத்த நிமிடம் தாம் உயிர் வாழ்வோமா என்பதை அறியமாட்டார்கள். ஆனால் அவர்கள் எண்ணங்களைப் பல கோடிகளாக எண்ணுகின்றார்கள்'' என்னும் கருத்தமைய,

> ''ஒரு பொழுதும் வாழ்வ தறியார் கருதுப
> கோடியும் அல்ல பல''

என்னும் கருத்தமைய அருளிச் செய்திருக்கின்றார். இராமலிங்க வள்ளலார் நம்மைப்போல அல்லாமல் பலப்பல செயல்களை, அதுவும் பலப்பல செயற்கரும் செயல்களைச் செய்து முடித்துள்ளார்.

சத்திய தருமச்சாலை, சத்திய ஞானசபை, சத்தியஞான சமரச சன்மார்க்க சங்கம் என்னும் இம்மூன்றையும் தோற்றுவித்து அவைகளைச் செவ்வையாக நடத்தி, என்றும் நின்று நிலவச் செய்திருப்பது வள்ளலார் செய்தருளிய செயல்களாகும். ''எவர் பெரியவர்'' என்ற வினாவிற்குத் திருவள்ளுவர் கூறுகின்ற விடை, பணத்தர் அல்ல-நிலத்தர் அல்ல-எழுத்தர் அல்ல-பேச்சர் அல்ல-வயது முதிர்ந்த கிழவரும் அல்ல-பிறராலே செய்தற்கரிய நற்பெருஞ் செயல்களைச் செய்பவரே பெரியவர் என்பதாகும். இதனைச் 'செயற்கரிய செய்வர் பெரியர்' என்ற குறளால் அறிய முடிகின்றது. அத்தகைய பெரியவர் வள்ளலார்.

(11) சித்தமருத்துவர்:

சித்தர் வேறு, முத்தர் வேறு. சித்தி அடைந்தவர் சித்தர், முத்தி அடைந்தவர் முத்தர். ''சித்தி என்பது நிலைசேர்ந்த அனுபவம், முத்தி என்பது நிலை முன்னுறு சாதனம்'' என வள்ளலாரே கூறியுள்ளார். வள்ளலார் சித்த மருத்துவராகவும் சித்தராகவும் இருந்து உடற்பிணிக்கும், மனப்பிணிக்கும் மருந்து கூறியவர். ''ஞானமருந்து இம்மருந்து சுகம் நல்கும் வைத்திய நாத மருந்து, சுத்த சன்மார்க்கமருந்து-அருட்சோதி மலையில் துலங்கும் மருந்து சித்துருவான மருந்து,எனைச் சித்தெலாம் செயல் செய்வித்த மருந்து''என்ற அவருடைய பாடல், இவற்றை மெய்ப்பிக்கிறது.

பெற்ற உடம்பு சாகடிப்பதற்காக அல்ல என்பது, சித்தர்கள் கண்ட முடிவு. இதற்குச் சாகாக் கலை என்று பெயர்.

> ''நந்தவனத்திலோர் ஆண்டி—அவன்
> நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
> கொண்டு வந்தான்ஒரு தோண்டி அதைக்
> கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி''

என்பது ஒரு சாகாக்கலைப் பாடல். நந்தவனத்தில் ஓர் ஆண்டி-உலகத்தில் ஒரு ஆன்மா. நாலாறு மாதமாய்-நாலும் ஆறும் பத்துமாதமாய்த் தாய் வயிற்றிலிருந்து குயவனைவேண்டி-பிரம்மாவை வேண்டி. கொண்டு வந்தான் ஒரு தோண்டி என்பது,இந்த உடம்பு. இதைப் பாதுகாக்கத் தெரியாமல் உலக இன்ப துன்பங்களில் உழன்று, கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி-சாகடித்தாண்டி என்பது இதன் பொருள். இந்தக் கலையெல்லாம் கற்றவர் நம் வள்ளலார். பொன் செய்யும் ஆற்றலையும் படைத்தவர்.

அவர் உடம்பிலும் முகத்தைத் தவிரப் பல பகுதிகள் பொன்மயமாய் இருந்து ஒளி வீசின என்பதை அவர் காலத்தில் வாழ்ந்தவர் கண்டுள்ளனர். இது அவர் முகத்தைத் தவிர மற்ற பாகங்களை மூடி மறைத்திருந்ததாலும் தெரிய வருகிறது. இவற்றை ''பொன் வடிவம் தனையடைந்து களித்தேன்'' என்ற அவரது வாக்கும் ''பொன்னுடம்பு எனக்குப் பொருந்திடும் பொருட்டு என்னுளம் கலந்த என் தனியன்பே'' என்று அவர் இறைவனை நினைந்து உருகிப் பாடிய பாடலும் மெய்ப்பிக்கின்றன.

(12) வியப்புக்குரியவை:

இராமலிங்க வள்ளலாரின் வாழ்க்கையில், நம் வியப்புக்குரியவையாக நிகழ்ந்த செயல்கள் பல. ஓராண்டுப் பருவத்திலேயே தில்லையில் திரை தூக்கத் தரிசித்தது. திண்ணையிலிருந்து புரண்டு கீழே விழுந்தபோது விழாமல் தடுத்து இறைவி காப்பாற்றியது. ஐந்து வயதில் பள்ளிக்குச் சென்றும் படிப்பில் கவனமில்லாது இறை நினைவே கொண்டிருந்தது. ஒன்பது வயதில் அவரது ஆசிரியர் ''ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம், ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம், மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம். வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்'' என உலக நீதியைச் சொல்லச் சொல்லியும் இவர் சொல்லாதிருந்தார். ''ஏன் சொல்லவில்லை?'' என்று ஆசிரியர் கேட்டபோது, ''இறைவனிடத்திலே வேண்டாம், வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருப்பானேன், ஏதாவது வேண்டும் வேண்டும்'' என்று எதை வேண்டலாம் என எண்ணிக் கொண்டிருந்தேன் என்றது.

''நீ வேண்டுமானால், வேண்டும், வேண்டும் எனப் பாடு'' என்று ஆசிரியர் கட்டளையிட, உடனே ''ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்'' என்ற பாடலைப் பாடியது. பட்டினியோடு திண்ணையில்படுத்து உறங்கியபோது அண்ணியார் வடிவில் வந்து அம்மை அவருக்கு உணவளித்தது. சிறு வயதிலேயே துறவுபூண்டு, மீண்டது. இளமையில் அண்ணன் சொற்பொழிவுக்கு ஏடு படிக்கத் தொடங்கி, அவர் ஒப்புக் கொண்ட சொற்பொழிவுக்கு நோய்வாய்ப்பட்டுப் போக முடியாதிருந்தபோது, தான் சென்று அச்சொற்பொழிவை நிகழ்த்தி மக்களின் பாராட்டைப் பெற்றது. பிறகு ஊர்மக்கள் அவர் தமையனிடம் சென்று இனித் தம்பியையே சொற்பொழிவுக்கு அனுப்புங்கள் என்று கேட்கும்

(தொடர்ச்சி 42-ஆம் பக்கம் பார்க்கவும்)

நான் கண்ட சாதுக்கள்

''மருத்துவப் பேரறிஞர்''

டாக்டர் திரு இரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்கள்,

B.Sc., M.D., F.R.C.P.(London), F.C.C.P. (U.S.A.), F.A.M.S.

R. RAJU,
Dy. Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

சுவாமி சிவானந்தர்

நான் வேலையில் இருந்தபொழுது வேலை விஷயமாக டெல்லி செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது அங்கிருந்து ரிஷி கேசத்தில் இருந்த சிவானந்த சுவாமிகளைக் காணச் சென்றேன். அவர் என்னைப் புன்முறுவலுடனும், அன்புடனும் வரவேற்று உபசரித்தார். ஆகாரமும் கொடுத்தார். பிறகு பக்திப் பாடல்களின் பசனை நடந்தது. அந்தப் பசனையில் என்னையும் கலந்து கொள்ளச் செய்தார். அந்தப் பசனை அரை மணி நேரம் நடைபெற்றது. அதன் பிறகு என்னை ஓய்வு எடுத்துக் கொள்ளச் சொன்னார். அப்பொழுது அவர் எழுதிய சம்ஸ்கிருத பக்திப் புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார்கள். அதற்குப் பிறகு சென்ற ஒவ்வொரு டெல்லி பயணத்தின் போதும், அவரைத் தரிசனம் செய்து வருவேன்.

அவரும் என்னிடத்தில் அன்பு காட்டி உபசரிப்பதோடு அல்லாமல், எனக்குச் சம்ஸ்கிருதத்தில் ஒரு பாட்டையும் சொல்லிக் கொடுத்தார். நீ ஒரு வைத்தியனாக இருப்பதால், இந்தப் பாட்டு உனக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும்; அதனால் இந்தப் பாட்டை மனப்பாடம் செய்து வைத்துக்கொள் என்று சொல்லி, அவர் ஒரு பாட்டையும் கற்றுக் கொடுத்தார். இந்தப் பாட்டை நோயாளிகள் முன்பு பாடினால் வியாதி சரியாகிவிடும். வியாதியும் குறையும் என்று சொல்லிக் கற்றுக் கொடுத்தார். மூன்று மாதங்கள் சென்ற பிறகு அவரைச் சந்திக்க நேர்ந்தபோது, ''இந்தப் பாட்டை நோயாளி முன்பு சொல்ல முடிவதில்லை. அவர்களுக்கு நோய் அதிகமாக இருக்கும்பொழுது இந்தப் பாட்டு ஞாபகத்தில் வருவதில்லை'' என்று கூறினேன். அதற்கு அவர் சொன்னார் தினமும் காலையில் எழுந்தவுடன் இந்தப் பாட்டை 10 முறை பூசையில் சொல்லி விட்டு, பிறகு நோயாளிகளைக் கவனித்தால் அதற்குப் பலன் இருக்கும் என்று கூறினார். அவ்வாறு நான் 4, 5 முறை செய்தும், நோயாளிகள் விரைவில் குணம் அடையக் காணவில்லை. காலையில் சொல்வதில் பலன் இல்லை என்று அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் சொன்னார். பகவான் நம் எல்லோரையும் இந்த உலகத்துக்கு அனுப்பும் போதே, எப்போது முடிவு என்று நிர்ணயித்துத்தான் அனுப்புகிறார். சாகாமல் இருக்கும்படி செய்து அனுப்புவதில்லை. என்றைக்காவது ஒருநாள் பிறந்தவன் இறக்கும்படிதான் சிருஷ்டித்துள்ளார் என்றார். மேலும், நம்மிடம் வந்த நோயாளிகள் எல்லாம் குணமாக வேண்டும், நம்மிடம் வந்தார்கள் என்பதற்காக அவன் சாகக்கூடாது என்று எண்ணி, அவர்களைச் சாகாமல் செய்துவிட முடியாது. ஓரளவுக்குக் குணப்படுத்தி, உடனே சாகாமல் தடுக்கலாம். அதற்கான சக்தியைத்தான் பகவான் நமக்குக் கொடுத்துள்ளார், சாவதை எக்காலத்துக்கும் தடுக்கும் சக்தியைக் கொடுக்கவில்லை என்று சொன்னார்.

மேலும் அவருக்கேகூட வயதின் முதிர்ச்சியால் உடம்பு சரியில்லை, ''என்னைப் பரிசோதித்துச் சொல்லுங்கள் டாக்டர்'' என்று கூறி, தம்முடைய உடம்பை அவர் என்னிடத்தில் காட்டினார். நான் அவரைப் பரிசோதித்து ''உங்களுக்கு இரத்த அழுத்தம் காணப்படுகிறது; சிறுநீரில் சர்க்கரை அதிகமாக இருக்கிறது; அதனால் ஆகாரத்தில் சர்க்கரையைச் சேர்த்துக் கொள்ளாதீர்கள்'' என்று சொன்னேன். அவ்வாறு நான் அவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது, பத்துப் பன்னிரண்டு மார்வாடி மாதர்கள், அவரைக் காண இராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து வந்தார்கள். வந்தவர்கள் சும்மாவா வந்தார்கள்? இல்லை, அவருக்கென்றே சுத்தமான நெய்யில் செய்த லட்டுகள் கொண்டு வந்து, அவரிடம் கொடுத்தார்கள். அதற்கு அவர் ''நீங்கள் எனக்காக அன்புடன் லட்டுகள் கொண்டு வந்துள்ளீர்கள், ஆனால்'' என்று கூறி என்னைச் சுட்டிக் காட்டி, ''இவர் தான் எனது டாக்டர், அவர் என்னைப் பரிசோதனை செய்து பார்த்து விட்டு, இனிப்பு சாப்பிடக்கூடாது என்று சொல்லி உள்ளார். நீங்களோ மிகவும் பிரியப்பட்டுச் சுத்தமான நெய்யில் செய்து கொண்டு வந்துள்ளீர்கள். என்ன செய்வது? கஷ்டகாலம்! நான் சாப்பிடக் கூடாதே'' என்றார். அவர்கள் எல்லோரும் மிகவும் சோர்ந்து போய்விட்டார்கள்.

அப்பொழுது சுவாமி சிவானந்தர் என்னைப் பார்த்து, ''உன்னால் இவர்கள்படும் துன்பத்தைப் பார். உன் பேச்சைக் கேட்பதால், நான்

எவ்வளவு நாள் இருந்து விடப் போகிறேன். நான் இருப்பதோ இறப்பதோ பகவான் செயல்'' என்று சொல்லி, ''உங்கள் திருப்திக்காக ஒரு லட்டை மட்டும் என்னிடம் எடுத்துக் கொடுத்துவிட்டு, நீங்கள் மீதியை எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று அம் மாதர்களிடம் சொன்னார். சொன்னதுதான் தாமதம், உடனே ஒரு லட்டை எடுத்து ஒரு மாது அவரது வாயில் வைத்துச் சாப்பிடச் சொல்லிவிட்டு மீதியில் ஒவ்வொருவரும் ஒன்றை எடுத்துச் சாப்பிட்டனர். பின்பு பாடி மகிழ்ந்தனர். நான் அந்தச் சூழ்நிலையைக் கண்டு, சொல்வதற்கு ஒன்றும் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது சுவாமி என்னைப் பார்த்துச் சொன்னார்: ''நாம் நம் நலனையும், மகிழ்ச்சியையும் முக்கியமாகக் கருதக்கூடாது, மற்றவர்கள் நலனையும், மகிழ்ச்சியையும்தான் முக்கியமாகக் கருத வேண்டும்'' என்று சொல்லிவிட்டு, ''இவர்கள் கிட்டத்தட்ட 500 மைல் கடந்து வந்துள்ளார்கள்; அதிலும் சும்மா வெறும் கையோடு வரவில்லை; சுத்தமான நெய்யில் சுட்ட லட்டைக் கொண்டு வந்துள்ளனர், அவர்கள் அடையும் மகிழ்ச்சியைப் பார்த்தாயா? இதைத் தடுத்திருக்கப் பார்த்தாயே'' என்று சொன்னார். எனக்கு என்ன சொல்வது என்று தெரியாமல், உட்கார்ந்து கொண்டே இருந்தேன்.

இன்னொரு சமயம் அவர்களைப் பார்க்கச் சென்றபோது, ஒரு பெரிய வர்த்தகர் அவரிடம் ரூபாய் 30,000-த்தை ரொக்கமாகக் கொடுத்து, ''இதைக் கண் வைத்தியத்திற்காக வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறிச் சென்றார். உடனே அங்குக் கூடியிருந்த அவருடைய சிஷ்யர்கள், ''இவர் பணத்தைக் கொடுத்து விட்டார். இதை ஏன் நீங்கள் வாங்கினீர்கள், கண் டாக்டரைத் தேடிக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமாயிற்றே'' என்றனர். அதற்கு அவர் ''நாமாகப் போய் யாரையும் பணம் கேட்கவில்லை. இது பகவான் கட்டளை, பகவான் அனுப்பிய பணம், அவருக்கே தெரியும். இதற்குத் தகுந்த டாக்டரை அவரே அனுப்பி வைப்பார், நீங்கள் ஏன் அலட்டி அங்கலாய்த்துக் கொள்கிறீர்கள்'' என்று சொல்லிக் கொண்டிருக்கையில், சென்னையிலிருந்து ஒரு கண் டாக்டர், வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டுச் சுவாமிகளைக் காண அங்கு வந்து, அவரது கால்களில் விழுந்து வணங்கி, நான் இல்லத்தாரோடு இருப்பதற்கு விரும்பவில்லை. நான் ஒரு சாமியாராக இருக்க வேண்டித் துறவறத்தை மேற்கொள்ளப் போகிறேன்'' என்றார். ''எனது சிஷ்யர்கள் கண் டாக்டரை எங்குக் கண்டு தேடப் போகிறீர்கள்? என்று இப்பொழுதுதான் கேட்டுக் கொண்டு இருந்தார்கள். ஆனால் இப்பொழுது பார்த்தீர்களா கடவுளின் மகிமையை?'' என்றார் சுவாமிகள்.

கண் மருத்துவமனை ஒன்று ரூ. 30,000க்கும் மேளான செலவில், ரிஷிகேசத்தில் கட்டப்பட்டது. சுவாமி சிவானந்தர் எனது தந்தையைப் போல, என் யோக சேமங்களை விசாரித்து எனக்கு அறிவுரையும் சொல்லுவார். அவர் சமஸ்கிருதத்தில் எழுதிய புத்தகங்களைக் கொடுத்து, இதைப் படி என்று சொல்வார். அப்படி ஒருமுறை ரிஷிகேசத்திற்குப் போனபோது சுவாமி சிவானந்தர் சமாதி அடைந்து விட்டார். 1966-ஆம் ஆண்டில், ரஷ்யநாட்டு உதவியுடன், இந்திய சர்க்கார் தொடங்கிய இன்டியன் ட்ரக்ஸ் அண்டு பார்மசூடிகல் கம்பெனி சார்பாக ரிஷிகேசத்திற்குப் போனேன். ரிஷிகேசத்தில்தான் பெனிஸிலின் போன்ற உயிர்கொல்லி மருந்துகள் செய்யப்படுகின்றன. அங்கே ''மகேஷ் யோகி என்ற சுவாமிகள் இருக்கிறார். அவருக்கு அநேக மேல்நாட்டு சிஷ்யர்கள் உண்டு. அடிக்கடி அவருடைய சொந்த விமானத்திலேயே மேல்நாடுகளுடன் தொடர்பு கொண்டு செயல்படுகிறார்'' என்றார்கள். நானும் அவரைப் பார்க்க வேண்டும் என்று சொன்னேன். அதன் பேரில் மறுநாள் காலை அவரைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

அன்று மறுநாள் காலையோ கிருத்திகை; நான் கிருத்திகை விரதம் என்றால், அன்று எதுவும் சாப்பிடமாட்டேன். முன்பு பழச்சாறு மட்டும், அன்றைய தினம் குடித்துக் கொண்டிருந்தேன். எனக்குக் குருவாகிய டாக்டர் குருசாமி முதலியார் அவர்களைக் காணச் சென்றபோது, அவர் ''விரதம் என்றால் ஒன்றும் சாப்பிடாமல் இருப்பதுதான்'' என்றார். ஆகையால் கிருத்திகை விரதம்தோறும் நான் எதுவும் சாப்பிடுவதில்லை. சிவானந்த சுவாமியுடைய சிஷ்யர்கள் எவ்வளவோ சொல்லியும், காலை ஆகாரமும் பழச்சாறும் சாப்பிட மறுத்து விட்டேன். அதற்கு அவர்கள், ''எங்களுடன் சாப்பிட மறுத்து விட்டீர்கள், ஆனால் அந்த மகேஷ்யோகியைப் பார்க்கும்போது சாப்பிடாமல் என்ன செய்யப் போகிறீர்கள்?என்று பார்ப்போம்'' என்று சொன்னார்கள்.

சுவாமி மகாவீர் டோபிவாலா:

என்னை அழைத்துச் செல்ல வந்தவர், ''மகாவீர் டோபிவாலா என்று ஒரு சுவாமியார் இருக்கிறார். அவர் மகேஷ்யோகிக்கும் குரு'' என்றார். அவரைப் பார்ப்பது நல்லது என்றார். நானும் அதற்கு இணங்க, என்னை முதலில் மகாவீர் டோபிவாலாவிடம் அழைத்துச் சென்றார். திரு. டோபிவாலா ஒரு குகையில் வசித்து வந்தார். அவர் குகையில் வசிக்கும் போது திகம்பரமாக ஆடைஎதுவும் இல்லாமல் இருப்பார். வெளியே வந்துஉட்காரும்பொழுது மட்டும், ஒரு கௌபீனம் உடுத்திக் கொள்வார். அவருடைய சடை நன்றாக வளர்ந்து, ஒரு பெரிய முண்டாசு கட்டினது போலக் காணப்படும். அதனாலேயே அவரைச் சனங்கள் டோபிவாலா என்று அழைக்கின்றார்கள். தலையில் அவ்வளவு முடியிருந்தும், உடலிலே கொஞ்சம்கூட உரோமம் இல்லாமல், உடம்பு முழுவதும் மிருதுவாகக் காணப்பட்டது. அவர் என்னைப் பார்த்தவுடனேயே, இந்தியில் என்னுடன் வந்தவரிடம் 'இவர் ஒரு டாக்டர் தானே?' என்று கேட்டார். அதற்கு என்னை அழைத்துச் சென்றவர், ஆம் என்று சொல்லிவிட்டு, இவருடைய மனைவியார் 1959-ல் இறந்து விட்டார் என்றார்.

அதற்கு டோபிவாலா, ''இவருடன் இவருடைய மனைவியின் தொடர்பு முடிந்தது. அதனால் இந்தப் பிரிவு'' என்றார். மறுபடி என்னை அழைத்துச் சென்றவர், இவர் பெண்ணுக்குக் கல்யாணமாகி, அந்தப் பெண்ணும் கணவனும் மேல்நாட்டிற்கு நேற்றுச் சென்றுவிட்டனர் என்றார். அதற்கும் டோபிவாலா ''இவருடன் இவர் பெண்ணின் வாழ்க்கை முடிந்து, இன்னொருவருடன் ஆரம்பம் ஆகிவிட்டது'' என்றார். இதை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு, என்ன இந்த சுவாமியார், நம்மை இவ்வளவு சுலபமாகத் தீர்த்துக் கட்டுகிறாரே என்று நினைத்தேன். அவர் பின்னால் இராமர் பட்டாபிஷேகப் படம் இருப்பதைப் பார்த்தேன்.

பிறகு எனக்குத் தெரிந்த அரைகுறை இந்தியில், என்ன சுவாமி இவ்வளவு சுலபமாக என் கதையை முடிக்கிறீர்கள். இராமர்கூடச் சீதையைப் பிரிந்தபொழுது கலங்கினாரே என்றேன். அதற்கு அவர் ஏன் இராமர்கூட என்கிறீர் என்றார். அதற்கு நான், ''இராமர் பகவான். எல்லாம் அறிந்தவர். என்னைப் போல் அவருடைய மனைவி பக்கத்திலே இருந்தால்தான் பேச முடியும் என்பதெல்லாம் கிடையாதே'' என்றேன். அதற்கு அவர் சொன்னார் ''இராமர் பகவானுடைய ஒரு பாகம்தான். இராமர் உலகிலே தோன்றியபோது, பாக்கி எல்லா விஷயங்களும் நடந்துகொண்டே இருந்தன. ஆகையால் அவர் பகவான் என்று ஏமாறாதே. அவர் மனித உருவோடு வந்தபோது, மனிதனைப் போல் நடித்தார்.; இல்லாவிட்டால் நீ அவரை நினைத்து உன்னைத் தேற்றிக் கொள்ளமாட்டாய். அதற்காகவேதான் அந்த நாடகம் நடித்துக் காட்டினார். மனிதன் எப்படி நடக்க வேண்டும் என்று காட்டவே, அவர் அவதரித்தார்'' என்று சொல்லிவிட்டு, என்னை ''ஏதாவது வேண்டுமானால் கேளுங்கள்'' என்றார்.

அதற்கு நான் பகவானைப் பார்க்க வேண்டும் என்றேன். அதற்கு அவர் பிரேமம் வேண்டும். உண்மையான பிரேமம் உன் மனதில் என்றைக்கு உண்டாகின்றதோ, அன்றைக்கே நீ அவரைக் காணலாம்'' என்றார். நான் அதற்குப் ''பிரேமம், பிரேமம் என்கிறீர்களே தவிர அந்த பிரேமம் எப்படி நம் மனதில் ஏற்படும் என்று சொல்லித் தரவில்லையே'' என்றேன். அதற்கு ''உனக்குக் கல்யாணம் ஆயிற்று அல்லவா?'' என்றார். ஆம் என்றேன். நீ உன் மனைவி மீது அதிக பிரேமம் காட்டினாய் அல்லவா?என்ருர் ஆம் என்றேன். அதற்கு அவர், நீ என்னைப் போல் ஒரு சந்நியாசியிடம்,''எப்படி என் மனைவியிடம் பிரேமம் வளர்ப்பது என்று கேட்டாயா? அதேபோல் பகவானிடமும் இயல்பாகப் பிரேமம் உண்டாக வேண்டுமே தவிர, அது பிறரால் சொல்லித் தர முடியாதது என்றார். ''உனக்குப் பகவானைப் பார்க்க வேண்டும் என்ற இச்சை முழுமனதுடன் எப்பொழுதுமே ஏற்படவேண்டும். அப்பொழுது பிரேமம் ஏற்படும்''என்று சொல்லிவிட்டு, மறுபடியும் வேறு ஏதாவது கேள் என்றார். அதற்கு நான், மறுபிறப்பு எனக்கு வேண்டாம் என்றேன்.

அதற்கு, அவர், முன்னதிலும் இது சுலபம். நீங்கள் ஏன் ரிஷிகேசம் வந்தீர்கள். உங்கள் மருந்து உற்பத்தி ஆலை சரியாக வேலை செய்கிறதா? என்று பார்ப்பதற்கல்லவா என்றார். நான் இல்லை. கங்கா ஸ்நானம் செய்ய வந்தேன் என்றேன். அவர், ''அந்த ஆசையின் காரணமாக, நீங்கள் மறுபிறப்பில் என்னைப் போல் கங்கைக் கரையில் பிறப்பீர்கள். மறுபிறப்பு வேண்டாம் என்று நினைப்பவர்கள், 'கங்கை எக்கேடு கெட்டால் நமக்கு என்ன?' என்று இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, மாதா கங்கா என்று நீங்கள் அவளைத் தழுவ, அவள் மகனே என்று உங்களைத் தழுவ, மறுபடி பிறப்பும் இறப்பும் இருந்து கொண்டே இருக்கும். உலகிலே எந்த வஸ்துவிலும் பற்றில்லாமல் இருக்க வேண்டும். அப்பொழுது ஒரு முதிர்ந்த கனி எப்படி விழுகிறதோ அதேபோல் இந்தப் பூமியினின்று விடுதலை பெறுவீர்கள்'' என்றார்.

மறுபடி ஏதாவது கேளுங்கள் என்றார். அதற்கு நான், நீங்கள் விளையாட்டாக என் கஷ்டங்களைத் தீர்த்துப் பதில் சொல்கிறீர்கள். ஆகையால் நான் கேட்கமாட்டேன் என்றேன். என்று சொல்லிவிட்டு, நான் எடுத்துச் சென்ற பழங்களை அவரிடம் கொடுத்துவிட்டு, வணக்கம் செய்தேன். அவர் அவைகளை அன்போடு எடுத்துக்கொண்டு, நான் கொடுத்ததிலிருந்தே ஒரு பழத்தை என்னிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். நான் இன்றைய தினம் உபவாசம், சாப்பிட மாட்டேன் என்றேன்.

அப்பொழுது அவர் ''இந்த உபவாசமே சிரத்தையாக அனுஷ்டித்தால் உனக்கு மறுபிறப்பு இல்லாமல் செய்துவிடும். உணவை ஒழித்தாலே ஆசை நீங்கும்'' என்று சொல்லிவிட்டு ''இன்று பூராவும் உன் உபவாசத்திற்குப் பங்கம் இழைக்க முயற்சிகள் ஏற்படும்'' என்றார். அதற்கு நான் ''உபவாசம் என் கையில் இருக்கிறது. அதை எப்படி பிறரால் பங்கம் செய்ய முடியும்'' என்று சொன்னேன். அதற்கு அவர் ''நான் ஒன்றும் வெகுநாட்கள் கழித்து நடக்கும் விஷயத்தைப் பற்றிப்பேசவில்லையே. இன்னும் 6-8 மணி நேர விஷயம் தானே. நீயே நான் சொன்னதைக் காண்பாய்'' என்றார். அவருக்கு நான் வணக்கம் செய்து விடைபெற்றேன். இப்பொழுது யாரைக் காணப் போகிறீர்கள்? என்றார். நான் மகேஷ் யோகியைக் காணப் போகிறேன் என்றேன். ''அது நல்ல இடம்தான். உனக்குத் தகுதியான இடம்'' என்று சொல்லி விடை கொடுத்தார்.

சுவாமி மகேஷ் யோகி:

பகல் சுமார் 11 மணி இருக்கும். ஒரு பெரிய மண்டபத்தில், கட்டிட வேலை நடந்து கொண்டிருந்தது. ஒரு ஒருத்தில் மகேஷ் யோகியும், அவருடைய சீடர்களும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். மகேஷ் யோகி என்னைப் பார்த்து, எனக்கு ஒரு நாற்காலியைப் போடச்

செய்து, என்னுடன் அன்போடு பேசினார். மகேஷ் யோகியார் எடுத்த உடனேயே, என்னிடம் ''பகவான் நம் உடலை வற்புறுத்தச் சொல்லவில்லை. பட்டினி இருக்கச் சொல்லவில்லை. நாம் உணவு உட்கொள்வதால், நம்மைப் பகவான் ஒதுக்கி விடமாட்டான், அவன் வேண்டுவது எல்லாம் அவனிடம் உண்மையான அன்பும் பக்தியுமே தவிர, நம் உடலை வாட்டுவது அல்ல'' என்றார்.

இப்படி எல்லாம் பேசிவிட்டு, அவர் என்னைச் சாப்பிடக் கூப்பிட்டார். ஆனால் நான் இன்றைக்கு உபவாசம் என்று சொல்லிச் சாப்பிட மறுத்து விட்டேன். ''உடலை வருத்தி உண்ணாவிரதம் இருப்பதால் ஒன்றும் பலன் கிடையாது. நீங்கள் எப்படியும் சாப்பிடத்தான் போகிறீர்கள்'' என்றார். அதற்கு நான் சொன்னேன், ''சாப்பிடாமல் இருப்பது நான், அப்படி இருக்கையில் என்னுடைய இஷ்டமின்றி யார் என்னைச் சாப்பிட வைக்க முடியும்?'' என்று கூறினேன். இங்கு உள்ள சிஷ்யர்களுக்கு, நரம்பு, மூளை இவற்றைப் பற்றி நீங்கள் ஒரு பிரசங்கம், சுருக்கமாக ஒரு மணி நேரத்தில் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டு, இப்பொழுது உங்களுக்கு என்ன வேண்டும்? என்றார்கள். நான் கங்கா ஸ்நானம் செய்ய வேண்டும் என்றேன். அவர் ''இந்த இடத்திற்கு நேராகச் சென்றால், படிகள் இருக்கின்றன. அதன் மூலமாகக் கங்கையை அடைந்து என் இஷ்டப்படி ஸ்நானம் செய்யலாம்'' என்று சொல்லி, என்னுடன் ஒரு சீடரையும் அனுப்பினார். அங்கிருந்து கால் மைல் தூரம் நடந்து கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டு வந்தேன். எனக்கு ஒரு தனி வசதி செய்து கொடுத்திருந்தார்கள்.

அன்று சாயங்காலம் 3 மணிக்கு என்னைப் பிரசங்கத்திற்கு அழைத்துச் சென்றார்கள். 2.45 மணிக்கே எல்லோரும் வர ஆரம்பித்தனர். சுமார் 25-க்கும் மேற்பட்ட வெளிநாட்டினர், அங்கு வந்து மகேஷ் யோகியைத் தரிசித்தனர். 3 மணியிலிருந்து 4 மணி வரையில் என் பிரசங்கம் நடைபெற்றது. பிறகு $\frac{1}{4}$ மணிநேரம் கேள்வி பதில் நடந்தது. இது முடிந்த பிறகு எனக்கு அங்கு உள்ளவர்களை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. சுமார் 50 நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தோம். 50 நிமிடங்களுக்குப் பிறகு கானடா நாட்டு மாது ஒருவர் என்னிடம் வந்து, ''நீங்கள் எங்களுக்குப் பாடம் கற்றுக் கொடுத்தீர்கள். ஆகையால் நீங்கள் எங்களுக்குக் குரு. எனவே, தகப்பனார் முறை. என் பெண்ணுக்கு இன்றைய தினம் பிறந்த நாள் கொண்டாடுகிறோம். நீங்கள் அதில் கலந்து கொண்டு சாப்பிட வேண்டும்'' என்றார். அதற்கு நான், ''இன்றைக்கு எனக்கு உபவாசம், ஆகையால் எதுவும் சாப்பிடமாட்டேன். ஆனால் விழாவில் கலந்து கொள்கிறேன்'' என்று சொன்னேன். பின்பு எல்லோரும் சாப்பிடச் சென்றனர். என்னையும் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினர். தேநீரும் மற்றும் உணவுப் பண்டங்களும் பரிமாறப்பட்டிருந்தன. ''எனக்கு வேண்டாம் அனுப்பி விடுங்கள்; வெறும் வெந்நீர் மட்டும் குடிக்கக் கொடுத்தால் போதும்' என்றேன்.

அதனைக் கேட்டுக் கொண்டிருந்த மகேஷ் யோகி, என்னைச் சந்நியாசி மடத்தில் சேர்ந்து விடும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு நான் சொன்னேன்: ''எனக்கு ஒரு பையன் 13 வயதில் உள்ளான். அவனுக்குத் தாயாகவும், தந்தையாகவும், நான் தான் இருக்கிறேன். அவனுக்கு 25, 26 வயதில் சம்பிரதாயப்படி ஒரு கல்யாணத்தை முடித்துவிட்டால், நான் பிறகு சந்நியாசி மடத்தில் சேர்ந்து விடுவேன். மகளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. இருவரும் இங்குதான் உள்ளனர்'' என்றேன். அதற்கு மகேஷ் யோகியார். ''நீ பிள்ளை வேண்டிப் பகவானை கேட்கவில்லை, அவராகக் கொடுத்தார் என்றாய். அதுபோல அவனுக்கு ஒரு வழி காட்டவும் அவனுக்குத் தெரியும்'' என்று யோகி சொன்னார். கால்மணி நேரம் வாக்கு வாதம் நடைபெற்றது. ''என் மனதில் சந்நியாசி ஆகவேண்டும் என்றுதான் நினைத்துக் கொண்டுள்ளேன். ஆனால் அதற்கு முன் தந்தை நிலையில் இருந்து ஒரு மகனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்த பிறகுதான், அதை நான் செய்யலாம் என்றேன். மிருகங்கள் கூட, தனது குட்டிகள் நலத்தைத்தான் முன்பு கவனிக்கின்றன. அப்படி இருக்க மனிதனாகப் பிறந்த நான் என் 13 வயது மகனைப் பகவான் கவனித்துக் கொள்வார் என்று, அவனை விட்டுவிட்டுச் சந்நியாசம் கொள்வது சரியல்ல'' என்றேன்.

அதற்கு மகேஷ் யோகி ''உன் மகனைக் காப்பதோ அல்லது அவனை முன்னுக்குக் கொண்டு வருவதோ, உன் செயல் அல்ல. அதை எல்லாம் கடவுளே பார்த்துக் கொள்வார். நீ இந்த ஆசிரமத்தில் சேர்வாயானால், வெகு சீக்கிரத்தில் நீ நல்ல பயன் அடைவாய், நீ எத்தனை ஆண்டுகள் இல்லறத்தில் இருந்தாலும் பகவானைக் காணமாட்டாய். எல்லாக் கவலையையும் விட்டு, 24 மணிநேரமும் இங்கே தியானம் செய்ய முடியும்'' என்றெல்லாம் சொன்னார். அவர் பேசும்போது கேட்பதற்கு மிகவும் சுவையாக இருந்தது; சந்நியாசம் மேற்கொள்ள எவ்வளவோ ஆசை உண்டாயிற்று. ஆனாலும் என் மனதில் என் மகனை நினைத்து நான் ஒரே பிடிவாதமாக மறுத்து விட்டேன். அப்படி நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அந்தக் கானடா மாது, ''என் பெண் என்றால் உங்களுக்குப் பேத்தி மாதிரி. ஆகையால், பிறந்தநாள் கேக்கில் ஒரு துண்டாவது சாப்பிட்டால்தான், நான் மகிழ்ச்சியடைவேன்'' என்றார். அப்பொழுது மகேஷ் யோகியார், அந்த மாதிடம், ''இந்த டாக்டர் மகா பிடிவாதக்காரர். மத்தியானம் 12 மணி முதல் நான் சொன்னது எதுவுமே இவர் கேட்கவில்லை'' என்று சொல்லிச் சிரித்தார். அப்படி என் உபவாசத்திற்கு அன்றைக்குப் பலமுறை பங்கம் ஏற்பட முயற்சி நடந்ததைக் கவனித்து, நான் வீடு திரும்பினேன்.

(தொடரும்)

திருத்தென்குரங்காடுதுறைக் கல்வெட்டுகள்

திரு. வே. மகாதேவன், எம்.ஏ., ஆடுதுறை

காவிரியின் இருமருங்கும் எண்ணில்லாத கோயில்களை எடுப்பித்து மகிழ்ந்தனர் சோழப் பேரரசர். மன்னர் எவ்வழி அவ்வழி மக்களல்லவா? கருங்கல்லால் கட்டப்பெற்றிருந்த கலை எழில் நிலையங்களாகிய திருக்கோயில்களில் நாள்வழிபாடுகள் நடைபெறவும், சிறப்பு வழிபாடுகள் செவ்விதின் நிகழவும், திருவிளக்குத் தினம்தொறும் எரிப்பிக்கப் பெறவும் அறக் கட்டளைகளை அமைத்தனர் பலர். தாம் ஏற்படுத்திய தருமத்தின் விவரங்களைத் திருக் கோயில் சுவரில் கல்வெட்டாக்கினர். இக் கல்வெட்டுக்கள் தானவிவரம் மட்டும் கூறுவனவாக இராமல் அவ்வத் திருக்கோயில்களின் வரலாறு காணவும் தமிழக வரலாற்றை எழுதவும் பெருந்துணை புரிகின்றன. அத்தகைய சாசனங்கள் அமையப் பெற்ற திருக்கோயில்களுள் ஒன்றான ஆடுதுறை அருள்மிகு இடர்த் துணையிறைவர் கோயில் கல்வெட்டுக்களில் காணப்பெறும் செய்திகளை இங்கு நோக்குவோம்.

சாசனங்கள்—பொதுச்செய்தி:

'ஆடுதுறை' என்னும் ஊர் தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் வட்டத்தில் அமைந்துள்ள சிற்றூராகும். இவ்வூர் மாயூரம்-கும்பகோணம் மார்க்கத்தில் அமைந்துள்ளது. பண்டைக் காலத்தில் தென்னகம், மண்டலங்களாகவும், மண்டலங்கள் வளநாடுகளாகவும், வளநாடுகள் நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ''தென்கரைத் திரைமூர் நாட்டுத் திருக்குரங்காடுதுறை'' என்று திருக்குரங்காடுதுறையைச் சாசனங்கள் குறிக்கின்றன. இதனால் திரைமூர் நாட்டில் இவ்வூர் இருந்தமை அறியப் பெறும். நாடு என்பது இக்காலத்திய வட்டத்துக்குச் சமமான நிலப்பரப்பாகும். 'திரைமூர் என்னும் நகரினைத் தலைமை நகரமாகக் கொண்டு அவ்வூரினைச் சூழ அமையும் அரசியல் பிரிவே திரைமூர் நாடாகும். திரைமூர்நாடு, 'உய்யக்கொண்டார் சோழ வள நாட்டின்' ஒரு பகுதியாக இருந்ததென்பதனைப் பல சாசனங்கள் காட்டுகின்றன. ஆடுதுறைச் சாசனங்களில் இக் குறிப்பில்லை. எனினும் முதலாம் குலோத்துங்கனின் 29-ஆம் ஆண்டுச் சாசனமொன்றில், ''பூபால குலவல்லி வளநாட்டுத் திரைமூர் நாடு'' என்னும் பிரிவில் ஆடுதுறை இருந்தது என்று கூறப்பட்டுள்ளது. வளநாடு என்பது மாவட்டத்துக்குச் சமமான நிலப்பரப்பாகும்.

இவ்வாலயத்தைக் கற்றளியாக்கிய செம்பியன் மாதேவியார் 'மழவர்' என்னும் சிற்றரசர் குலத்தில் பிறந்தவர். இவள் சோழ அரசனான முதல் கண்டராதித்த சோழனின் மனைவி; உத்தம சோழனின் தாய். இவள் தன் கணவனின் மறைவுக்குப் பின்னும் பல ஆண்டுகள் உயிரோடு இருந்தார். முதலாம் இராசராசசோழனின் ஆட்சியின் (985-1014) இடைப்பகுதியில், கி.பி. 1001-வரை உயிருடன் இருந்தார். இவர் திருவிசைப்பா அருளிய, தன் கணவராகிய சிவஞானகண்டராதித்தர் போலப் பெருஞ் சிவபக்தியுடையவராவார். மிகப்பல கோயில்களைக் கருங்கற்கோயில்களாக மாற்றினார். எண்ணிலாச் சிவதருமங்களை இயற்றினார். கோனேரிராசபுரம் (திருநல்லம்), திருக்கோடிகா, குத்தாலம் (திருத்துருத்தி) முதலான பல இடங்களில் இவர் கற்றளிகளை எடுப்பித்தார். இவர் எடுப்பித்த கோயில்களில் ஒன்றே, ஆடுதுறை ஆபத்சகாயர் கோயிலாம்.

ஆடுதுறைச் சிவாலயத்தில் கருவறையின் புறச் சுவரில் சிவலிங்கத்தை வழிபடுவதுபோல அமைந்துள்ள சிற்பங்கள், இவர் வரலாற்றுத் தொடர்பைக் காட்டுவன. இச்சிற்பங்கள் கோனேரி ராசபுரத்தில் உள்ள செம்பியன் மாதேவி-கண்டராதித்தன் சிற்பங்களுடன் ஒப்பிட்டுணரற் பாலனவாகும். இக்கோயில் விமானம் உருண்டை வடிவிலான கிரீவமும் (கழுத்து), சிகரமும்(வேஸரசிகரம்) கொண்டது; ஒரு தளக் கற்றளி. கருவறை 16'X6'' சதுரமானது. 16' நீளமுள்ள அர்த்த மண்டபத்தில் 'கும்பபஞ்சரங்களை' உடைய இரு தூண்கள் உள்ளன.

செம்பியன்மாதேவியின் கல்வெட்டில்.....

ஆடுதுறைத் திருக்கோயில் கற்பக்கிரகத்தின் தெற்குச் சுவரில் உள்ள படை வரியொன்றில். ''ஸ்ரீ மதுராந்தக தேவரானஸ்ரீ உத்தம சோழரைத் திருவயிறு வாய்த்த உடைய

பிராட்டியார் மாதேவடிகளான ஸ்ரீசெம்பியன் மாதேவியார் திரைமூர் நாட்டுத் திருக்குரங்காடு துறை ஆழ்வார்க் கெடுப்பித்தருளின இத் திருகற்றளியிலே முன்பு இத்தேவர்க்குச் சந்தி ராதித்தவல் செய்தன லக்ஷணப்படி கண்டு இவ் விலக்ஷணங்கள் மூத்துப்போக ஸ்ரீ உத்தம சோழ தேவரான கோப்பரகேசரி பன்மற்கு யாண்டு 16-வது கல்மேல் வெட்டின'' என்னும் கல்வெட்டுள்ளது. இது இரண்டு செய்தி களைத் தருகிறது.

(1) உத்தமசோழன் கி. பி. *970-85*-ல் அரசாண்டவன். இவனுடைய *16*-ஆவதாண்டு *985-86* ஆகும். இவ்வாண்டுக்கு முன்னால் இவ்வாலயப்பணி முழுமை பெற்றது என்பது முதலாவது செய்தி.

(2) இக்கோயில் கல்லால் கட்டப்பெறு வதற்கு முன்னர் 'சந்திர சூரியர் உள்ளவரை' நடைபெற வேண்டும் என்பதால் பல அறக் கொடைகள் தரப்பட்டிருந்தன. இக்கொடை கள் நாள் வழிபாடு முதலானவற்றுக்காகத் தரப் பட்டவை. இவை மிகப் பழமையானவை. செம்பியன்மாதேவி அக் கொடைகளைப் பற் றிய விவரங்களைக் கண்டறிந்து அவை அழியா மல் நிலைபெற்று வளருமாறு கல்வெட்டுக் களில் பொறித்தாள் என்பது இரண்டாவது செய்தியாகும்.

கற்றளியாம் முன்னால்:

ஆடுதுறைத் திருக்கோயில் கற்றளியாக்கப் படுவதற்கு முன்னால் அக்கோயிலில் பல கொடைகள் பக்தர்களால் தரப்பெற்றிருந் தன. அவற்றைச் செம்பியன்மாதேவி கல் வெட்டாக்கினாள் என்று சாசனம் கூறுகிறதல் லவா? மிகமுற்பட்ட அத்தனைச் சாசனங்கள் எவையென அறிவோம்.

ஆபத்சகாயேசுவரர் கோயில் சாசனங் களில் மூன்று, பாண்டியர் காலத்தன. இச் சாசனங்களில் கண்ட மன்னன் 'மாறன் சடை யன்' என்பவனாவான். இக்கல்வெட்டுக்களே மிகப் பழையன; செம்பியன் மாதேவியாரால் மீண்டும் வெட்டப்பட்டவையாகும். 'மாறன் சடையன்' என்பது ஒரு பொதுப் பெயர். மாற வர்மன் சடையவர்மன் என்பன பாண்டிய அரசர் மாறி மாறிச் சூடிய பெயர்கள். எனவே மாறவர்மன் மகனான சடையவர்மன் என்பது இதன் பொருளாகிறது. இப்பெயருக்குரிய அரசன் கி. பி. *625*-க்கும் *985*-க்கு மிடைப் பட்ட காலத்தில் இருந்த பாண்டியருள் எவன் என நிர்ணயிப்பதில், இடர்ப்பாடுகள் உள்ளன. திரு. வி. அரங்காசார்யர், இவ்வரசன் நெடுஞ் சடையன் பராந்தகன் ஆகலாம் எனக்கூறுவர். இவன் கி. பி. *765-790* வரை அரசாண்டவன். இவர் தாம் இவ்வாறு கருதுவதற்குக் காரணம் காட்டவில்லை. திரு. சுந்தரேசவாண்டை யாரும், மாறன் சடையன் நெடுஞ்சடையன் பராந்தகன் என்றே கூறுவர்.

சீமாறன் சீவல்லபன் *(835-862)* என்பவ னின் மகன் இரண்டாம் வரகுண பாண்டியனா வான். இவன் சடையவர்மன் என்னும் பட்டம் உடையவன். இவன் *862*-ல் பாண்டிய நாட்டர சன் ஆனான்.

''பிள்ளைப்பிறை சடைக்கணிந்த
பிநாகபாணி எம்பெருமானை
உள்ளத்தில் இனிதிருவி
உலகம் காக்கின்ற நாளில்''

என இவன் சிவபக்தியை ஒரு சாசனம் பேசும். இவ்வரசன் கி. பி. *880*-ல் திருப்பனந்தாளைச் சூழ அமைந்த மண்ணி நாட்டூர்களில் ஒன்றான இடவையைக் கைப்பற்றினான். சோழநாட்டுப் பகுதியை ஆண்டான் ஆதலாலும் 'இதுவும் ஒரு பழங்கற்படி' எனும் தொடக்கத்துடன் காணப் பெறும் மறுபதிப்புற்ற கல்வெட்டுகளாகத் திருக்கோடிகா என்னும் தலத்தில் உள்ள சாச னங்களுள் நான்கு, மாறன் சடையனான வர குணமகாராசன் காலத்தன வாதலானும் ஆடு துறையில் உள்ள கல்வெட்டுக்களுக்குரியமாறன் சடையனும் இரண்டாம் வரகுணனே யாவன் எனலாம். மாறன் சடையனின் காலத்திய சாச னங்களில் ஒன்று, ஆடுதுறை திருக்கோயிற்கு இவ்வூருக்கண்மையிலிருந்த மருத்துவக்குடிச் சபையாரளித்த கொடைபற்றிக் கூறும். ஏனைய சாசனங்கள் மிகச் சிதைந்துள்ளன.

சிவபாதசேகரன் காலத்தில்:

சிவபாதசேகரனான முதல் இராசராச சோழன் காலத்திலும், செம்பியன் மாதேவியார் ஆடுதுறைத் திருக்கோயிலில் அறப்பணிகள் ஆற் றினார். முதல் இராசராசனின் ஒன்பதாவ தாட்சியாண்டான கி. பி. *994*-இல் செம்பியன் மாதேவியார், இத்திருக்கோயிலுக்கு 8 மாநிலத் தைத் தானமாகத் தந்தான். இந்நிலம் 'செம்பி யன் மாதேவி' என்னும் பெயரால் தரப்பெற் றது. இதேயாண்டில் இக்கோயிலில் திருவிளக் கெரிப்பிக்கத் தரப்பெற்ற நிவந்தங்களை வேறொரு சாசனம் குறிக்கிறது.

கோயில் விரிவுபடுத்தல்:

ஆடுதுறைத் திருக்கோயிலில், கருவறை அர்த்த மண்டபம் ஆகியபகுதிகள் செம்பியன்மாதேவி யின் காலத்தன. இப்பகுதியை ஒட்டிப் பெரு மண்டபம் ஒன்றுள்ளது. திருச்சுற்றும் திருச் சுற்று மாளிகையும் கோபுரவாயிலும் உடைய பகுதி காணப்படுகிறது. இப்பகுதிகள் அனைத் தும் கி. பி. *1065*-க்கு முன் கட்டி முடிக்கப் பெற்றனவாகும். வீரராசேந்திரன் என்பான் கி. பி. *1063-70*-ல் அரசாண்ட சோழ மன்ன னாவான். இவனுடைய இரண்டாம் ஆட்சி யாண்டுக்குரிய சாசனம்-அதாவது *1065*-க்குரிய சாசனம் இக்கோயில் பெருமண்டபத் தென் புறச் சுவரில் சாசனமாக உள்ளது. இச்சாச னத்தையும் இங்குள்ள பிறசாசனங்களையும் நோக்கினால் இம்மண்டபமும் திருச்சுற்று மாளிகை முதலானவையும் வீரராசேந்திரன் காலத்தில் முற்றுப் பெற்றிருந்தமை பெறப் படும். முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இக்கோயிலின் வெளிப்பிரகாரம் நீங்கலாக எல்லாப் பகுதிகளும் முற்றுப் பெற்றதாதல் உறுதியாகும்.

தேவர் திருமடைவிளாகம்:

தமிழகத் திருக்கோயில்களில் திருமுறை ஓதப் பெற்றமை போலவே, ஸ்ரீருத்ரம் முதலான வேதமொழிகளும் ஓதப்பெற்றன என்பது சாசனங்களிற் கண்டது. இச்செயலைப் புரிய அவ்வக் கோயிற்கருகில் இருந்த பகுதிகள் பிராமணர் குடியேற்றப் பெற்றிருந்தனர். வீரராசேந்திர சோழனின் இரண்டாவதாட்சியாண்டில் இக்கோயிலில் அறப்பணிகள் நிகழ்த்தப்பெற்றமையையும், அப்பொருள் வட்டிக்கு விடப்பெற்று அவ்வருவாயால் அறப்பணி நிகழ்ந்தமையையும் ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. இவ்வாறு செய்ய முதற் பொருள் வழங்கியவன் ''இத்தேவர் திருமடை விளாகத்து மேலைத் திருவீதியில் ஆண்டார்களில்'' ஒருவனாவான். இச்சாசனத்தினால் ஆடுதுறைத் திருக்கோயிற்கு வேதப் பிராமணர் வாழும் அகரம் இருந்தமையும், பல திருவீதிகளை யுடையதாக இருந்தமையும், அவ்வகரத்திலிருந்தோர் இக்கோயிலுடன் தொடர்புடையராக இருந்தமையும் அறியப் பெறும்.

முதற்குலோத்துங்கன் காலத்தில்:

முதற் குலோத்துங்கன் என்பான் கி. பி. 1070 முதல் 1120 வரை அரசு புரிந்த சோழவரசனாவான். இவனுடைய 5, 10, 14, 28, 29-ஆம் ஆட்சியாண்டுகளில் இக்கோயிலில் செய்யப்பட்ட தானச் செயல்களை இங்குள்ள சாசனங்கள் காட்டுகின்றன.

விக்கிரம சோழச் சதுர்வேதிமங்கலம்:

குலோத்துங்கச் சோழனின் 5-வது ஆட்சியாண்டில் (கி. பி. 1075-ல்) ஆடுதுறையைத் தன்னகத்துக் கொண்ட நாட்டுப் பிரிவான திரைமூர் நாட்டில் இருந்த 'பள்ளிப்படை விக்கிரம சோழச் சதுர்வேதி மங்கலம்' என்னும் ஊரின் உட்பிரிவாகிய 'வேதகோமபுரம்' என்னும் பகுதியைச் சேர்ந்த 'யக்ஞநாராயணப் பட்டன்'என்பவன் ஆடுதுறைத் திருக்கோயிலில் ஒரு திருவிளக்கு எரிப்பிக்கச் சிவப்பிராமணரிடம் நிலக்கொடைதந்தமையைக் கூறுகிறது.

இதே மன்னனின் பத்தாமாண்டுச் சாசனம் (1085), 'பள்ளிப்படை விக்கிரம சோழபுரத்து வேதகோம புரத்தினைச் சேர்ந்தவன் ஒருவன் திருமந்திரப் போசனப்புறம்' ஆக நில நிவந்தமளித்தமையைக் காட்டுகிறது. இக் கல்வெட்டில், ''இவ்வூர் அரணைப் புரத்துப் பிச்சதேவன்'' என ஒருவன் பெயர் குறிக்கப் பெறும். இத்தொடரால் ஆடுதுறையின் ஒரு பகுதி அரணைப்புரம் அல்லது அரவணைப் புறம் எனப் பெற்றதென்பது பெறப்படும்.

இவ்விரு சாசனங்களிலும், 'பள்ளிப்படை விக்கிரமசோழச் சதுர்வேதிமங்கலம்' என்று ஓரூர் கூறப்பட்டுள்ளது. இவ்வூர் இந்நாளில் எப்பெயருடன் உள்ளது என்பது அறியப்படவில்லை. சதுர்வேதிமங்கலம் என்பது நான்கு மறையிலும் ஆறங்கங்களிலும் வல்ல அந்தணரின் தன்னாட்சி நிலவிய ஊராகும். இவ்வூர் 'விக்கிரமசோழன் என்னும் அரசனின் பெயரால் அழைக்கப்படுகிறது. இவன் முதல் குலோத்துங்கனின் மகனான விக்கிரம சோழன் அல்லன். முதல் இராசராசனின் மகனான முதல் இராசேந்திரனாவான். இவன் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் இவன் விக்கிரமசோழன் என்னும் சிறப்புப் பெயரால் குறிக்கப் பெற்றுள்ளான். இறந்தவர்களைப் புதைத்த இடத்தில் அன்னார் நினைவாக அமையும் ஆலயங்கள் 'பள்ளிப் படை' எனப்பெறும். இவ்வூரில் அத்தகைய பள்ளிப்படைகள் இருந்தமையினால் இவ்வூர் ''பள்ளிப்படை விக்கிரமசோழச் சதுர்வேதி மங்கலம்'' எனப்பட்டுள்ளது.

சுங்கம் தவிர்த்த சோழப் பேராறு:

குலோத்துங்க சோழனின் 14-ஆவது ஆண்டில் (கி.பி. 1084) ஆடுதுறைத் திருக்கோயிற்கு திருவிளக்குக் கொடை தரப்பெற்றமையை ஒரு சாசனம் கூறுகிறது. இச் சாசனத்தில் தானமான்ய நிலவெல்லைகள் குறிக்கும் பகுதியில் 'சுங்கம் தவிர்த்த சோழப் பேராறு' என்னும் ஓராறு கூறப்பெற்றுள்ளது.

சோழப் பெரு மன்னனான முதல் குலோத்துங்கன், 'சுங்கவரியை நீக்கியமையால்' சுங்கம் தவிர்த்த சோழன் எனப் பெற்றான். 'தவிராத சுங்கம் தவிர்த்தோனாகிய' இவ்வரசர் பெருமானின் சிறப்புப் பெயர் ஒரு பேராற்றுக்கு இடப்பெற்றுள்ளது. ஆடுதுறைக் கருகில் பாய்வன காவிரி, வீரசோழன் என்னும் இரண்டு பேராறுகளேயாகும். இவற்றுள் குலோத்துங்கனிச் சிறப்புப் பெயரால் அழைக்கப் பெற்ற ஆறு எது எனக் காண்போம்.

முதற் பராந்தகன் என்பான் சோழ அரசருள் ஒருவன். இவன் 907-953-ல் அரசாண்டவன். இவனுக்கு 'வீரசோழன்' என்னும் பெயர் இருந்தது. இவன் இராட்டிரகூட அரசனான மூன்றாம் கிருஷ்ணனை வென்றமையால் இவன் வீரசோழன் எனப்பெற்றான் என்பது கன்னியாகுமரிக் கல்வெட்டில் கண்டது. இவ்வரசனுக்கே 'குஞ்சரமல்லவன்' என்ற பெயரும் உண்டு. அப்பெயர் திருப்பனந்தாளுக்கருகில் ஓடும் மண்ணியாற்றின் பழம் பெயர். எனவே இவ் இரண்டு ஆறுகளும் முதற் பராந்தகனால் வெட்டப் பெற்றனவாதல் உறுதி. இவ்வீரசோழன் ஆறே முதலாம் குலோத்துங்கன் காலத்தில் சுங்கம் தவிர்த்த சோழப் பேராறு எனப்பெற்றது எனலாம்.

வேறொரு சாசனமும் இதனை உறுதி செய்தற்குதவும். இதே கோயிலில் உள்ள இரண்டாம் இராசராசசோழனின் பதினாறாமாண்டுக் (1162)க்குரிய சாசனமொன்றும் இவ்வரலாற்றைக் குறிக்கிறது. நிலதானம் கூறும் இச்சாசனத்தின் இடையிடையே சிமென்ட் பூசப்பட்டுள்ளமையால் முற்றிலும் வாசிக்க இயலவில்லை. ஒருவன். ''திருக்குரங்காடுதுறையில் சுங்கம் தவிர்த்தசோழப் பேராற்றுக் குத்தென்கரைப்பட்ட நிலம்'விலைகொண்டான்

இந்நிலம் இத்தேவர் தேவதான நிலத்துக்கு மேற்கிலும், தெற்குநோக்கிப் போன பெரு வழிக்குக் கிழக்கிலும், சுங்கம் தவிர்த்த சோழப் பேராற்றுக்குத் தெற்கிலும் அமைந்திருந்தது. இவ்வேறாமாவினை விலைகொண்ட அவன், 'குளம் கவ்வித் தான் வேண்டின தன்மம் செய்யக் கடவனாக' 20 காசுகளைத் தந்தான். இக்காசு வட்டிக்கு வட்டியாக ஆண்டுதொறும் அளக்கப்பட்ட மூன்று கலனே நூணிப்பதக்கு நெல் கொண்டு அறப்பணி நிகழ்த்தப்பட்டது என இச்சாசனம் கூறுகிறது. இச்சாசனம் வாயிலாக நோக்கின் இவ் ஆறு வீரசோழனாதல் பெறப்பெறும்.

குலோத்துங்களின் 28, 29-ஆம் ஆண்டுச் சாசனங்களும் விளக்கு நிபந்தங்களை விளக்குவனவேயாகும். 29-ஆம் ஆண்டுச் சாசனம் இவ்வூர், 'பூபாலகுலவல்லி வளநாட்டில் திரைமூர் நாட்டில் இருந்தது' எனக்கூறும். இதனுள் நிலவெல்லைகூறும் பகுதியில் 'சுங்கம் தவிர்த்த சோழப் பேராறு' குறிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சாசனங்களில் இரண்டாம் இராசராசன் காலத்திய *(1146-1163)* சாசனமே காலத்தால் பிற்பட்டதாகும். இதன்பின்னர் அரசு புரிந்த வேந்தர் தம் காலத்தைச் சார்ந்த சாசனங்கள் ஏதும் இங்கில்லை என்பது அறியத்தக்கதோர் குறிப்பாகும்.

தொகுப்புரை:

இதுகாறும் கூறியவற்றால், ''ஆடுதுறை ஆபத்சகாயேச்வரர் திருத்தளி பல்லவர் காலத் தொன்மையுடையது.; இது உத்தமசோழன் காலத்தில் கி. பி. 985-86-ல் கற்றளியாகியது. செம்பியன் மாதேவி இத்திருப்பணி புரிந்தாள். இவள் பாண்டியர் கால நிவந்தங்களையும் கல்வெட்டாக்கினாள். இக்கோயிலின் பெரும் பகுதி வீரராசேந்திரன் காலத்திற்கு முன்பே கட்டப்பெற்றுவிட்டது. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இவ்வூருக்கு அருகில் பாயும் வீரசோழன் 'சுங்கம் தவிர்த்த சோழப் பேராறு எனப் பெற்றது என்னுச் செய்திகள் அறியப் பெறும். செம்பியன் மாதேவியின் கலைப் பாணிக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் இக் கலைக்கோயில் அழகினை கண்டு வணங்கி உய்வுறுவோமாகுக!

இருவருக்கும் இல்லை

இறைவன்பால், நம்மிடம் ஒன்று பெற்றுக் கொள்ள வேண்டும்படியான குறை எதுவும் இல்லை. அங்ஙனமே இறைவனுக்கு வழங்கத்தக்க பொருள் எதுவும் உயிர்களாகிய நம்பக்கலில் இல்லை. இந்த உண்மையை, அபௌருஷேயம் ஆகிய வேதங்களால் நாம் உணரப் பெறுகின்றோம். உயிர்களும் இறைவனுமாகிய இருவருக்குமே, இங்ஙனம் ஓர் இல்லாமை உண்டு என்பதனை உணர்ந்து, அதனால் இறைவனை வென்றிருப்பவர் ஒருவரும் இல்லை. அத்தகைய வெற்றி எளிதாக ஒருவருக்கும் வாய்க்கக் கடவதன்று.

இல்லை இருவர்க்கும் என்றிறையை வென்றிருப்பார்
இல்லை; அஃதொருவர்க்கு எட்டுமதோ?—இல்லை
குறையுடைமை தான் என்று ,கூறினார் இல்லா
மறையுடைய மார்க்கத்தே காண்.

—பிரமேயசாரம்

நம்மிடம் ஒன்றை எதிர்பார்த்திருக்கும் குறைபாடு இறைவனுக்கு இல்லை. அவனுக்கு வழங்கத்தக்க எந்த ஒருபொருளும் நம்மிடம் இல்லை. ஆதலால் அவன் அருளால், அவனிடத்திலேயே நாம் எல்லா நலங்களையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். இறைவனைப் பணிந்து தொழுதல், நமக்கு எல்லாப் பொருள்களும் எளிதில் கிடைக்கும், என்பது கருத்து. வேதமானது எவராலும் கூறப்பெறாமல் இயல்பாகத் தானே தோன்றிய அபௌருஷேயம் ஆதலால், ''கூறினார் இல்லாமறை'' என்றார். வேதநெறி, மறையுடைய மார்க்கம் எனப்பட்டது. 'இறைவனுக்கும் ஒன்று இல்லை' என்றது, பழிப்பது போலப் புகழ்தல். நம்மிடமிருந்து பெறத்தக்க பொருள் எதுவும் இறைவனுக்கு இல்லை என்றது, அவனாலேயே நாம் எல்லாப் பொருள்களையும், நலங்களையும் பெறுதல் வேண்டும் என்னும்உண்மையை வற்புறுத்தியது.

—**ஆசிரியர்,**

சித்திரகூடத்துச் செங்கண்மால்

திரு. பேராசிரியர் ந. சுப்புரெட்டியார், M.A., Ph.D.

எம்பெருமானின் திருவடியின் பெருமையினை எல்லாச் சமயங்களும் போற்றிப் புகழும் ஆயினும், வைணவ சமயம் அவ்வாறு புகழ்வதில் ஒரு தனி ஊற்றத்தைக் காணலாம். ''ஆளவந்தார்' என்று வைணவர்களால் போற்றப்பெறும் யமுனைத்துறைவர் தம்முடைய தோத்திர ரத்தினத்தில் இதன் பெருமையினை அழகுற ஓதியுள்ளார். ''தேனையே உணவாக உடைய வண்டு-'மதுவிரதம்'-தேன்நிறைந்த தாமரை மலர் இருந்து கொண்டிருக்க, அதனை விட்டு, நாவினை நனைப்பதற்கும் போதாமல் இருக்கின்ற தேனையுடைய, முள்ளில் பூவைக் கண்ணாலும் பாராததைப் போன்று, எம்பெருமானுடைய தேனே மலரும் திருவடித் தாமரைகளினுடைய இனிமையில் மனம் அழுந்தின ஒருவன் மற்றொரு அற்ப இன்பத்தை விரும்ப மாட்டான்'' என்கின்றார்!(1) அடுத்த சுலோகத்தில் அவனுடைய திருக்கழல் இணையை வணங்குவதாகச் செய்யும் 'அஞ்சலி'(2)யின் பெருமை அளவிறந்ததென்று அருளிச் செய்கின்றார்.

அடையத்தக்க பொருளாக இருக்கும் எம்பெருமான் அவனை அடையும் வழியாகவும் அமைவான். அவனை அடைவதற்கு எம்பெருமாட்டி புருஷகாரமாக அமைவாள். இது வைணவ தத்துவம். இவர்கள் இருவரும் சேதநரைக் கைவிட்டாலும், எம்பெருமானுடைய திருவடிகள் தம்மைப் பற்றினாரைக் கைவிடா; அவை மிக்க உறுதியுடையனவாகும். இதனைப் ''பிராட்டியும் அவனும் கைவிடினும் திருவடிகள் விடாது, திண்கழலாயிருக்கும்''3 என்று கூறும் முமுட்சுப்படி. இதனைச் சற்று ஆழ்ந்து சிந்திப்போம். பிராட்டியார் சேதநனுடைய துன்ப நிலையைக் கண்டு மனமிரங்கி அவனை ஏற்றுக் கொள்ளுமாறு எம்பெருமானுக்குப் பரிந்துரைக்கின்றார்; புருஷகாரம்செய்கின்றார். இந்த நோக்கமுடைய அவர் சேதநனுடைய குற்றங்களை அவனுடைய திருக்குறிப்பிற்குக் கொண்டு வரமாட்டார் என்பது உறுதியே. ஆயினும், எம்பெருமான் மனத்தில் இவனை ஏற்றுக் கொள்ளும் எண்ணத்தை ஊன்றுவிப்பதற்காக ஒருகால் சில சிறு குற்றங்களை எடுத்துரைத்தல் கூடும். இங்ஙனம் உரைக்கும் முறையில் பிராட்டியார் கைவிடுவர்.

அந்தச் சேதநனிடம் ஊன்றிய அன்பு கொண்ட எம்பெருமானும், தனக்குள்ள வாத்சல்யம் முதலிய குணங்களால் 'என்னடியார் அது செய்யார், செய்தாரேல் நன்று செய்தார்' என்று கூறி அவனை ஏற்றுக் கொள்ள முன் வந்து நிற்பன். ஆயினும், அவனும் ஒருகால் கைவிடுவது உண்டு. இங்ஙனம் சேதநனுக்கு நன்மையே புரியவல்ல இருவரும் கைவிடினும் தம் அழகினால் சேதநனை அப்புறம் செல்லாதவாறு அகப்படுத்திக் கொள்ளும் அவனுடைய 'இணைத் தாமரையடிகளோ' சேதநனை விடாது பற்றிக் கொள்ளும் திண்மை வாய்ந்தன வாயிருக்கும். இதனைத் திருவுள்ளங்கொண்டே நம்மாழ்வாரும்,

> ''ஈறுஇல
> வண்புகழ் நாரணன்
> திண்கழல் சேரே''4

சேஷபூதனுடைய சொருபத்தை நோக்கினாலும் அவன் இறங்குந்துறை எம்பெருமானுடைய திருவடிகளே யாகும். இதைப் பிள்ளை உலக ஆசாரியர் ஓர் அழகிய எடுத்துக்காட்டால் விளக்குவர். ''சேஷிபக்கல் சேஷபூதன் இழியுந்துறை, ப்ரஜை முலையிலே வாய் வைக்குமாப் போல''5.

(சேஷி-தலைவன்; சேஷபூதன்-அடியான்; ப்ரஜை-குழந்தை).

பாலுண்ணும் பச்சைப் பசுங்குழவி எங்ஙனம் அன்னையின் பிற உறுப்புக்கள் யாவையும்விட்டு, தான் உயிர் வாழ்வதற்கு இடனாக உள்ள அவளுடைய கொங்கையிலே வாய் வைக்கின்றதோ அங்ஙனமே தலைவனாகிய எம்பெருமானைப் பற்றப்புகும் அடியானும் எம்பெருமானுடைய பல உறுப்புகளையும் விட்டு, தான் உய்வதற்கு இடனாய் உள்ள அவனுடைய திருவடிகளையே

---

1. தோத்திரரத்னம்—27.

2. அஞ்சலி-அஞ்ஜலி. கைகளைக் கூப்புவதற்கு அம்ஜலி என்று பெயர். இச்செய்கை (அம்-ஜலயதி) எம்பெருமானை நீர்ப்பண்டமாக உருகச் செய்தலால் இதற்கு இப்பெயர் வந்தது. இஃது ஓர் அடையாளமாகும்.

3. முமுட்சுப்படி-146.

4. திருவாய்மொழி 1.2:10

5. முமுட்சுப்படி-147

6. இது கடலூர்-மாயூரம் இரயில்வண்டிப் பாதையில் உள்ளது.

பற்றுகின்றான். குழந்தை முலையைப் பற்றுதலும், அடியார்கள் திருவடியைப் பற்றுதலும் அவரவருடைய சொரூபத்திற்கு இயல்பாய் அமைந்ததாகும்.

அயிந்தை அண்ணலைச் சேவித்த நாம் சித்திரகூடத்துச் செங்கண்மாலை வழிபடும் நோக்கத்துடன் கடலூரிலிருந்து சிதம்பரத்தை நோக்கி இரயில் வண்டியில் வருங்கால் இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் அலைபாய்ந்த வண்ணம் உள்ளன. இந்நிலையில் சிதம்பரம் நிலையத்தில் 6 இறங்கி நிலையத்தின் அருகிலுள்ள விடுதிக்குச் செல்லுகின்றோம். நன்னீராடித் தூய ஆடைகளை உடுத்திக் கொண்டு தில்லைச் சித்திரகூடம் என்ற திருக்கோயிலுக்குப் போகச் சித்தமாகின்றோம். போகும் போதே திருக்கோயிலின் பெயர் ஆராய்ச்சியில் நம்மனம் ஈடுபடுகின்றது.

ஆதியில் இத்தலம் 'தில்லை' என்ற ஒரு வகைப் புதர்ச் செடிகள் நிறைந்த வனமாயிருந்தமையின் 'தில்லை' என்ற பெயர் பெற்றது. 'சித்திரகூடம்' என்பது விசித்திரமான சிகரங்களை உடையது எனப் பொருள் படும். காரணப்பெயர். இஃது இராமபிரான் வனவாசம் செய்த காலத்து அவனது திருவுள்ளத்திற்கு மிகவும் பாங்காயிருந்ததொரு மலை; அதனைப் போலவே இத்தலமும் எம்பெருமானுடைய திருவுள்ளத்திற்கு மிகவும் பாங்காயிருப்பது பற்றி அப்பெயரே இதற்கு இடப் பெற்றதுபோலும்.

இந்தச் செய்தியை நினைத்தவுடன் சீதாப் பிராட்டியுடன் இராமபிரான் சித்திரகூட மலையில் இருந்தபொழுது பிராட்டி பெருமானைச் சித்திரகூடக் காட்சிகளைக் காட்டுவதாக அமைந்த கம்பன் பாடல்களில் ஆழங்கால்படுகின்றோம். திருமணமானவுடன் அயோத்தியை அடைந்து, அரக்கர் பாவத்தாலும் அல்லவர் இயற்றிய தவத்தாலும் நாடாளும் பொறுப்பைவிட்டுக் கானாளச் சென்ற காகுத்தனின் தேன்நிலவுக் காட்சிகளன்றோ இவை? இக்காட்சிகள் ஒவ்வொன்றாக மனத்திரையில் தோன்றி மறைந்து கொண்டிருக்கும் நிலையில் இந்தத் திருக்கோயிலுக்குப் போகுமாறு ''தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்மின்களே'' என்று ஒருமுறைக்கு ஒன்பதுமுறையாக ஆற்றுப்படுத்தும் திருமங்கையாழ்வாரின் பாசுர ஒலி, நம் சிந்தையில் ஒலித்துக் கொண்டிருக்க நாம் கீழைக் கோபுர வாயிலை அடைகின்றோம். பல மண்டபங்களையும் தாண்டி எம்பெருமான் சந்நிதிக்கு வருகின்றோம்.

இங்கு அர்ச்சாவதார நிலையில் கோயில் கொண்டிருப்பவரே தில்லைக் கோவிந்தராசர். சித்திரகூடத்துச் செங்கண்மால். இவர் தில்லைச் சிற்றம்பலவனின் திருநடனத்தை அறிதுயில் கொண்ட நிலையில் அநுபவித்து மகிழ்கின்றார். கோயில் என்றால் வைணவர்கள் திருவரங்கத்தையும், சைவர்கள் சிதம்பரத்தையும் குறிப்பது மரபு. இந்தப் பெயர் ஒற்றுமை கருதியே திருஅரங்கத்தில் அறிதுயில் கொண்டுள்ள அரங்கநாதனைப்போல், கோவிந்தராசரும் இங்கு வந்து காலை நீட்டிப் படுத்துக்கொண்டார். போலும். தில்லைச் சிற்றம்பலவனும் மனம் ஒப்பித் தமது பெரிய மாளிகையில் கனக சபைக்கு அருகிலேயே ஒருபகுதியை ஒதுக்கித் தந்து மகிழ்கின்றான் போலும். தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவரும் ஆனந்தக் கூத்தனைச் சேவிப்பதுபோலவே கோவிந்தராசரையும் சேவிக்கின்றனர். இதனை,

> மூவாயிர நான்மறை யாளர் நாளும்
> முறையால் வணங்க அணங்காய சோதி
> தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
> திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே 7

என்று திருமங்கையாழ்வாரும், ''தில்லை நகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள் அந்தணர்கள் ஒரு மூவாயிரவர் ஏத்த'' 8 என்று குலசேகரப்பெருமாளும் குறிப்பிட்டிருப்பதால் அறியலாம். இவற்றால் ஆழ்வார்கள் காலத்தில் கோவிந்தராசரின் வழிபாடுகள் தில்லை மூவாயிரவரான தீட்சிதர்களிடமே இருந்திருக்கக் கூடும் எனக் கருத இடந்தருகின்றது. சில நூற்றாண்டுகட்குப் பின்னர்தான் (கி.பி. 1543-ல்), தனிப்பட்ட வழிபாடுகள் ஏற்பட்டனவாக அறியக் கிடக்கின்றது. இந்தக் கோவிந்தராசரைக் குலசேகராழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

குலசேகரர் இராமாவதாரத்தில் மிகவும் ஈடுபட்டவர் என்பது எல்லோரும் அறிந்த செய்தியாகும். தசரதச் சக்கரவர்த்தி இராமனைப் பிரிந்த அளவில் ''புலம்பிய புலம்பல் தன்னை''9 இரங்கிப் பேசின பேச்சுகளின் வடிவமாக ஆழ்வார் அருளிச் செய்த திருமொழியால் இதனை அறியலாம்.

> ''கொல்லணைவேல் வரிநெடுங்கண் கௌசலைதன்
> குலமதலாய்! குனிவில் ஏந்தும்
> மல்லணைந்த வரைத்தோளா! வல்வினையேன்
> மனம்உருக்கும் வகையே கற்றாய்;
> மெல்லணைமேல் முன்துயின்றாய்; இன்றினிப்போய்
> வியன்கான மரத்தின் நீழல்
> கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ?
> காகுத்தா! கரிய கோவே! (10)

இதில் ஆழ்வார் தன்னைத் தயரதனாகவும் இராமபிரானைத் தன் மகனாகவும் நினைத்துப் புலம்பும் பாசுரம் கல்நெஞ்சத்தையும் கரைக்கும் தன்மையதாக அமைந்திருப்பதைக் கண்டு மகிழலாம். ஒரு சமயம் இராமாயணக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தபொழுது இராமபிரான் எண்ணிறந்த சேனையோடெரித்த கரதூடணாதியரை யாதொரு துணையுமின்றி எதிர்த்துப் போருக்குச் சென்றார் என்ற கட்டத்தில் கதைவரும்போது, ஆழ்வார் அந்நிகழ்ச்சி அன்று தான் நடைபெறுவதாக நினைத்துத் தம் சேனை

---

7. பெரிய திருமொழி-3.2:8.
8. பெருமாள் திருமொழி 10:2.
9. பெருமாள் திருமொழி 10:11.
10. பெரு. திரு. 10:2.

களையெல்லாம் போருக்குச் சித்தமாய் முன் செல்லுமாறு பணித்தார். என்றும், சிறந்த சிந் தனையாளராகக் கதைசொன்ன புராணிகர், பகைவர்கள் அனைவரையும் தாம் ஒருவராகவே போர்செய்து வென்றார் என்றும், ஆழ்வாரும் சேனையைத் திருப்பிக்கொண்டு பயணத்தை நிறுத்தினார் என்றும் வழங்கும் செவிவழிச் செய்தியும் இவரது இராமபக்தியின் உறைப் பினைத் தெளிவுறுத்துகின்றது.

தில்லைக் கோவிந்தராசரை ஆழ்வார் இராமபிரானாகவே காண்கிறார். அர்ச்சாவ தார மூர்த்தியை விபவாவதாரமாகவே கண்டு மகிழ்கின்றார். இராம பிரானது வரலாற்றை வால்மீகி பகவான் பேசி யனுபவித்ததைப் போலவே தாமும் பேசி அனுபவிக்கின்றார் ஒரு திருமொழியில். ஆழ்வாரின் மனத்திரையில் இராம பிரான் 'உலகனைத்தும் விளக்கும்சோதி யாகவும், 'வெங்கதிரோன் குலத்து விளக்காக' வும், 'செங்கண் நெடுங்கருமுகிலா' கவும், 'விண் முழுதும் உயக் கொண்ட வீரனா' கவும் காட்சி அளிக்கின்றார். அப்பெருமானை 'எங்கள் தனி முதல்வன்' என்றும், 'எம்பெருமான்' என்றும் போற்றிப் புகழ்கின்றார்.11. இராமபிரானின் வாழ்க்கையில் நேரிட்ட ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியும் ஆழ்வாரின் மனத்திரையில் இடம் பெறுகின்றது. தாடகைவதம், விசுவாமித்திரது வேள்விகாத்தல், வேள்விக்கு இடையூறு விளை வித்த சுபாகுவை வானுலகுக்கேற்றல், மாரீ சனைக் கடலில் தள்ளல் போன்ற நிகழ்ச்சிகள் நினைவிற்கு வருகின்றன.12. இவற்றிற்குத் துணையாக அமைந்த கோதண்டத்தை 'எவ் வரு வெம்சிலை' என்று போற்றுகின்றார். இதனை ''வேறொருத்தரால் அடக்கியாள வொண்ணாதே காணவே ப்ரதிபட்சம் முடியும் படியான ஸ்ரீசார்ங்கம்'' என்று வியாக்கியான மும் போற்றுகின்றன. 'இராமன் தன்னை இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சினேனே' என்று தனது அவாவையும் வெளியிடுகின்றார். இராமபிரானுக்கு அடியவனான பரதாழ்வா னுக்கு அடிமைபூண்டொழுகிய சத்துருக்கனன் போலப் பாகவத தாசனாக வேண்டுமென்பது ஆழ்வாரின் பேரவா.

பின்னர்ச் சனகன் கன்யாசுல்கமாக வைத் திருந்த வில்லையிறுத்து மைதிலியை மணந்து அயோத்திக்குத் திரும்பும்போது எதிர்வந்து தோன்றின, தான் அவதரித்த க்ஷத்திரிய சாதி யினரின் பகையாக இருந்த பரசுராமனைப் பங் கப்படுத்தல் போன்ற செயல்கள் இவர் மனத் திரையில் தோன்றுகின்றன.13.அடுத்துக் கைகே யியின் சொற்படி வழிவழியாக வரும் அரச பாரத்தைக் கைவிட்ட நிகழ்ச்சி, குகப்பெரு மான் நாவாய் செலுத்தி உதவின செய்தி, பரதாழ்வானுக்கு மரவடியையும் அரசபாரத் தையும் நல்குதல் ஆகியவற்றில் ஆழங்கால்பட்டு மகிழ்கின்றார். இராமபிரானும் சீதாப்பிராட்டி யும் சித்திரகூட மலையில் உலவி வீற்றிருக்கும் காட்சி, ஆழ்வாரின் நினைவிற்கு வருகின்றது. இக்காட்சியை நேரில் கண்குளிரச் சேவிக்கப்பெறு பவர்கட்கு நித்திய சூரிகளும் சிறிதும் சமமா கார் என்று கருதுகின்றது இவரது பக்தித் திரு வுள்ளம்.14.

இங்ஙனம் எண்ணிய நிலையில் விராதனை விண்ணுக்கேற்றல், அகத்தியரிடமிருந்து இராம பிரான் கொடுத்து வைத்திருந்த பரசுராமனி டம் பெற்றவில்லை வாங்குதல், சூர்ப்பணகை யின் மூக்கையறுத்தல், கர-தூடணர் உயிர் வாங்குதல் ,மாயமானாய் வந்த மாரீசனை அழித்தல்போன்றசெய்திகளும் 15,தொடர்ந்து வைதேகியைப் பிரிந்ததால் இராமபிரானுக்கு ஏற்பட்ட வருத்தம், கால் தளர்வெய்துதல், சடாயுவுக்கு வீடுபேறுஅளித்தல், சுக்கிரீவனு டன் நட்புக்கொள்ளமல், வாலியை வானுல கிற்கு அனுப்புதல், மாருதியால் இலங்கையைச் சுடுவித்தல் போன்ற நிகழ்ச்சிகளும் 16, இவற்றை அடுத்துக் குரைகடலை அடலம்பால் மறுக எய்தல், சேது அமைத்து இலங்கையை அடைதல், இராக்கதர்களையும் அவர்களுடைய அரசன் இராவணனையும் கொன்றழித்து வீட ணனுக்கு ஆட்சியை ஈதல் போன்ற நிகழ்ச்சி களும் 17, பின்னர் அயோத்திக்கு மீண்டும் வந்து ஆட்சியை அடைதல், இராவணனின் தொல் கதையை அகத்தியன் வாயால் கேட் டல், மைதிலி பெற்றெடுத்த தன் மைந்தர் களான குசலவர்களின் செம்பவளத் திரள் வாயால் தன் வரலாற்றைக் கேட்டல்போன்ற நிகழ்ச்சிகளும்18, சம்புகவதம், அந்தணகுமா ரனுடைய உயிர் மீட்டல்,அகத்தியர் அளித்த மணிமாலையை அணிதல், சத்துருக்கனனைக் கொண்டு இலவணாசுரனைக் கொல்வித்தல், துருவாசரின் சாபத்தால் இளையபெருமாளைத் துறத்தல் போன்ற நிகழ்ச்சிகளும் 19, தான் சோதிக்கு எழுந்தருள்கின்ற நாளில் முன்னதாக அயோத்தி மக்களையும், பிற உயிர்களையும் வைகுந்தத்திற்குப் போகச் செய்தல், கருடாழ் வான்தாய் நித்திய சூரிகளும், முக்தர்களும் எதிர்கொள்ள ஆதி இடமான பரமபதத்திற்கு எழுந்தருளல் போன்ற நிகழ்ச்சிகளும் 20, ஒன்றன்பின் ஒன்றாகப் படக் காட்சியில் காண்பது போல் ஆழ்வாரின்மனத்திரையில் காணப்பெறுகின்றன. தில்லைத் திருச்சித்திர கூடத்தில் எழுந்தருளியிருக்கும் கோவிந்தராசர் அவ்விராமபிரானே என்று கருதித் துதித்துய்யு மாறு அறிவுறுத்துகின்றார். இப்பெருமானைத் தலைவணங்கி அஞ்சலி செய்து சேவிக்கப்பெற் றோர் நடமாடுவதால் இந்நிலம் பெறும்பேறு பெற்றது என்றும்; இப்பெருமானின் திருவடி களைத் தலைமேற்கொள்ளலாகிய அரசினைப் பெற விரும்புவதன்றி அதற்குமாறாகச் சுவா

---

11. பெரு. திரு. 10:1.
12. பெரு. திரு. 10:2.
13. ஷை 10:3.
14. பெரு. திரு. 10:4.
15. பெரு. திரு. 10:5.
16. ஷை 10:6
17. ஷை 10:7
18. ஷை 10:8
19. ஷை 10:9.
20. ஷை 10:10.

தந்திரியம் பாராட்டுகின்ற அரசினை ஒரு பொருளாகத் தான் மதிக்கவில்லை என்றும், எக்களிப்புடன் பேசுகின்றார் தம் பாசுரங்களில். இராமகாதை முழுவதும் சுருக்கமாக நமக்குக் காட்டப்பெறுகின்றது இத் திருப்பாசுரங்களில்.

நடுநாட்டுத் திருப்பதிகளான திருக்கோவலூரையும், திருவயிந்திரபுரத்தையும் மங்களாசாசனம் செய்தருளின பின்னர், சோழநாட்டுத் திருப்பதிகளை மங்களாசாசனம் செய்யத் திருவுள்ளம் பற்றின திருமங்கையாழ்வார், தில்லைத் திருச்சித்திரகூடத்தில் முதல் முதலாக இழிகின்றார். இத்திருப்பதியின் எழிலார்ந்த சூழ்நிலை இவர் மனத்தைக் கவ்வுகின்றது. ''சேமங்கொள் பைம்பூம் பொழில் சூழ்ந்து தில்லைத் திருச்சித்திரகூடம்'' 21 என்றும், ''தெய்வப்புனல் சூழ்ந் கழகாய தில்லைத் திருச்சித்திரகூடம்''22 என்றும், ''சேடுயர் பூம்பொழில் தில்லைச் சித்திரகூடம்''23 என்றும் வருணிக்கின்றார். ஊரைச் சூழ்ந்த சோலைகளில் மயில் கூட்டங்கள் ஆடுகின்றன; அவை சோலைகளே ஆடுவது போல் காட்சி அளிக்கின்றன. தீர்த்தங்கள் மதுவோடு கூடிப் பெருகுவதால் மதுவின் நசையால் வண்டுகள் திரளாக மொய்க்கின்றன. அருகில் வெள்ளாறு (நிவா என்று குறிப்பிடுவர் ஆழ்வார்) தில்லையை வலங்கொண்டு வருகின்றது. இந்த ஆறு யானைக் கொம்புகளையும், சந்தன மரங்களையும் தள்ளிக்கொண்டு பெருக்கெடுத்து வருங்கால், முத்துக்களைக் கொழித்துக் கொண்டுவந்து கழனிகளில் தள்ளும்; அந்த முத்துக்கள் விதைவிதைத்தது போல் காட்சி அளிக்கும். அவற்றைக் கயல்கள் கண்டு 'இவை என்னவோ?' என்று வெருவித் தாவித் திரியும் 24. ஊரோ செம்பொன் மணிமாடங்கள்நிறைந் திருப்பது. நான்மறையாளர்கள் நாடோறும் தீ வளர்த்து வைதிக கருமங்களைத் தவறாது செய்துவரும் ஊர். இத்திருத்தலத்தில் மூலவர் திருப்பாற்கடல் நாதன்போல சயனத் திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளார். இவர் திருநாமம் கோவிந்தராசர்; தாயார் கமலவல்லித் தாயார். விமானம் சாத்வீக விமானம்.

வீடுபேற்றை அவாவும் முமுட்சுக்கள் ஊண் உண்ணாது நீரையும் காற்றையுமே உட்கொண்டு உயிர்காத்துப் புலன்களை ஒடுக்கித் தவம்புரிகின்றனர். சிலர் இளங்காய்களையும் நெடுநாள் உலர்ந்த பழங்களையும், வீசுகின்ற வெப்பமான காற்றையும் உட்கொண்டு நின்று தவம் செய்கின்றனர். 25. இவர்களைக் கண்டு கழிவிரக்கம் கொண்ட திருமங்கையாழ்வார் தில்லைத் திருச்சித்ரகூடம் சென்று சேருமாறு கூறி, ஆற்றுப்படுத்துகின்றனர். இத் திருத்தலம் சென்று சேர்ந்தால் பரமபுருஷார்த்தம் எளிதாகக் கிடைக்கக் கடவதாயிருக்க 'அரிய வழிகளை மேற்கொள்வது ஏன்?' என்று கேட்கின்றனர். ஆழ்வார் இத்தலத்து எம்பெருமானை மங்களாசாசனம் செய்யும்போது பல விபவாவதாரப் பெருமான்களை அநுசந்திக்கின்றார்; அவர்களுடைய வீரச் செயல்களிலும், விசித்திர செயல்களிலும் ஆழங்கால் படுகின்றார். ஒரு காலத்தில் இந்த வையம் பரந்தகடல் வெள்ளத்தில் மூழ்கிப்போக அப்பொழுது மிக்க சினங்கொண்ட வராகத் திருவுருவமாகி அதைத் தன் கோட்டால் தூக்கிக் கொணர்ந்தவன்; 26 அழகிய வாமன உருவங்கொண்டு மாவலியின் வேள்வி நிலத்திற்குச் சென்று மூவடிமண்இரந்து பெற்றவன் 27. இருபத்தொரு தலைமுறை சத்திரியர்களைக் கொன்றொழித்த பெருமான் 28. வருணனின் உதாசீனத்தால் அணைகட்ட வாராததுகண்டு, அவன்மீது சினங்கொண்டு 'அனைவரும் நடந்தே செல்லும்படி கடலை வற்றச் செய்வேன்' என்று கூறிப் பொங்கி எழுந்து, வருணனைச் சரணடையச் செய்து சேதுகட்டியவன் 29. இலங்கை நகரை ஓரம்பால் அழித்தவன்;30. பிரகலாதாழ்வான் பொருட்டு நரசிம்ம உருவத்துடன் தோன்றி அவன் தந்தை இரணியனை அழித்தவன் 31. இத்தகைய எம்பெருமான்தான் சித்திரகூடத் திருப்பவன் என்கின்றார் ஆழ்வார்.

கிருஷ்ணாவதாரத்திலும் அதிகமாக இழிந்து அவ்வவதாரத்தில் நிகழ்த்திய பல அற்புதச் செயல்களை நினைந்து போற்றுகின்றார். ஆழ்வார் நப்பின்னைப் பிராட்டிக்கும் பெரிய பிராட்டியார்க்கும் கொழுநன்; குதிரை வடிவாக வந்த கேசி என்னும் அசுரனைப் பிளந்து கொன்றவன்.32. இரட்டை மருதமாங்கனிகளிடையே தவழ்ந்து அவற்றை முறித்துத் தள்ளியவன்; கோவர்த்தன மலையைக் கொற்றக் குடையாக எடுத்து ஆயர்கட்கும் ஆநிரைக்கும் வந்த துன்பத்தைக் காத்தவன்; அழகிய பெண்ணுருவம் கொண்டுவந்து நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்ல முயன்ற பூதனையின் உயிர்குடித்தவன்; 'அறியாதார்க்கு ஆனாயனாகிப்போய், ஆய்ப்பாடி, உறியார்நறுவெண்ணெய் உண்டு உகந்தவன்; நப்பின்னை பொருட்டு ஏழு கொல்லேறுகளைத்தொலைத்து திருவாய்ப்பாடியின் தெருவில் கூத்தாடியவன்; குவலயாபீடம் என்னும் களிற்றின் கொம்புகளிரண்டையும் சேற்றிலிருந்து முள்ளங்கியைப் பிடுங்குவதுபோல் பிடுங்கி அவற்றையே ஆயுதமாகக் கொண்டு அக்களிற்றினையும் அதன் பாகனையும் உயிர்தொலைத்தவன் .33 இத்தகைய எம்பெருமான் பின்னானார் வணங்கும் சோதியாக, கோவிந்தராசனாக, திருத்தில்லையில் கோயில் கொண்டுள்ளதாக நம் ஆழ்வார் அநுசந்தித்து அநுபவிக்கின்றார். இவரை

21. பெரிய . திரு.35.2:
22. ஷ 3.2:7
23. ஷ 3.3:1
24. ஷ 3.2:7,8
25. ஷ 3.2:1,2.
26. ஷ 3.2:3
27. ஷ 3.2:4
28. ஷ 3.2:5
29. ஷ 3.2:6
30. ஷ 3.3:6
31. ஷ 3.3:8
32. ஷ 3.2:7,8; 3.3:1.
33. ஷ 3.3:1-7.

நாம் இன்று வணங்கி வாயாரத் துதித்து வாழ்த்துகின்றோம்.

ஆழ்வார் தம் பாசுரங்களில் 'வருகின்றான்' 'வருவான்' என்று அருளிச் செய்திருப்பதனால் அவர் இத்திருப்பதிக்கெழுந்தருளின சமயம் பெருமாளுக்குத் திருவீதிப் புறப்பாடாக இருந் திருக்கலாமென்று சிலர் கருதுவர். இதனை நிலைநிறுத்த,

''கருமுகில் போல்வதோர்மேனி
கையனஆழியும் சங்கும்
பெருவிறல் வானவர்சூழ
ஏழுல கும்தொழு தேத்த
ஒருமக ளாயர் மடந்தை
ஒருத்தி நிலமகள் மற்றைத்
திருமக ளோடும் வருவான்
சித்திர கூடத் துள்ளானே (34)

என்ற பாசுரத்தைக் காட்டலாம். திருமேனி காளமேகம் போன்றுள்ளது. அதற்குப் பொலிவு தருவனபோல் திருக்கைகளிலுள்ள திருவாழி திருச்சங்குகள் ஒளிர்கின்றன. இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாங்கள் சுற்றிலும் சூழ்ந்து வருகின்றன. மற்றுமுள்ளாரும் தொழுது துதிக்கின்றனர்; ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவி என்ற நாச்சிமார் மூவரும் எம்பெருமானும் எழுந்தருளியுள்ளனர். இப்படிப்பட்ட விபரம் பொலியப் புறப்பட்டெழுந்தருளா நின்றனன் எம்பெருமான் என்று கண்ணாரக் கண்டு வாயாரப் பேசுகின்றார் ஆழ்வார்.

இந்த நிலையில் திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் பாசுரம், நம் நினைவுக்கு வருகின்றது.

அடியால் உலகெல்லாம் அன்றளந்து கொண்ட,
நெடியானைக் கூடுதியே நெஞ்சே-கொடிதாய
குத்திரகூ டங்கி கொளுந்தாமுன் கோவிந்தன்
சித்திர கூடம் கருதிச் செல்.

(நெடியான்-திரிவிக்கிரமன்; குத்திரம்-இழி குணம்; கூடு-உடல்; அங்கி-நெருப்பு; கொளுந் தாமுன்-எரித்து விடுவதற்குமுன்)

இறப்பதற்கு முன்னர் சித்திரகூடம் சென்றால் தில்லைக்கோவிந்தனை வழிபட்டு நற்கதிஅடையலாம் என்று தம் நெஞ்சிற்கு அறிவூட்டுகின்றார் இப்பாசுரத்தில். கோவிந்தன் என்ற திருநாமம் பசுக்களைக் காத்தவன், உயிர்களை அடிமையாக உடையவன், கதிரவனின் கதிர்களில் தங்கியிருப்பவன், நான்மறையை நான்முகனுக்கு உபதேசித்தவன், வராக அவதாரம் செய்து பூமியை அடைந்தவன் என்ற பொருள்களை யெல்லாம் தாங்கி நிற்கின்றது என்பதை நாம் சிந்திக்கின்றோம். மணிவாசகப் பெருமானும் கோவிந்தராசரின் சயனத் திருக்கோலத்தைக் குறிப்பிட்டுள்ளமை, இங்கு நம் நினைவிற்கு வருகின்றது.35.

34. ஷை 3.3:7.
35. நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி-22.
36. திருக்கோவையார்-86.

நிரயமும் வானும்

ஆசாரியர்கள் நமக்குச் செய்தருளும் நலங்களுக்கு ஓர் அளவில்லை. நாம் உய்தி பெறுவதற்காக ஆசாரியர்கள் தம் திருவடிகளைத் தஞ்சமாகக் காட்டிக் கொடுத்து அருள்புரிகின்றனர். இத்தகைய ஆசாரியரை ,நாம் நம்முடைய இறைவனின் திவ்விய மங்களத் திருவுருவம் என்றே தெளிந்து கொண்டு, வணங்கி வழிபாடு செய்து வருதல் வேண்டும். அங்ஙனம் வழிபாடு செய்யாத பித்தர்களாக மாறி, ஆசாரியர்களை நிந்தனை செய்பவர்களுக்கு, ஒருநாளும் கரையேற முடியாத, உலகியல் வாழ்க்கைப் படுகுழியாகிய நரகமே கிடைக்கும். அங்ஙனமின்றி ஆசாரியர்களை நெறிமுறை தவறாது அன்புடன் வணங்கி வழிபடும் நல்லவர்களுக்கு, என்றும் மீட்சியில்லாத வைகுண்டமாகிய பேரின்பத் திருநாடு எளிதாகக் கிடைக்கும்.

தத்தம் இறையின் வடிவென்று, தாள்இணையை
வைத்த அவரை வணங்கிஇராப்—பித்தராய்
நிந்திப்பார்க்கு உண்டு, ஏறா நீள்நிரயம்; நீதியால்
வந்திப்பார்க்கு உண்டு, இழியா வான்

—பிரமேயசாரம்

ஆசாரியரை வந்திப்பவருக்கு வானுலக இன்பமும், நிந்திப்பவர்களுக்கு நரகத் துன்பமும் வாய்க்கும் என்பது இச்செய்யுளால் உணர்த்தப் பெறுகின்றது. ''தாள் இணையை வைத்த அவர்'' என்றது, ஆசாரியரைக் குறிக்கும். ''தம்திருவடியை நம் தலைமேல் வைத்து அருள் புரிந்தவர்'' என்றும்; இறைவனின் திருவடிகளை நம் தலையின் மேலும் வைப்பித்தவர் என்றும்; இருவகையில் இத்தொடருக்குப் பொருள் கொள்ளலாம். இவற்றிற்கு முறையே ''மருளாம் இருள்ஓட மத்தகத்துத் தன்தாள் அருளாலே வைத்தவர்'' என்பதும், ''இராமாநுசன் பரன்பாதமும் என் சென்னித்தரிக்க வைத்தான்'' என்பதும், மேற்கோள்கள் ஆகும். 'தம் திருவடிகளை நமக்குத் தஞ்சமாகக் காட்டிக் கொடுத்து வைத்தவர்' என்று கொள்வதும் பொருத்தமாகும்.

—ஆசிரியர்.

அருணகிரிநாதரின் கருணை மொழிகள்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை:

அருணகிரிநாதர், திருப்புகழ் என்னும் தெய்வத் தீந்தமிழ்க் கவிதைகளை அருளிச் செய்த பெருமாட்சிமைக்கு உரியவர். தமிழகத் திலுள்ள முருகனடியார் அனைவரும் அவர்தம் திருப்புகழ்ப் பாடல்களை நாளும் பாடித் துதித்து மகிழ்ந்து வருகின்றனர். ''வாக்கிற்கு அருணகிரி'' என்ற சிறப்பினைப் பெற்ற அப் பெருந்தகையாளர், சந்தநலம் செறிந்த தமது செந்தமிழ்ப்பாடல்களில், முருகப்பெருமானைத் துதித்தது மட்டுமின்றி, அப்பாடல்களின்மூலம் எத்தனையோ பல அரிய பெரிய அருளுபதேசங் களையும் செய்திருக்கின்றார். இறையியல்பு களை அறிந்தது மட்டுமல்லாமல், அவர் உலகமக் களின் பலவேறு இயல்புகளையும்கூட, நன்கு தெரிந்திருந்தார். தமது பாடல்களில் உலக மக்களை அவர்களின் குணம் செயல்களால் பலவகையினராகப் பாகுபடுத்தி, அவர்களின் இழிந்த குணம் செயல்களைக் குறிப்பிட்டு, நம் மனோர் அத்தகையவர்களின் இழிந்த குணம் செயல்களை உடையவர்கள் ஆகாமல், நல் லியல்புகள் உடையவராய், வையத்து வாழ் வாங்கு வாழ்தல் வேண்டுமென, அறிவுறுத்தி அருளுகின்றார்.

ஈனர்கள்:

அம்முறையில் உலகில் ஒரு சில மக்களை 'ஈனர்கள்' என்று குறிப்பிட்டு, அவர்களைப் பட்டியலிட்டுக் கூறி, அவர்களைப்பற்றி நாம் விழிப்பாக இருத்தல் வேண்டும் என்று அருண கிரிநாதர் நமக்கு அறிவுறுத்துகின்றார்: ''கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு உரிய ஊதியத்தைத் தராதவர்கள்; தவம்புரியும் சான்றோர்களுக்கு இடையூறு செய்யும் பாதகர்கள்; அழுக்காறு அவா வெகுளி காமம் முதலிய தீய எண்ணங் ளால் மனம் வெதும்பி, எது நல்லது, கெட்டது என்று தெரியாமல், பாவச் செயல்களையே பயின்று ஊசலாடுகின்ற காளையர்கள்; அரு ளாளர்களாகிய துறவிகள் வாழ்கின்ற இடங் களுக்கு இடர்விளைவிக்கும் அறிவிலிகள்; எத் தகைய பெரியவரையும் இகழ்ந்து பேசித் திரியும் உதாசீனர்கள்; நல்லவர்கள் பாடுபட்டுத்தேடிப் பெற்ற பொருள்களைக் கவர்ந்துகொள்ள முயற்சி செய்பவர்கள்; பிச்சைக்காரர்களுக்குச் சிறிதளவேனும் தானம் புரியாதவர்கள்; அற மன்றங்களில் நடுவுநிலை பிறழ்ந்து, ஒருதலைத் தீர்ப்புக் கூறுபவர்கள், சிவனடியார்களையும், திருமால் அடியார்களையும் இகழ்ந்து ஏளனம் செய்பவர்கள்; ஒரு நெறிப்பட்ட மனத்தினராய் இறைவனைத் தியானம் புரியும் இயல்பு இல்லா தவர்கள்; உலக போகங்களில் ஈடுபட மோகம் கொண்டு, அதற்காகவே அலைந்து திரிந்து கெடுபவர்கள்; ஆகிய இவர்களெல்லாம் ஈனர் கள் எனத்தக்க இழிந்தவர்கள் ஆவர். இந்த ஈனர்கள் அனைவரும் எழுவகை நரகங்களில் கிடந்து துன்புற்று வருந்துவார்கள்''.

ஓது வித்தவர் கூலிகொ டாதவர்,
மாத வர்க்கதி பாதகமானவர்,
ஊச லிற்கன லாயெரி காளையர், மறையோர்கள்
ஊர்த னக்கிட ரேசெயு மேழைகள்,
ஆர்த னக்குமு தாசின தாரிகள்,
ஒடி யுத்தம ரூதிய நாடினர், இரவோருக்
கேது மித்தனை தானமி டாதவர்,
பூத லத்தினில் ஓரம தானவர்,
ஈசர் விஷ்ணுவை சேவைசெய் வோர்தமை யிகழ்வோர்கள்,
ஏக சித்ததி யானமி லாதவர்,
மோக முற்றிடு போகித மூறினர்,
ஈனர் இத்தனை பேர்களும் ஏழ்நர குழல் வாரே!

—திருப்புகழ் (பொது), 1028.

துட்டர்கள்:

மேற்குறித்த ஈனர்களைப் போலவே, உலக மக்களில் துட்டர்கள் என்று குறிப்பிடத்தக்க பலர் உள்ளனர்; ''ஒழுக்கக் குறைபாடு உடை யவர்கள்; நல்லது எதனையும் மறுத்துக் குதர்க் கம் பேசுபவர்கள்; தாய் தந்தையரைப் பழிப்ப பவர்கள்; ஊனுணவு தின்பதற்காகப் பசுக்களைக் கொல்பவர்கள்; பிறர் மனைவியை விரும்புதல் தீங்குபயக்கும் என்று எண்ணாமல், அவர்களைக்

கற்பழித்துப் புணருபவர்கள்; பலவகையான தந்திரங்களைக் கடைப்பிடித்து வஞ்சகம் சூது களவு முதலிய தீச்செயல்களில் ஈடுபடுபவர்கள்; போதை தரும் கள் சாராயம் முதலியவற்றைக் குடிப்பவர்கள்; பிறர் பொருளைச் சிறிதும் கூசாமல் கவர்ந்து, கொள்ளை அடிப்பவர்கள்; ஊர் மக்களின் குற்றங்குறைகளையே எப்பொழுதும் எடுத்துப் பேசிப் பிதற்றிக் கொண்டிருப்பவர்கள்; வில் வாள் முதலிய படைக்கலப் பயிற்சிகளைப் பெற்றுச் செருக்குக் கொண்டு, பிறரை வலிந்து சண்டைக்கு இழுப்பவர்கள்; குருவுக்குப் பணிவிடை செய்யும் பேறு பெறாமல், பாவமும் வீணும் ஆன கொடுஞ்செயல்களையே புரிந்து உழல்பவர்கள்; ஈட்டிய பொருளைச் சிறிதளவும் தானதருமம் செய்யாமல் மண்ணுக் கடியில் புதைத்து வைப்பவர்கள்; ஆகிய இவர்கள் எல்லோரும் துட்டர்கள் எனத் தக்கவர்கள் ஆவர். இவர்களெல்லோரும் நாயினும் கீழான கடைப் பிறப்பில் பிறந்து அலைந்து திரிந்து வருந்துவார்கள்''.

ஆசார வீனக் குதர்க்க துட்டர்கள்,
மாதாபி தாவைப் பழித்த துட்டர்கள்,
ஆமாவி னூனைச் செருத்த துட்டர்கள்,
பரதாரம்
ஆகா தெனாமற் பொசித்த துட்டர்கள்,
நானா உபாயச் சரித்ர துட்டர்கள்,
ஆவேச நீரைக் குடித்த துட்டர்கள்,
தமியோர்சொம்
கூசாது சேரப் பறித்த துட்டர்கள்,
ஊரார்க ளாசைப் பிதற்று துட்டர்கள்,
கோலால வாள்விற் செருக்கு துட்டர்கள்,
குருசேவை
கூடாத பாவத்து அவத்த துட்டர்கள்,
ஈயாது தேடிப் புதைத்த துட்டர்கள்,
கோமாள நாயிற் கடைப்பி றப்பினி
லுழல்வாரே!

—திருநாகேச்சுரம், திருப்புகழ், 883

மூடர்கள்:

ஈனர்களாகவும், துட்டர்களாகவும் உள்ள மக்களைப் போல, உலகில் ஒருசிலர் மூடர்களாகவும் வாழ்ந்து வருகின்றனர்: ''அரகர' 'சிவ சிவ' என்றாற்போலத் தத்தமக்குரிய தெய்வங்களின் திருப்பெயர்களைச் சொல்லாதவர்கள்; தத்தமக்குரிய திருநீறு, திருமண் போன்ற சமயக் குறிகளை அணிந்து வழிபடாதவர்கள்; குருவினுடைய திருவடிகளையும், அடியார்களின் திருவடிகளையும் பூசித்து வணங்காதவர்கள்; அறிவை வளர்க்கும் நல்ல நூல்களைக் கற்காதவர்கள்; ஒரோவழி கற்றிருந்தாலும், அதன்படி ஒழுக்கநெறியில் நில்லாதவர்கள்; செய்யத்தக்க அறங்கள் யாவை, செய்யத்தகாத பாவங்கள் யாவை என்று ஆராய்ந்து பாராமல், தீய செயல்களையே செய்பவர்கள்; இவர்களும், இவர்களைப் போன்றவர்களும், மூடர்கள் எனத் தக்கவர்கள் ஆவர். இத்தகைய மூடர்கள்அனைவரும் எழுவகை நரகங்களில் விழுந்து புரண்டு வருந்தித் துன்புறுவார்கள்''.

அரக ராள னாமூடர், திருவெண்ணீறி டாமூடர்,
அடிகள் பூசியா மூடர், கரையேற
அறிவு நூல்க லாமூடர், நெறியி லேநி லர்மூடர்,
அறம்வி சாரி யாமூடர், நரகேழிற்
புரள வீழ்வர்! ஈராறு கரவி நோத! சேய்! சோதி!
புரண! பூர ணாகார முருகோனே!
புயலு லாவு சேணாடு பரவி, நாளு மீடேறு
புகலி மேவி வாழ்தேவர் பெருமாளே!

—சீர்காழி, திருப்புகழ், 783.

பூரியர்கள்:

உலக மக்கள் அனைவருமே குற்றமுடையவர்கள் அல்லர். அவர்கள் எல்லோருமே குணம் நிறைந்தவர்களும் அல்லர். குணமுடையோர் குற்றமுடையோர் ஆகிய இரு திறத்தினருமே, உலகிற் கலந்து பரவி விரவியுள்ளனர். குணம் நிறைந்தவர்களைச் சீரியர்கள் என்றும், குற்றம் நிறைந்தவர்களைப் பூரியர்கள் என்றும் குறிப்பிடலாம். அருணகிரிநாதப் பெருமான் பூரியர்கள் என்று பின்வரும் சிலரைக் குறிப்பிட்டுள்ளார்: ''நல்லது இது, கெட்டது இது என்று பிரித்துணர மாட்டாத அறிவிலிகள்; இழிந்த குணமும் செயலும் உடையவர்கள்; முன்னர் ஒரு பேச்சும், பின்னர் ஒரு பேச்சுமாக மாறுபடப் பேசுபவர்கள்; அறச் செயல் சிறிதும் புரிய மனம் வராத உலோபிகள்; தீய குணங்களே உடையவர்கள்; மிகவும் கொடிய பஞ்சபாதகங்களைச் செய்பவர்கள்; கற்புடைய பெண்கள்மீது வீண் பழிச்சொற்களைப் புனைந்து கூறுபவர்கள்; அசட்டுத் தன்மை உடையவர்கள்; தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலின்றித் தமக்கும் பிறர்க்கும் தீங்கையே விளைவித்துக் கொண்டு, வீண்காலம் கழிப்பவர்கள்; விலைமகளிரைக் கூடி இன்புறுதற்கு விரும்பி, அதற்காகவே மனம் மயங்கித் திரிகின்ற காமப் பித்துடையவர்கள்; நீதி நூல்களைக் கற்று அவற்றின் பயன்களைத் தெரியாதவர்கள்; நல்வழியில் நடக்காதவர்கள்; பிறருடையபொருள்களைத் தம் வஞ்சனைச் செயல்களால், கவர்ந்து கொள்ளும் இழிசினர்கள்; ஆகிய அனைவரும் பூரியர்கள் எனத் தக்கவர்களாவர்''.

அறிவி லாதவர், ஈனர், பேச் சிரண்டு
பகரும் நாவினர், லோபர், தீக்குணங்கள்
அதிக பாதகர், மாதர்மேற்கலன்கள்
புனைஆதர்,
அசடர், பூமிசை வீணராய்ப் பிறந்து
திரியும் மானுடர், பேதைமார்க் கிரங்கி
அழியும் மாலினர், நீதிநூற் பயன்கள்
தெரியாத
நெறியி லாதவர், சூதினாற் கவர்ந்து
பொருள்செய் பூரியர், மோகமாய்ப் ப்ரபஞ்ச
நிலையில் வீழ்தரு மூடர்பாற் சிறந்த தமிழ்கூறி,
நினைவு பாழ்பட வாடி, நோக் கிழந்து,
வறுமை யாகிய தீயின்மேற் கிடந்து,
நெளியும் நீள்புழு வாயினேற் கிரங்கி
யருள்வாயே!

—திருநெல்வாயில், திருப்புகழ் 759

குண்டர்கள்:

உலகில் கோடிக்கணக்கான மக்கள்வாழ்கின்றனர்; அவர்களின் மன இயல்புகளையும், செயல் இயல்புகளையும், இத்தகையன என்று நாம் உணர்ந்து கொள்ளுதல் அரிது. உலகிற் பல மக்கள் முரட்டு இயல்பு உடையவர்களாய்ப் பிறருக்குத் தீங்கு செய்து, அவர்கள் துன்புறு

வதைக் கண்டு மகிழ்ச்சி அடையும் குணம்உடையவர்கள் ஆக இருந்து வருவதை, நாம் காண்கின்றோம். இவர்களைக் குண்டர்கள் என்று அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார்; ''பிறர்பால் தோழர்களாக இருந்து நட்புரிமை பூண்டு கொண்டே, அவர்கள் அறியாதபடி, அவர்களுக்கு வஞ்சகமாகத் தீங்குகள்செய்துகொண்டு ஏமாற்றி வருபவர்கள்; தமக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்கள், தமக்குச் செய்த நன்றியினை மறந்து இகழ்பவர்கள்; நல்ல விரதங்களைத் தாம்மேற்கொள்ளாததுடன், பிறர் எவரேனும் கொண்டிருந்தால், அவற்றைக் கெடுக்க முயலுபவர்கள்; பெரியவர்களின் புகழைப் புகழ்ந்து போற்றி மகிழாமல், அவர்கள் மீது வீணான ஏளனச் சொற்களையும் பழிச் சொற்களையுமே கூறித் திரிபவர்கள்; தாம் பிறர்க்கு எதுவும் ஈயாதவர்களாயிருப்பதுடன், மற்றவர்கள் ஈவதையும் விலக்கித் தடுப்பவர்கள்; தாம் மேற்கொள்ளும் சபதங்கள் ஆகிய சூளுறவுகளைக் கடைப்பிடிக்க முயலாமல், அவற்றைக் கைவிட்டுக் கொடுஞ்செயல்கள் புரிந்துவருபவர்கள்; ஊக்கமும் உழைப்பும் இல்லாமல், மற்றவர்களை ஏமாற்றி வாழ்வதையே குறிக்கோளாகக் கொண்டு, அதற்காகவே முயன்று உழன்று வருபவர்கள்; நீதி நெறிகளையும், அறச் செயல்களையும், மனம் அறிந்து சிதைத்துக் கெடுப்பவர்கள்; வீண் தற்பெருமையுணர்ச்சியும், தான் என்னும் செருக்குணர்ச்சியும் மிகுந்தவர்கள்; பொருள் புகழ் பதவி முதலிய ஆசை வலைகளில் விழுந்து மயங்கி, அவற்றைத்தேடி அலைந்து வருந்துபவர்கள்; கோயில்களில் முன்னோர்கள் சமுதாய நலத்திற்காகக் கடவுளரின் பெயரில் வைத்துவிட்டுச்சென்ற அறச் சொத்துக்களை வஞ்சகமாக ஏமாற்றிக் கவர்ந்து கொள்பவர்கள்; ஆகிய இவர்களெல்லாம் குண்டர்கள் என்னும் இழிகுணமக்களாவர். இவர்கள் கூற்றுவனால் நரகக் குழியில் தள்ளப்பெற்று, மிகவும் வருந்தித் துன்புறுவார்கள்.''

தோழமை கொண்டு சலஞ்செய் குண்டர்கள்,
ஓதிய நன்றிம றந்த குண்டர்கள்,
சூழ்விர தங்களக டிந்த குண்டர்கள்,
பெரியோரைத்
தூஷணை நிந்தைப கர்ந்த குண்டர்கள்,
ஈவது கண்டுத கைந்த குண்டர்கள்,
சூளுறவு என்பதொழிந்த குண்டர்கள்,
தொலையாமல்
வாழுநி னைந்துவ ருந்து குண்டர்கள்,
நீதிய றங்கள் சிதைந்த குண்டர்கள்,
மான அகந்தை மிகுந்த குண்டர்கள்,
வலையாலே
மாயையில் நின்றுவ ருந்து குண்டர்கள்,
தேவர்கள் சொங்களக வர்ந்த குண்டர்கள்,
வாதை நமன்றன்வருத்தி டுங்குழி விழுவாரே

—கோடைநகர், திருப்புகழ், 717

முடிவுரை:

இங்ஙனம் அருணகிரிநாதப் பெருமான், தம்முடைய திருப்புகழ்ப் பாடல்களில் முருகனைத் துதிப்பதோடு அமையாமல், உலகியல்பு மக்களியல்புகளையும் இடையிடையே எடுத்துக் கூறிக் குறிப்பிட்டிருப்பது, நாம் தீய செயல்களைச் செய்யாமல், தீயோர்களோடு சேராமல், நல்லவர்களோடு சேர்ந்து, நல்ல செயல்களைப் புரிந்து, நல்லவர்களாய், நல்லமுறையில், வையத்து வாழ்வாங்கு வாழ்தல் வேண்டும் என்று அறிவுறுத்துதற் பொருட்டேயாகும். உலக மக்களாகிய நாம் அனைவரும் ஈடேறி உய்தல் வேண்டும் என்னும் கருணை இரக்க உணர்விலேயே, இங்ஙனமெல்லாம் இவற்றை அருணகிரிநாதப் பெருமான் அருளிச் செய்வாராயினர். அதுபற்றியே நம் பண்டைப் பெரியோர்கள், அருணகிரிநாதரைக் ''கருணைக்கு அருணகிரி'' என்றுபுகழ்ந்து போற்றிப் பாராட்டி வருகின்றனர். அருணகிரிநாதரின் கருணை மொழிகளை, நாம் நன்கினிது கற்று, கற்றவழி நின்று, செந்தமிழ்க் கடவுளாம் திருமுருகனைத் துதித்து நலமுற்று வாழ்ந்துய்ய முயலுவோமாக!

கொள்ளக் குறை ஏதும் இல்லான்

நம் இயல்பையும், இறைவனின் இயல்பையும் குறித்து, நாம் உள்ளபடி சிந்தித்து உணர்ந்தால், நாம் அடையவேண்டிய பேற்றுக்குச் சாதனமாக, நம்பக்கல் ஏதேனும் ஒன்று உண்டு என்று சொல்வதற்கு வழியில்லை. ஆயினும் ''அரங்கா அடியேற்கு இரங்காயே'' என்று சொல்லி வேண்டிக்கொள்வதாவது, நாம் செய்யலாமே? அதுகூடவா நம்மிடம் இல்லாமற்போகும்? என்று, சிலருக்கு ஐயம் எழுதல் கூடும். இறைவன் நம்மைக் காக்குங்கால், நம்பக்கலில் அவன் எதனையும் பெறவேண்டிய விருப்பம் இல்லாதவன். நாம் அவனுக்குக் கொடுப்பதற்கோ, அவன் நம்மிடமிருந்து பெறுவதற்கோ உரியது யாதொன்றுமில்லை. ஆதலின் ''அரங்கா அடியேற்கு இரங்காயே'' என்றாற்போல, நாம் விண்ணப்பித்துக் கொள்வதும்கூட வேண்டுவதில்லை, நாம் கூறாமலே அவன் அனைத்தையும் அறிவான். நாம் நம் ஆற்றாமையினால் இங்ஙனமெல்லாம் கூறிப்புலம்புகின்றோமேயன்றி, அவன் இவற்றையெல்லாம் இன்றியமையாமல் விரும்பி நிற்கிறான் என்பது கருத்தன்று. நம்முடைய செயல் முயற்சிகளால் ஆவது ஒன்றும் இல்லை என்றுணர்ந்து, எந்த நன்மையும் இறைவனாலேயே நமக்கு விளையும் என்று தெளிந்து துணிந்து, பிரபத்தி செய்வதே நம் கடமையாகும்.

உள்ள படியுணரில் ஒன்றுநமக் குண்டென்று
விள்ள விரகிலதாய் விட்டதே-கொள்ளக்
குறைஏதும் இல்லாற்குக் கூறுவதென்? சொல்லீர்
இறைஏதும் இல்லாத யாம்.

—பிரமேயசாரம்

[விள்ள-சொல்ல. விரகு-வழி. கொள்ளக் குறையேதும் இல்லான்-நம்மிடத்திலிருந்து ஏதேனும் பெற்றுக் கொள்வதற்குத் தன்பால் குறைவு எதுவும் இல்லாதவன், கடவுள். ஏதும்-எதுவும். இறையும்-சிறிதும்]

—ஆசிரியர்.

பேதையும் மேதையுமான சீதை

''முத்தமிழ்ப் பெருஞ்சொற் கொண்டல்''

திரு புரிசை சு. முருகேச முதலியார், திருவண்ணாமலை

(முற்றொடர்ச்சி)

R. RAJU,
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

மேற்கண்டவாறு, ஓயுமளவும் ஓடிய அவ்வளவு தூரத்தையும், அந்த இடிக்குரலெடுத்த மாரீசன் கூப்பிடு தூரமாக்கிவிட்டனன். அவன், தீய வாயால் வஞ்சகத்தால் அந்நெடுந் தூரத்தை ஓசையாற் சிறியதாக்கி இறைவன் தேவியை உளையச் செய்து, இளையவரை அயலவர் போல் எண்ணிப்பேசச் செய்த, உருவத்தால் அண்ணலை அப்புறப்படுத்தினவன், ஓசையால் இளவலையும் அப்புறப்படுத்த ஏற்பன செய்து விட்டனன். அத் தீயவன் எடுத்த குரலையே அண்ணலிருக்கும் இடத்திற்கு அடையாளமாகக் கொண்டு, அம்மானும் மன்னவனும் நெடு நேரம் நடந்த தூரத்தை ஒரு சிறுநேரத்தில் கடந்து அடைந்துவிட்டனன் இளையசெம்மல். அடிபட்டான் அவன் அலறி ஒலித்தான், துடியிடையன்னை மடியுற்றான் என மாழ்கினாள், ஆறுதல் உரைக்கவும் மாறுதல் பேசினள், வழியின்றி வேறுமொழியின்றி, புறப்பட்டான் தம்பி. தடித்தழித்தவீரன், அங்கெப்படியோ எனத் திரும்பினன், அதற்குள் அவ்வளவு நெடுமையும் தாண்டி ஆங்குற்று நின்றனன், உளமும் செயலும், உரையும், ஒத்த ஒண்மையன்.

இளவலைக் காண்டகு தூரத்தில் கண்டவுடனே அண்ணல் மனத்தில் சில எண்ணங்கள் உதித்தன. என்னஇது, இளவல் அங்கிருப்பதால் ஏதும் ஒன்றும் எய்தா தென்றல்லவாயெண்ணினேன். இதோ வந்து விட்டனனே. நானங்கே நங்கையைக் காத்திருக்க வல்லவா பணித்துவந்தேன். தம்பி என் சொல்லைக் கடக்கக் கருதவும் மாட்டானே. தம்பி ''அது பொய்ம்மான் போகவேண்டாம்'' என்றான். நான்தான் அவன் சொல்லினைக் கேளாது இந்தப் பாடு படுகின்றேன். என் சொல்லை அவன் ஒருக்காலும் தட்டமாட்டான், அவள் தட்ட வைத்திருப்பாள். பாவிமாரீசன் உருவத்தைக் கண்டு பொன்மான் என நம்பி அவள் உள்ளதைப் பறிகொடுத்தாள், அப்பாவியிட்ட ஓசையைக் கேட்டு என்னோசை என நம்பி, உள்ளத்தையே பறிகொடுத்தோமென அல்லல் பட்டிருப்பாள். தம்பி முன்னமே ''மான்தானே வேண்டும் நான் பிடித்து வருகின்றேன்'' எனப் புறப்பட்டனனே, அவள் எங்கே வழிவிட்டாள். அவர் வேண்டாம் நீங்களே பிடித்து வாருங்கள் என என்ன பாடுபடுத்தினாள். தம்பி சொல்லை நானா தட்டினேன்? அவள்தான் தட்டச் செய்தாள். இப்பொழுதும் சொல்லைவிட்டு என்னெனச் சொல்லித் தம்பியைப் புறப்படச் செய்தனளோ. அவளால்தான் தம்பியும் என் சொல்லைத் தட்டிப் புறப்பட்டிருப்பான்'' என எண்ணினனாம் ஏந்தல்.

''புன்சொற்கள் தந்த பகுவாய் அரக்கன்
உரைபொய் எனாது புகல்வாள்
வன் சொற்கள் தந்து மடமங்கை யேவ
நிலைதேர வந்த மருளோ?
தன்சொல் கடந்து தளர்கின்ற நெஞ்சம்
உடையேன் மருங்கு தனியே,
என்சொல், கடந்து மனமுந் தளர்ந்து
இளவீரன் வந்த இயல்பே!

இச் செய்யுள் இராமன் இளவலைப் பார்த்தவுடனே எண்ணிய எண்ணங்களைத் தனக்குள்ளே சொல்லிக் கொண்டு முணுமுணுத்த சொற்களைக் குறிப்பிடுவது. இஃது ஓர் இரங்கலோசை. இவ்வோசையை நனிவிரும்பிக் கைக்கொண்டவர் நல்லூர் வீரகவியென்னும் நாவலர். அவர் தாம் இயற்றிய அரிச்சந்திர காவியத்தில் ஆழ்ந்த துயரத்தைக் காட்ட, இவ்வோசையை அமைத்துப் பாடுகின்றார். அவர் இவ்வோசைக்குத் தேடிய இடமுங் கடுங்காடு. அரசாளப் பிறந்த அருமகனை, தந்தையின் மானத்தைக் காக்க ஆளடிமை செய்யும் திருமகனை, தருப்பை யறுப்பில் அரவு கடிப்பத் தவித்து உயிர் விட்ட தலைமகனைத், தாயான சந்திரமதி, அமாவாசைக் கருக்கலில் அர்த்த ராத்திரியில், ஆற்றின் கரையில் அடர்புதர் அருகில், முகக்கண் ஒளிபெறா மூண்ட பேரிருளில், காலின் நகங்களால் தடவித் தடவியே நாடி, காலில் தட்டக்கண்ட தனிப்பெருமகனைக் கட்டியணைத்துக் கதறிடும் ஓசைக்கு ஒட்டத் தகுமென இவ்வோசையை அமைத்தனர். (அரிச்சந்திர காவியம், மயான காண்டம்).

''பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து
பசியால் அலைந்து மிரவாது
அநியாய வெங்கண் அரவா லிறந்த
அதிபாவம் என்கொல் அறியேன்!
தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே!
இனியாரை நம்பி யுயிர்வாழ்வம் என்றன்
இறையோனும் யானும் அவமே?

வீர கவி இந்த ஓசையை வைத்த இடத்தின் படுதுயரம் எத்தகைத்தோ, அத்தகைத்தே இளவலைக் கண்ணுற்ற இராமபிரான் எண்ணச் சூழலில் எழுந் துயரமும் என்பதனை அகங் கொள்வோமாக. ஆனால், சந்திரமதி, பேதைப் பெண்மணி யாதலில் தாங்காது அழுகின்றாள். இத்தனை வாதையுற்றும் இராமன் தனது அழுகைக்கான அத்தனைத் துயரத்தையும் உள்ளே அடக்கிக் கொண்டு தெருமருகின்றார். சந்திரமதியின் துயரத்திற்குக் காரணமானவர், எங்கோ இருக்கும் விசுவாமித்திர முனிவரா வார். ஒருவர் சொல்லை ஒருவர் தட்டாத தலைசிறந்த வாழ்க்கையராகிய தசரதகுமாரர் களைத் தனித்தனி வாக்குத் தவறச் செய்து, அரசாளப் பிறந்த மக்களை அருங்காட்டில் அலையச் செய்து, அழக் கிளப்பி அல்லல்படுத்து வது, இரு பெண்மணிகளின் பேதைமை! மந் தரை இந்திரசாலத்தாலும், மாரீசன் தந்திர சாலங்களாலும், மாதமை நீங்கிப் பேதமைப் பட்ட கேகயகமகளும், மிதிலைச் செல்வியும் படுத்தும் பாடு இதுவல்லவா? இதனை நாமா சொல்ல வேண்டும்? இராமபிரானே தனது நண் பன் சுக்கிரீபனுக்குத் தனது அநுபவங்களைக் கூறுமிடத்தில் கூறியிருக்கின்றனர் என்பர் கம்பர்.

''மங்கையர் பொருட்டா லெய்தும்
மாந்தர்க்கு மரணம் என்கை
சங்கையின்றி உணர்தி வாலி
செய்கையால் சாலும் இன்னும்

அங்குஅவர் திறத்தினாலே
அல்லலும் பழியும் ஆதல்
எங்கள்இல் காண்டி யன்றே
யான் உனக்கு உரைப்பது என்னே''

(அரசியல் 33)

இங்கே இராமபிரான், நாங்கள் அல்லல்படுவது அன்னையின் பேதைமையால், சின்னத்தனப்படு வது சீதையின் பேதைமையால், எனச் சுட்டு கின்ற தன்றி வேறென்?

சிந்தையில் பலப்பல எண்ணி நிற்கும் செம் மலின் அடிகளில் இளவல் சென்று இறைஞ்சி னன். அண்ணலும் இளவலை எடுத்து இறுகப் புல்லினன். அணைத்து உருகிய அண்ணல், சிந்த னையோடு வந்தவாறு என் என்றனன். இளவல் நிகழ்ந்தவை அனைத்தும் இசைத்தனன். அண் ணல், இளவல் வருகைக்குக் காரணம் இப்படி இருக்கலாம் என மதித்தவண்ணமே, நிகழ்ச்சி யும் இருந்ததென அறிந்தனன். நினைப்பும் நிகழ்ச்சியும் ஒன்றுபட்டிருந்ததை மேலும் ஆழ்ந்து சிந்தித்த அண்ணல், 'மாரீசன் மானாக வந்ததும், தனது குரல்கொடு தம்பியை அழைத் ததும், சானகிக்குத் தீங்கிழைக்கும் ஒரே நோக் கம் உடையதுதான் என்பதனை விளக்கமாக உணர்ந்தனன்.

இலக்குவ! எனது சொல்லை மறுத்து வந் தனையே என யான் வருந்தவில்லை. ஒரு சிறி தும் உன்பால் குற்றமில்லை. உனது சொற் களைக் கேளாது கடுஞ்சொற்கள் கூறி உன்னை அகற்றியதற்காகத் துன்பத்தை அவள் அடை யவே நேர்ந்துள்ளது. இம் மான்வேட்டை நல்ல தல்ல என்ற உனது தடையை அகற்றிய எனது செயலையே அவளும் செய்துவிட்டனள். விதி கெடுத்துவிட்டது எனத் தனது நிலைபெற்ற உள்ளமும் கலங்கினன் நெடியோன்.

வந்தாய் திறத்தின் உளதன்று குற்றம்
மடவாள் மறுக்க முறுவாள்
சிந்தா குலத்தொ டுரைசெய்த செய்கை
அதுதிரு மென்று தெளிவாய்
முந்தே தடுக்க வொழியாது எடுத்த
வினையேன் முடித்த முடிவால்
அந்தோ கெடுத்தது வினையே யெனத்தன்
அழியாத உள்ள மழிவான்

(சடா.வ. 156)

எல்லாம் பகைவர்கள் செய்த சதியே, அதுவும் சானகியைக் கவரும் பொருட்டே. அதில் ஐயம் ஒன்றுமில்லை. விரைந்து சாலைக்குச் சென்று அவள் ஆங்கிருக்கக் கண்டால் இவ்வளவு துயர மும் தீரும். எனக்கூறி விரைந்தனன் ஏந்தல். ''பாணிக்க நின்று பயன் ஆவதென்ன, பயில் பூவை யன்ன குயிலைக், காணிற் கரந்த துயர் தீரும்'' என்று இருவரும் விரைந்து பறந்தார்கள். என்ன பயன்? சோலையைத்தான் கண்டார்கள். சானகியார் இருந்த சாலையையும் காணாராயி யினர். ஒருவன் சமயத்திற்கு உதவும் எனச் சம்பாதித்துப் புதைத்து வைத்த பொருள், வைத்த சட்டியுடன் வஞ்சகர் கைக்கொளக் கண்டால் என்ன ஆவான்? அன்ன நீரராயினர். தேர்க் காலடி காட்டி இளவல் தூண்ட, எழுந்து விரைந்தார்கள்; வீழ்ந்து கிடந்த வீணைக் கொடி ஆகியவற்றைக் கண்டார்கள், சிறகற்று இரத்த வெள்ளத்திடைக் கிடந்த சடாயுவைக் கண்டு ஆவலித்து வீழ்ந்தார்கள்; தெளிந்தார் கள், எழுந்தார்கள்; அழுதரற்றினார்கள். இச் செல்வர்கள் வரவே, அவர்களுக்கு நிகழ்ந்தன வற்றைத் தெரிவிப்பதே, அவர்பால் விடை பெறுவதே, தனது உயிர்விடும் எல்லையாகக் காத்துக் கரைந்து, கைசோர்ந்து கிடந்த பெருந்தகை, கண்விழித்து, அரும்பெறல் மக் களை யணைத்து, முத்தமிட்டு உச்சிமோந்த னன். அவர்களை மோந்த மூக்கு மிகப்பெரிய மதிப்புடையதாம். அது ''தாக்கி அரக்கன் மகு டத் தலை துணித்த மூக்காம்''. பின்னும் அப் பெருந்தகை ''ஆற்றல் மிக்க செல்வர்களே! அகமும் புறமும் செயலும் சிறந்த ஆரணங்கை விட்டு இருவரும் அகன்றீர்களோ''? பெரிய வஞ் சகம் ஒன்று நடந்துவிட்டதோ? என்றனன்.

''வஞ்சனையால் வந்த வரவென்பது என்றன்
நெஞ்சகமே முன்னே நினைவித்தது ஆனாலும்,
அஞ்சொல்மயிலை அருந்ததியை நீங்கினிரோ
எஞ்சலிலா ஆற்றல் இருவீரும் என்றுரைத்தான்''

சடாயு உ. 190)

சடாயுவின் கேள்விக்கு இளவல் முன்னின்று நிகழ்ந்தனவெல்லாம் ஒன்றுவிடாது உரைத்த தனன். அவற்றைக் கேட்ட சடாயு, அவர்கள் உள்ளம் ஆறச் சில உரைத்தருளினன். ''மக் களே! ஒருவரால் உணர்த்த வேண்டுவதின்றித் தாமே உணர்ந்து ஒழுகவல்லவரே உலகம்போற் றும் ஒளியுள்ள பிறப்பினர். அவ்வகையார் துதியுறு பிறவியார். அத்தகையினருக்கும், உல கமறிந்த அவர்கள் புகழேபோல் உலகமறியத்

தக்க பெருந்துன்பங்களும் இன்பங்களும் எதிர் பாரா வண்ணம் வந்து சேருகின்றன. அதற்குக் காரணம், அவர் செய்தது இவர்செய்தது எனப் பேசிப் பெருந் துன்பத்திற்கு வழிகோலுவது அறிவுடையோர் செயல் அல்ல. அதற்கமையக் கொள்ள நிற்பது ஒரே முடிவுதான். அது என்ன? விதிவசம். அவ்வளவுதான். மேலும் வினை வளராமல், வளர்ந்துள்ள வினையைத் தொலைப்பதற்கு ''விதிவசம் என்ற கோட்பாட்டினையே எக்காலத்திலும் எவ்வகை ஆற்றல் மிக்கோரும் கொள்ள வேண்டி நிற்கின்றது. அஃதொன்றேயன்றி, மதிவசத்தால் விதியை வெற்றி கொள்வோமென்பதெல்லாம் ஈடேறாத எண்ணங்களாகும். ஆதலால், நடந்ததை விடுங்கள், நடக்கவேண்டியதில் ஈடுபடுங்கள் என்றன்ன சடாயு. இச் சடாயு, இராம இலக்குவரைக் கண்ட அப்பொழுதே தசரதன் உயிர் நீப்பிற்குக் காரணமாக நடந்த நாட்டுச் செயல்கள்அனைத்துங் கேட்டறிந்தவன். இப்பொழுதும் வீழ்ச்சிக்குக் காரணமாகிய காட்டகதத்துச் செய்திகள் அனைத்தையும் அவ்விளவல் வாயிலாகவே உணர்ந்தனன், தனது உடலழிந்து உயிரும் பிரியும் நேரம் அது. அப்படியா? அங்கு தசரதன் வீழ்ச்சிக்குக் கைகேயியின் பேதைமையும், இங்கு எனது வீழ்ச்சிக்குச் சீதையின் பேதைமையுங், காரணங்களாக நின்றனவா? எனக் கருதக்கூடிய நேரம் அது. ஆனால், அவ்விருவரோடு இங்குச் சடாயுவும் பேதைமைப்பட்டு வாதனையை வளர்க்கவில்லை. தனது மேதமையையால் செயற்பாட்டிற்கு ஒருவகை முடிவினைக் கண்டு, அதனால் மக்களிருவருக்கும் ஆறுதலுங் கூறும் சடாயுவின் மிகுந்த பெருந்தகைமை போற்றிப் புகழுதற்குரியதல்லவா? வந்ததை வினையென்று தாங்கிக் கொண்டு, அத் துன்பத்தினால் தாம் இன்னொருத்தரைத் துன்பப்படுத்தாமல், நடப்பதைத் தானே தவம் என்றனர் வள்ளுவரும்? ''உற்றநோய் நோன்றல், உயிர்க் குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற்குரு''. கம்பரின் சடாயு வாக்காக்கிக் கூறும் மிக அரிய பெரிய முடிவைக் காண்போம். இது எக்காலத்திற்கும் யாவருக்கும் உதவுவது ,அல்லவா?

அதிசயம் ஒருவரால் அமைக்க லாகுமோ?
துதியுறு பிறவியின் இன்பதுன்பங்கள்
விதிவசம் என்பதை மேற்கொளாவிடின்
மதிவழி யால்விதி வெல்ல வல்லமோ?

(சடாயு உயிர்நீத்த. 191)

இங்குச்சீதையின்பேதைமையாலா நீங்கள் அகன்றீர்கள், நானும் இறக்கின்றேன், என அழுது உயிர் விட்டிருந்தால், இராமபிரான் அதற்கப்பால் அடி எடுத்து வைத்திருப்பானா என்பதைச் சிந்திக்க வேண்டும். மேலும் கூறுகின்றனன் சடாயு. சீதையை பிரிந்தது இன்று சிறுமைப்யாகத்தான் தோன்றுகின்றது, யான் அதனை அப்படி மதிக்கவில்லை. மிகப் பெருமையாக மதிக்கின்றேன். இது அரக்கர் தவத் தேய்வினாலும், அமரர் தவப் பெருக்கத்தினாலும் அமைந்ததொரு அமைவென மதிக்கின்றேன். இராமா! அரக்கரென்னுங் களையை அழித்து, அமரராகிய பயிரை வளர்க்க வேண்டிய நேரமிது. இது உனது படை ஆண்மைக்கு எளியதே, எனவுந் தேற்றினன். பிறகு, இராவணன் தொடல் அஞ்சிச் சாலையொடு அகழ்ந்தெடுத்து ஏகலையும், தான்தடுத்தமையையும், அவனரன் தந்த வாளால் தன்னைப் படுத்தமையுங் கூறினான். அதுகேட்டு இராமன் உள்ளம் பதைத்தது. இவ்வளவுங் கண்டு அமரர்கள் என்ன செய்தனர் என அமரரை வெறுத்தனன் அண்ணல். அதற்குச் சடாயு, அடாதது செய்தனன் எனினும், அமரரால் இராவணனை ஒன்றுஞ் செய்ய முடியாது, உலகமே உங்கள் தோற்றத்தால் அவ் இராவணனை வெல்லத் தவங் கிடக்கின்றது, நீங்கள் உலகத்தை வெறுப்பதில் ஒரு சிறிதும் பயனில்லை. இப்பழிச் செயலுக்குக் காரணம் சீதையுமல்ல, நீங்கள்தான். சீதையொரு அழகற்ற பெண்ணா? அல்லது வயது முதிர்ந்தவளா? பேதைப்பெண், வஞ்சகன் வல்லபம் அதிகம். அவன் வஞ்சித்தான், இவள் நெஞ்சத்தைக் கலைத்தான், அவள் பிடிக்கச் சொல்லினாள், நீங்கள் ஆகாதென ஒரே மொழியில் மறுக்க வேண்டியதுதானே, எப்படி அகன்றீர்கள்? ஆ! இது உங்கள் பிழையே; உலகத்தின்பிழையல்லவென்றும் அழுந்தப் பேசினன் ஆண்டகை. ஏன் உயிர் வழங்குவோனுக்கு இந்த உரிமையில்லையா? இன்று எத்தனைப் பெரியவர்கள் நாட்டில் இடுக்கண் உறும் நேரங்களில் மழுப்பிப் பேசி மாழ்க வைக்கின்றவர்கள்? சடாயுவை முன்வைத்துக் கம்பர் நாட்டிற்குச் செய்யும் நலத்தினைக் காண்போம்.

''வம்பிழை கொங்கை வஞ்சி
வனத்திடைத் தமியள் வைகக்
கொம்பிழை மானின்பின் போய்க்
குலப்பழி கூட்டிக் கொண்டீர்
அம்பிழை வரிவிற் செங்கை
ஐயன்மீர் ஆயுங் காலை
உம்பிழை யென்பதல்லால்
உலகஞ்செய் பிழையும் உண்டோ?

(ச.உ.நீ. 211

அருளாளன் இடிப்புரையை ஏற்றுக் கொண்டார்கள். அன்பன் அமரனாயினன். அருமைமக்கள் பெற்ற தந்தைக்குப் பிரிவுக் கடனாற்றும் பேற்றைப் பெற்றிலரெனினும், அப்பெரிய தந்தைக்கு அக்கடனாற்றும் பேற்றைஅரும் பேறு பெற்றனர். அனைத்தும் முடித்தனர். அவ் ஐயன்கட்டளையைச் சிரமேற்கொண்டு தேவியையுந் தெவ்வினரையுந் தேடப்புறப்பட்டனர்.

சீதையைக் காக்க மணந்தேன் ;

காதலின் மூழ்கிக் கைவிட்டேன்:

கடுங் கானகத்தில் தென்முகம் நோக்கிப் பல வைகல் நடந்தார்கள். ஒருநாள் ஒரு பெரும் பூதத்தின் கைக்குள் சிக்கினார்கள். கவந்தன் என்னும் அப்பூதம் காதக் கணக்காகக் கைகளை நீட்டி வளைத்திழுத்துக் கிடைத்தனவெல்லாம் தின்று தேக்கும் பெரும் பூதம். அதன் கைம்மதிலைக் கடக்க வழியின்றிக் கவன்றனர். அப்பொழுது இராமன் இளவலை நோக்கி யான் இதற்கு இரையாகிவிடுகின்றேன். நீ தப்பிச் செல்லுக என்றனர். அதற்கு இடங் கொடாது இளவல் முந்தினன். இளவலைத் தடுத்துத் தான் முந்துவதற்குச் சில ஏதுக்களை இயம்புகின்றனன் ஏந்தல். ''இலக்குவ! நான்

மீண்டு நகரத்திற்குச் சென்றால் ஒருநாள் மிதிலைக்குஞ் செல்ல நேரும். அங்கு அவ்வேந்தன்பால் என்ன சொல்ல? மாட்சியுள்ள நீங்கள், தாரை வார்த்து அளித்த தகைமைமிகு செல்வி அரக்கர் மனையில்நிற்க யான் இங்கு வந்துளேன். ஆனால், யான் வெறுங்கையனல்லன். கணைகள் நிறைந்த தூணியுமுடையேன், வில்லுமுடையேன் என்று கூறுவதா?''

''இல்லியல் புடையநீர் அளித்த இன்சொலாம்
வல்லியவ் வரக்கர்தம் மனையுளா ளெனச்
சொல்லிக்கன் மலையெனத் தொடுத்த தூணியேன்
வில்லினன் செல்லவோ மிதிலை வேந்தன் ப்ால்''

''உங்கள் மகளைக் காக்கக் கடமையேற்றேன். யான் அவளைக் காப்பதைவிட அவள் காதலில் மனம் மிக வைத்தேன், அவள் சொல்லியபடியெல்லாம் நடந்தேன், அதனால்தான் நான் இங்குத் தனியாக வந்திருக்கின்றேன்'' என்று கூறவா? எனக்கு இக்குறைபாடு உளதால் நானே பூதத்திற்கு இரையாகி என் புன்மையைப் போக்கிக் கொள்ளுகின்றேன் என்றனன்.

''தளையவிழ் கோதையைத் தாங்க லாற்றலன்
இளைபுரந்து அளித்தல்மேல் இவர்ந்த காதலன்
உளன்என உரைத்தலின் உம்பரான்என
விளிதல் நன்று ஆதலின் விளிதல் நன்று என்றனன்

இராமன் இப்படிப்,பேதைமைப்பட்ட சீதையின் சொற்கேட்டுப், பெரும் பழிக்கு ஆளாயினேன் எனப் பெரிதும் வருந்த வேண்டி வந்தது.

தொடரும்

உணர்த்துவார் இல்லாநாள் ஒன்றல்ல

இறைவனையும், உயிர்களையும், இவ்விருவருக்கும் உண்டான தலைவன் அடியவன் என்னும் உறவுமுறைத் தொடர்பையும், முறையே நமக்கு உள்ளபடி தெரிவிக்கின்ற மறைமொழியான திருமந்திரத்தை, நமக்கு உபதேசித்து அருள்பவன் ஆசாரியனே ஆவன். அத்தகைய சிறந்த ஆசாரியன் கிடைக்கப்பெறாமல், கழிந்தொழிந்த காலமெல்லாம் நமக்குப் பயனில்லாத வீண் காலமே ஆகும். திருமந்திரப் பொருளை உபதேசித்தருளும் ஆசாரியன் கிடைத்தருள்கின்ற காலமே, நமக்குப் பயன் மிக்க நல்ல சிறந்த உய்திக்காலமாகும்.

இறையும் உயிரும் இருவர்க்கும் உள்ள
முறையும் முறையே மொழியும்-மறையை
உணர்த்துவார் இல்லாநாள் ஒன்றல்ல; ஆன
உணர்த்துவார் உண்டான போது

—பிரமேயசாரம்.

இச்செய்யுள் ஆசாரியன் தமக்குச் செய்யும் நன்மைகளை உணர்த்தி, அத்தகைய ஆசாரியனை அடைய வேண்டுவதன் இன்றியமையாமையை, இனிது வற்புறுத்தி அறிவுறுத்துகின்றது. இறை-எம்பெருமானின் இயல்பு. உயிர்-உயிர்களின் இயல்பு. இருவருக்கும் உள்ளமுறை-இறைவனுக்கும் உயிர்களுக்குமுள்ள தொடர்பு. மொழியும்-விளக்குகின்ற. மறை-திருவெட்டெழுத்து மந்திரம். உணர்த்துவார்-உபதேசிக்கும் ஆசாரியர். ஆசாரியன் கிடைக்காமல் கழிந்த நாளெல்லாம், ஒரு பயனும் அற்ற வீண் நாளாகவே முடிதலின் ''உணர்த்துவார் இல்லாநாள் ஒன்று அல்ல'' என்றார். ஆசாரியனால் உபதேசம் கிடைக்கப்பெறும் நாள்முதல், நமக்கு எல்லா நலங்களும் விளைதலின், ''உணர்த்துவார் உண்டானபோது ஆன'' என்றார். போது-காலம். 'ஆயின' எனற்பாலது 'ஆன' என வந்தது. நன்மைகள் பலவாக விளைதல் பற்றியும், அது ஐயமற்றுத் திண்ணமாய்த் தெளியப்படுதல் பற்றியும் 'ஆயின' எனப் பன்மையாகவும், இறந்த காலமாகவும் அருளிச் செய்தார். ஆசாரியன் அருளால் எல்லா நலங்களும், தாமே விளையும் என்பது கருத்து.

—ஆசிரியர்.

சிறந்த ஒரு திருப்பாடல்

''திருமால் நெறிச் செல்வர்''

திரு. கா. அ. ச. ரகுநாயகன், எம்.ஏ., திருப்பத்தூர்

தமிழ்நாட்டில் பழங்காலம் முதல் தழைத்தோங்கி வளரும் சமயங்கள் இரண்டு. ஒன்று சைவம்; மற்றொன்று வைணவம். சமணசமயம் சிலகாலம் கோலோச்சி இருந்தது. பௌத்தம் இங்கு வந்தது என்றாலும், அது இந்த மண்ணில் நிலைகொள்ளவில்லை. சைவசமயத்தில் தமிழுக்கே உரிய காப்பியமாகப் பெரியபுராணம் விளங்குகிறது. சமணமும் பௌத்தமும் இங்கு நின்று நிலைக்காமற் போனாலும் அவற்றிற்குத் தமிழில் சிறப்பான இரு காப்பியங்கள் ஏற்பட்டுள்ளன. சமண சமயத்துக்குரிய காப்பியமாகச் 'சிலம்பு' ஒலிக்கிறது. பௌத்த சமயத்துக்குரிய காப்பியமாக 'மேகலை' மிளிர்கிறது. இவைகளைப் பாடிய சான்றோர்கள் மூவரும் பெரும் புலவர்கள்.

இந்தச் சமயங்களுக்கெனத் தமிழில் காப்பியங்கள் தோன்றியுள்ளவாறு, வைணவச் சமயத்தில் தமிழுக்கே உரிய காப்பியம் தோன்றவில்லை. உலக மகா காப்பியங்களில் ஓங்கி நிற்கும், கம்பனுடைய இராமகாதை வைணவ சமயத்தைச் சார்ந்தது எனினும், அக் கதை தமிழ் மண்ணுக்குரியதாக அமையவில்லை. அது வடமொழிக் காப்பியத்தைத் தழுவி எழுதப் பெற்றது; வழிநூல் என்னும் நிலையுடையது. வைணவ சமயத்தில், இம்மண்ணுக்குரிய காப்பியம் தோன்றவில்லை என்றாலும், அதனால் வைணவத்துக்குக் குறைஏதும் இல்லை. ஆழ்வார்கள் பன்னிருவர் தோன்றி, எல்லாக்குறைகளையும் போக்கி, நிறைவு செய்துள்ளார்கள். பன்னிருவர் பாடியபாடல்கள் நாலாயிரம்.

நாலாயிரமும் திருமறைகளாகும். இத்தொகுப்பைத் 'தமிழ்வேதம்' என்று கூறுவது மரபு. 'வேதம் தமிழ் செய்த மாறன்' என்றும், 'வேதம் அனைத்துக்கும் வித்தாகும், கோதை தமிழ்' என்றும் அதனைப் போற்றுகிறார்கள். 'வேதத்தில் விளங்காத பொருள்களெல்லாம் 'நாலாயிரத்தில்' விளங்குகிறதாம். 'தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே' என்று வேதாந்த தேசிகர் என்னும் பெரியவர் முழங்குகின்றார். இதனால், வேதத்திற்கு மேலான சிறப்பு 'நாலாயிரத்துக்கு' ஏற்படுகிறது.

நாலாயிரம் பாடல்களும் தீந்தமிழ்ப் பாக்களாகத் தித்திக்கின்றன. எந்தப் பாடலை எடுத்துக் கொண்டாலும் அதில் சொற்சுவை, பொருட்சுவை நிறைந்து ததும்புகிறது. பக்தி வெள்ளம் பெருக்கெடுக்கின்றது. காப்பியக் கூறுகளும் ஆங்காங்கே பரவிக் கிடக்கின்றன. ஆழ்வார்களுக்குப் பின்வந்த வைணவப் பெரியார்கள் ஆழ்வார்களின் அருளிச் செயலைப் பெரிதும் போற்றியுள்ளார்கள். எழுத் தெண்ணிப் படித்திருக்கிறார்கள்; உள்ளார்ந்த கருத்துக்களையெல்லாம் அகழ்ந்தெடுத்திருக்கிறார்கள். நுண்மாண் நுழைபுலம் மிக்கார் பலர், தங்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்து, 'நாலாயிரத்திருமறை'யின் சிறப்புக்களை எடுத்தோதியுள்ளார்கள். வைணவப் பெரியார்கள் 'நாலாயிரத்தைப் போற்றி வளர்த்த அளவுக்கு, வேறு எந்தச் சமயத்தினரும் தங்கள் சமயக் கருவூலமாகக் கருதும் நூல்களைப் போற்றி வளர்க்கவில்லை.

இராமாநுசர் ,தாம் கண்ட வேதாந்தத் தத்துவார்த்தங்கள் எல்லாவற்றிற்கும் 'நாலாயிர'த்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளார். திருமால் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களில் நாலாயிரத்துக்கு ஒரு தனிச்சிறப்பு அளித்து வந்துள்ளார்கள். ஆழ்வார்களின் பாடல்பெற்ற திருக்கோயில்கள் அனைத்தும் யாத்திரை செய்து, கண்டு சேவித்தற்குரியனவாகப் போற்றப்பட்டு வருகின்றன. பெருமாள் திருவீதிஉலா புறப்பட்டால், வேத ஒலி முழக்கங்கள் பின்னே முழங்கி வரும். ஆனால், பெருமாள், 'நாலாயிர'த்தின் இன்னோசையைக் கேட்டவாறே, அதன் பின்னே போய்க் கொண்டிருப்பார். பெரியகோயில் என்று சிறப்பித்துக் கூறப்படும் திருவரங்கத்தில், மார்கழியில் கொண்டாடப்பெறும் இராப்பத்து, பகல்பத்து உற்சவங்களில் திருவாய்மொழியைப் பாடுவதே சிறப்பான நிகழ்ச்சியாகும். மார்கழித் திங்கள் முப்பது நாளும் திருப்பாவையைப் பாடாத பெருமாள் கோயில் இல்லை என்றே கூறலாம்.

வைணவர்கள், தம் இல்லங்களில் எந்த ஒரு நிகழ்ச்சி நடைபெற்றாலும், அங்கே நாலாயிரப் பாடல்களுக்கு முதலிடம் தருகின்றார்கள். வைணவர்களின் தினசரி வாழ்க்கையோடு நாலாயிரப் பாடல்கள் ஒன்றிப்போயுள்ளன. இராமாநுசருக்குத் திருப்பாவையில் பெரிதும் ஈடுபாடு உண்டு. திருவரங்கத்தில் அவர் தங்கியிருந்த காலத்தில் நாள்தோறும் திருப்பாவையைப் பாடிக்கொண்டே திருவீதிகளைச் சுற்றிவருவது அவரது வழக்கம் என்பதை அவருடைய வரலாற்றில் அறிகிறோம். திருப்பாவையில் அவருக்

கிருந்த ஈடுபாடு காரணமாக அவருக்குத் 'திருப்பாவை ஜீயர்' என்ற திருநாமம் ஏற்பட்டுள்ளது. திருப்பாவை என்றாலே வைணவர்களுக்கு ஒரு தனி மகிழ்ச்சியும், பெருமிதமும் ஏற்படுகின்றன.

மார்கழி முப்பது நாளும் விடியற்காலையில் திருப்பாவை ஒலியைக் கேட்கின்றோம். திருப்பாவைச்சொற்பொழிவுகளும் ஆங்காங்கே நடைபெறுகின்றன. வைணவர்களுக்குத் திருப்பாவையில் ஏற்பட்டுள்ள ஈடுபாடு ஒரு சிறப்புமிக்க மரபாகும். திருப்பாவையை அறியாத மக்கள் வாழ்ந்து பயனில்லை என்று சொல்லும் அளவுக்கு அவர்களுடைய பக்தி பெருகியுள்ளது.

> 'ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
> வையம் சுமப்பதும் வம்பு'

என்று ஒரு வெண்பா கூறுகிறது. திருமாலை வழிபடும் மக்கள் எதனை அறிந்திராவிட்டாலும், திருப்பாவைப் பாடல் முப்பதையேனும் அறிந்து கொள்ளவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். அவர்களும் அவ்வாறே திருப்பாவையை மனப்பாடமாகக் கற்றுப் பாடுகிறார்கள். ஒவ்வொருவரும், நாள்தோறும் காலை வழிபாட்டில் திருப்பாவைப் பாடல்களைப் பாடுவது ஒரு மரபாக ஏற்பட்டிருக்கிறது.

திருப்பாவைப் பாடல்களை வைணவத் திரள்கள் சேவிப்பது (ஒருங்கிணைந்து பாடுவது) ஒருவகை; அப்பாடல்களுக்குப் பண்ணும், தாளமும் அமைத்து இசையரங்குகளில் பாடுவது வேறுவகை; அவற்றை வழிபாட்டு நிகழ்ச்சிகளில் பாடுவது மற்றொரு வகை. யார் எப்படிப் பாடினாலும் அவர் பாடும் வகையில் ஒலிநயத்துக்கு இடம் தருகிறது திருப்பாவை; எல்லா வகை ஒலிகளும் நம்மைக் கவர்கின்றன. முப்பது பாக்களையும் ஒருவர் பாடி முடிக்கக் குறைந்தது முப்பது மணித்துளிகளேனும் தேவைப்படும். அந்த அளவுக்குக் காலை நேரத்தை ஒதுக்க முடியாமல் வேறு கடமை உள்ளவர்கள் இருக்கலாம். அவர்கள் ''சிற்றஞ் சிறுகாலை'' என்று தொடங்கும் ஒரு பாட்டையேனும் பாடவேண்டும் என்று ஒரு விதி வகுத்து அளித்துள்ளார்கள். அவ்வாறே, நாள்தோறும் ஒரு பாட்டைமட்டும் பாடுவோர் பலர்.

'சிற்றஞ் சிறுகாலை' என்று தொடங்கும் திருப்பாவைப் பாடலுக்கு வைணவத்தில் ஏற்பட்டுள்ள சிறப்பு, வேறு எந்தச் சமயத்திலும் குறிப்பிட்ட ஒரு பாடலுக்கு ஏற்பட்டிருக்கவில்லை. 'விசிட்டாத்துவைதம்' என்னும் வைணசித்தாந்தத்தின் சாரம் முழுமையும் இப்பாடலில் ஆண்டாள்நாச்சியார் அருளியுள்ளார் என்று பெரியோர்கள் இதனைப் போற்றுகின்றார்கள். ஆகவே, வைணவனாகப் பிறந்தவன் வேறெதனைக் கல்லாமற் போயினும், இந்த ஒரு பாடலையேனும் கற்றிருக்கவேண்டும் என்று கூறுவார்கள். நாள்தோறும் இதனைப் பாடவேண்டும் என்ற மரபு வழிவழியாக ஏற்பட்டிருக்கிறது.

கீதையில் கண்ணபிரான் அர்ச்சுனனுக்கு ''நீ என் திருவடிகளைப் பற்றிக்கொள்; உன்னுடைய துயரங்கள் எல்லாவற்றையும் நான் போக்குவேன்'' என்று உபதேசிக்கிறார். திருப்பாவையில், அறிவொன்றுமில்லாத ஆயர்குலச் சிறுமிகள் கண்ணன் இருக்குமிடம் தேடிச் சென்று, ''கோவிந்தா! நாங்கள் சொல்வதைக் கேள்'' என்று பேசும் திறம் பெரு வியப்பாக அமைந்துள்ளது. ''என் திருவடிகளைப் பற்றிக் கொள்'' என்று உபதேசித்த கண்ணனைப் பார்த்து இச் சிறுமிகள், ''நாங்கள் உன் திருவடிகளைப் பற்றிக் கொண்டிருப்பதை நீ அறியமாட்டாயோ?'' என்று பதில் கூறுவதுபோல, ''உற்றோமே ஆவோம்'' என்று பேசுகிறார்கள்.

''எங்களுக்குத் துயரம் ஏதுமில்லை; உன் திருவடித் தாமரைகளுக்குப் பல்லாண்டு பாடி நாங்கள் மகிழ்ச்சியாகவே இருக்கின்றோம்; ஆயினும் எங்கள் விருப்பம் ஒன்று உண்டு; அதனைச் சொல்கிறோம்'' என்று தொடங்கி, ''நாங்கள் உன் அழகைக் கண்டு எப்போதும் அனுபவித்துக் கொண்டே இருக்கவேண்டும்; உன் அருகிலேயே இருந்து உனக்குத்தொண்டு செய்ய விரும்புகிறோம்; உன் திருமேனி எங்கள் கண்ணிலிருந்து மறைவதை எங்களால் பொறுத்துக் கொள்ள இயலாது; ஆகவே, உன்னை விட்டு விலகித் தொலைவாகச் செல்லும் பணிகளில் எங்களை ஏவாதே; நாங்கள் உன்னை நெருங்கி இருந்தே சிறு சிறு சேவைகளைச் செய்யுமாறு அருள் செய்ய வேண்டும்'' என்று வேண்டுகிறார்கள்.

இவ்வாறு இவர்கள் பணி செய்ய விரும்புவது, கண்ணனைக் கண்டு பேசிய அன்று ஒரு நாளைக்கு மட்டும் அல்லாமல், எப்போதும் தொடர்ந்து நடைபெற வேண்டுமாம். மேலும் அப்படித் தொடர்வது அவர்களுடைய அந்தப் பிறவியில் மட்டும் அல்லாமல், கண்ணன் எத்தனை அவதாரம் செய்தலும், அத்தனைப் பிறவியிலும் அவர்களும் பிறந்து அவனுக்குச் சேவை செய்து கொண்டு இருக்க வேண்டுமாம். ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்'' என்று அந்தச் சிறுமிகள் கூறுகிறார்கள். மேலும் ஒன்று: கண்ணன் அருகே இருந்து அவனுக்குக் குற்றேவல் செய்வதில் தீராத விருப்புக் கொண்டுள்ள இந்த ஆயர் குலச் சிறுமிகள், தங்களுக்கு வேறு எந்த விருப்பமும் ஏற்படாமல், தங்களைக் காக்க வேண்டும் என்றும் வேண்டுகிறார்கள். ''மற்றை நம் காமங்கள் மாற்று'' என்பது அவர்கள் வாக்கு.

வைணவர்கள் நாலாயிரத்தை முழுமையாகப் பாடி முடித்தாலும், அல்லது ஆங்காங்கே சிற்சில பிரபந்தங்களை (ஆழ்வார்களின் அருளிச் செயல்களை) மட்டும் பாடி முடித்தாலும், முடிவில் 'சாற்றுமறை' நடத்துவது மரபு. 'சாற்றுமறை' என்பது, பாடி முடிக்கும் பிரபந்தங்களில் இறுதியில் உள்ள ஒன்று அல்லது இரண்டு பாடல்களை முறையாகப் பாடிப் பெருமாளுக்கு மலர் வழிபாடு செய்வதாம். திருப்பல்லாண்டு திருப்பள்ளியெழுச்சி, திருப்பாவை ஆகிய பிரபந்தங்களின் இறுதிப்பாடல்கள் சாற்றுமறை

யில் தவறாமல் இடம் பெறும். சுருக்கமாகச் செய்யும்போதும், திருப்பாவையின் இறுதிப் பாடல்களாகிய 'சிற்றஞ் சிறுகாலை'யும், 'வங்கக் கடலும்' தவிர்க்க முடியாதவை. அவை இல்லாமல் 'சாற்று மறை' இல்லை.

திருப்பாவை என்னும் நூல் தோன்றிய நாள் தொடங்கியே அதற்கு ஏற்றம் கொடுத்து வந்துள்ளார்கள். 'மார்கழி நோன்புப் பாடலாக' அது அமைந்திருந்தாலும், அது ஆண்டு முழுவதும், நாள்தோறும் பாடப்பட்டு வருகிறது. இத்தனை நூற்றாண்டுகளாக அதனை இடைவிடாமல் பாடி வந்துள்ளார்கள். வைணவர்களுக்கு முதன்மையாகவும், முடிவாகவும் உள்ள நூல் திருப்பாவையே. 'திருப்பாவை' முழுவதும் பாட முடியாதவர்களும், 'சிற்றஞ் சிறுகாலை'யைத் தவறாமல் ஒவ்வொரு நாளும் பாடி வருகிறார்கள். ஆகவே, அப்பாடல் ஒலித்திருப்பதுபோல், உலகில் வேறு எந்த ஒருபாடலும் அத்தனை முறை ஒலித்திருக்குமோ என்பது ஐயம். அந்தப் பாடல் ஒலித்த எண்ணிக்கையை மற்றெதனையும் விட மிகுதியானது என்றால் வியப்பில்லை. அந்த ஒரு பாடல்:

''சிற்றஞ் சிறுகாலை வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே யாவோம்; உனக்கே நாம் ஆட்செய்
வோம்;
மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்''

—திருப்பாவை, 29.

R. RAJU,
Dy Commissioner H.Qrs,
(Retired)
HR&CE Administration Dept

இத்தலையால் ஏதும் இல்லை

உலகில் ஓர் ஊரை அடைவதற்குப் பல வழிகள் இருப்பது உண்டு. ஆனால் இறைவனை அடைவதற்கு இங்ஙனம் இல்லை. பகவத் பிராப்திக்குப் பிரபத்தி என்னும் வழி ஒன்றுதான் உண்டு. இவ்வுண்மையைச் சாத்திரங்கள் அனைத்தும் தெளிவாகச் சாற்றுகின்றன. இவ்வுண்மையைத் தெளிந்து நாம் பிறவழிகளில் முயலாமல், பிரபத்திநெறி ஒன்றிலேயே ஊன்றி ஒழுகுதல் வேண்டும். அப்போதுதான் நாம் நம்முடைய சுயமுயற்சியில் ஈடுபடுகின்ற இழிநிலை விலகும். நம்மால் நமக்கு நாமே விளைவித்துக் கொள்ளவல்ல நன்மை எதுவும் இல்லை. நமக்கு எல்லா நன்மைகளும் இறைவனாலேயே உண்டாகும் என்று, நம்பித் துணிந்திருப்பதுதான் நம்முடைய கடமையாகும். இத்தகைய உணர்வும் தெளிவும் நமக்கு வாய்ப்பது எளிதன்று. அதுவும் நமக்கு, இறைவனின் திருவருளினாலேயே கிடைத்தல் வேண்டும்.

பேற்றை அடைவதற்குரிய வழியானது வேறொன்றும் இல்லை. சித்தோபாயம் ஆகிய இறைவன்தான், நம்முடைய பேற்றுக்குச் சாதனம் என்று நூல்களெல்லாம் கூறினால், அதற்கு இசைந்தும்; மற்றைய வழிகளையெல்லாம் அறவே ஒழித்துச் சித்தோபாயம் எனப்படும் இறைவனின் வழியிலேயே சேர்ந்து ஒழுகுக என்று நூல்கள் கட்டளையிட்டால் அதற்கு இசைந்தும்; நாமே நம்முயற்சியில் இறங்காமல், இப்பக்கமாகிய நம்மால் விளையக்கூடியது எதுவும் இல்லையென்று தெளிந்து, செயலற்றுச் சும்மா இருப்பதுதான், அப்பக்கமாகிய இறைவனால் நமக்கு வாய்த்த திருவருளாகும்.

வழியாவ தொன்றென்றால் மற்றவையும் முற்றும்
ஒழியாஅது ஒன்றுஎன்றால் ஓம்என்று-இழியாதே
இத்தலையால் ஏதும் இலைஎன் றிருந்ததுதான்
அத்தலையால் வந்த அருள்

—பிரமேயசாரம்.

[வழி-சாதனம். ஓம்என்றல்-ஆம் என்று சம்மதித்தல். அது-சித்தோபாயம், கடவுள். ஒன்று-சேர். இத்தலை-உயிர்களின் பக்கம். அத்தலை-இறைவனின் பக்கம்.]

—ஆசிரியர்

"திருவண்டப்பகுதி"

திரு. டாக்டர் தேவசேனாபதி, M.A., Ph. D.,

நாம் வாழும் இவ்வுலகத்தையும் நமக்கு ஒளி தரும் சூரியனையும்விட மிகப் பெரியனவாகப் பல நூறாயிரம் உலகங்களும் விண்மீன்களும் உளவென்று வானியல் வல்லுநர் தொலை நோக்கியின் உதவிகொண்டு ஆராய்ந்து சொல்கின்றனர். கண்ணுக்குப் புலனாகாப் பல நுண் உயிர்கள் இருக்கின்றன என்று, உருப்பெருக்கியின் துணைகொண்டு உயிரியல் வல்லுநர் கூறுகின்றனர். தொலைநோக்கி, உருப்பெருக்கி போன்ற கருவிகளின் உதவியின்றி மாணிக்கவாசகர் இயற்கைச் சூழலில் உள்ள பெரியனவற்றையும் அவற்றை இயக்கும் நுண்ணியவற்றையும் தம் அகக்காட்சியில் பார்க்கின்றனர். பெரிய உலகங்களும் பல ஞாயிறுகளும் இறைவன் திருமுன் அணுவையொத்த சிறுமை உடையனவாகத் தோன்றுகின்றன. இறைவன் அருள்வழி நின்று இவற்றைப் படைத்தும் காத்தும் வரும் கடவுளரும், நுட்பமாயிருந்தே இவற்றை இயக்குவோராயினும், இறைவனைவிட நுண்ணியர் அல்லர். ஆக, பெரியனவற்றைவிட மிக மிகப் பெரியவனாகவும், நுண்ணியவற்றைவிட மிக மிக நுண்ணியனாகவும் இறைவன் உளன். பருமை-நுண்மை இயைந்த இந்நிலை, மாணிக்கவாசகரை வியப்பில் ஆழ்த்துகிறது. இதனை உளங்கொண்டு இப்பாடலுக்கு விளக்கம் தரும்வகையில், 'சிவனது தூல சூக்குமத்தை வியந்தது' என்னும் சொற்கள் திருவண்டப்பகுதி என்னும் தலைப்பை அடுத்துத் தரப்பெற்றுள்ளன.

இவ்வுலகில் உயிர்கள் வாழ்வதற்காக ஞாயிறு, திங்கள், வெளி(வான்), காற்று, நீர், தீ நிலம் தேவைப்படுகின்றன. இவற்றிற்குள்ள சிறப்புத் தன்மையை இவற்றிற்கு அளிப்பவன் இறைவன். உயிர்களுக்குப் பயன் தருவதற்காகப் பரிதியில் ஒளியும், திங்களில் தண்மையும், வானில் கலப்பும், காற்றில் ஊக்கமும், தீயில் வெம்மையும், நீரில் சுவையும், மண்ணில் திண்மையும் இறைவனால் அமைக்கப்பெற்றுள்ளன.

படைக்கும் கடவுளையே படைப்பவனாகவும், காக்கும் கடவுளையே காப்பவனாகவும், அனைத்தையும் தன்னுள் காப்பவனாகவும் உள்ள இறைவன், 'முன்னோனாகவும்' 'முழுதோனாகவும்' இருப்பதைக் காணுமாறு உயிர்களை அழைக்கிறார் மாணிக்க வாசகர். காட்டும் உபகாரம், காணும் உபகாரம் என்னும் இரண்டினையும் செய்யும் இறைவனைப் போலவே இவரும் 'காண்க', 'காண்க' என்று இறைவனின் பல காட்சிகளைக் காட்டுகிறார். இக்காட்சிகள் வெறும் பேச்சை ஒட்டியவை அல்ல. தம் கற்பனையில் எழுந்தவை அல்ல, தாம் கண்டு அதனை நமக்குக் காட்டுகிறார். 'கண்ணால் யானும் கண்டேன் காண்க' என்பது அவர் கூற்று. இறைவன் பக்தி வலையில் படுவோனாகையால் அன்னராயினர். அனைவரும் இக்காட்சி பெறக்கூடியவர் என்பதை 'யாவரும் பெறவுறும் ஈசன் காண்க' என்னும் சொற்களால் தெளிவுபடுத்துகிறார்.

பருமையும் நுண்மையும் இயைந்த நிலை உடையவனாயிருத்தலைப் போல இறைவன் கடந்தநிலை, கலந்தநிலை - மேன்மை, எளிமை என்னும் முரண்பாடுகளையும் தன்னுள் கொண்டு நிற்பவன். எனவேதான், 'பிரமன், மால் காணாப்பெரியோன்' 'சொற்பதம்கடந்த தொல்லோன்' 'சித்தமும் செல்லாச் சேட்சியன்' என்று அவன் கடந்தநிலை, மேன்மை நிலை ஆகியவற்றை உளங்கொண்டு பேசுகிறார். தன்முனைப்பு நீங்கா முயற்சியால் இறைவனைப் பெறமுடியாதாகையால் அவன்ஒளித்துக்கொள்கிறான். திருடனைப்போல ஒளித்துக் கொள்வதால் அவன் 'சோரன்' எனப்படுகின்றான். அன்புகொண்டு அவனைப் பிடித்துவிடலாம் என்ற அன்பிலும், முனைப்பு தலைகாட்டுமாயின் அங்கும் இறைவன் தன்னை மறைத்துக் கொள்கிறான்.

ஒளித்துக்கொள்வதும் வெளிப்படுத்திக் கொள்வதும் இறைவன் உயிர்களின்உயர்ச்சியை உளங்கொண்டே செய்வனவாகும். 'மருவி எப்பொருளும் வளர்ப்போன்' 'என்னை வளர்ப்பவனே' என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். வளர ஊக்கம் கொள்ளாது கீழ்நிலையிலேயே இருக்கின்ற உயிர்களை உளங்கொண்டு அவற்றின் குறையைத் தம்மேல் ஏற்று 'வளர்கின்ற நின் கருணைக்கையில் வாங்கவும் நீங்கி இப்பால் மிளிர்கின்ற என்னை' என்று தம்மை நொந்து கொள்கிறார். எவ்வளவுதான் நீங்கிச் சென்றாலும் இறைவன் உயிர்களை நீங்கவிடுவதில்லை. 'அல்லும் பகலும் அருளுகின்றானே' என்று திருமூலர் கூறுவதைப்போல இவரும் 'நிச்சலும் ஈர்த்தாட்கொள்வோன்' என்று வாழ்த்துக் கூறுகிறார்.

உயிர்ப்பண்ணையில் இறைவன் கொண்டுள்ள நோக்கம் யாது? 'அழிதரும் யாக்கை'யை ஒழித்து, 'உருகுவது உள்ளம் கொண்டு ஓர் உருச் செய்தாங்கு' 'அள்ளூறு ஆக்கை'யைத் தந்து 'தன்னலத்தில் ஊறிப்போயிருந்த உயிர்களையும் இருப்பனவாக்குவதே உயிர்வளர்ச்சி முடிநிலையாக இறைவன் கொண்டுள்ளான் என்பது தெளிவாகத் திருவண்டப் பகுதியில் கூறப்பெறுகிறது. இறைவனை அருள்முகிலாக இப்பகுதியில் இவர் உவமித்திருப்பது எழில் மிக்கசொல் ஓவியம். படித்துப் படித்து இன்புறத்தக்கது. ✱

திருவாசகத்தில் சைவசித்தாந்தம்

திரு க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T.,
தனி அலுவலர், சைவசித்தாந்தத் தத்துவத்துறை,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை-21.

திருவாசகம் என்பது மாணிக்கவாசகர், குருவடிவில் வந்து தமக்கு அருள் செய்த சிவ பெருமானை, உள்ளும் புறமும் கண்டு, அம் முதல்வனோடு தமக்கிருந்த தொடர்பு பற்றிப் பாடாண் திணையில் வைத்துப் பாடியருளிய அருட்பாடல்களாகும். அவை 656 எனக் கணக் கிடப்படுகின்றன. வாசகம் என்பது சொல்; அதாவது, பொருளை நம் உணர்வில் விளங்கித் தோன்றச் செய்வது. பொருளை வாச்சியம் என்பர்; அதாவது வாசகத்தாற் குறிக்கப்பெறு வது.

பொதுவாக முதல்வன் சொல்லுலகு, பொருள் உலகு என்பவற்றில் வேறின்றிக் கலந்து தொழிற்படுத்துதல் பற்றி, ''எல்லாம் சிவனென நின்றாய் போற்றி'' எனவும், சிவனும் சக்தியும், பொருளும் சொல்லும் போலப் பிரிப் பின்றியிருத்தல் பற்றிச் சொல்லெல்லாம் சிவ வடிவென்றும் மெய்யுணர்ந்தோர் கூறுவர். இவ்வுண்மையை அடிநிலையாகக் கொண்டு துறைமங்கலம் சிவப்பிரகாசர் உலகத்தில் பிறர் சொல்வனவும் வாசகம் எனப்படினும், மாணிக்க வாசகர் திருவாசகம்தான் வாசகம் எனச் சிறப்பித்துக் கூறத்தக்கது; அதற்குக் காரணம் அதன் பொருளாக, வாச்சியமாக, குறிக்கப் பெற்றவர் சிவபெருமானே, கூத்தப்பிரானே ஆத லால் எனப் பொருத்தமும் நயமும் தோன்றும் படி கூறுகிறார். நால்வர் நான்மணி மாலை யில், அவர் மாணிக்கவாசகருக்கு மேலும் ஒரு சிறப்பைக் குறிப்பிக்கின்றார். பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளத்தில் மூழ்கியவர். அதனால் அவர் புனிதர், மாசற்றவர், சுத் தான்மா என்கின்றனர். பெரிய துறை படிக் கட்டுகள் செம்மையாக, அகலமாக, வழுக்குத லின்றி அமைந்து, நன்கு முழுகி மாசகற்றி இன்புறுவதற்கு அமையும்.

''பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்த வாசகமே
வாசகம்; அதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல் வேய்த்தோ ளிடத்தவனே''

என்பது நான்மணிமாலையில் ஒரு மணி. இத னால் எடுத்துக் கொண்ட புகழ்ப்பாவின் சிறப் பும், அதனை அருளிச் செய்தவர் சிறப்பும் ஒருவாறு விளங்கும்.

வேதப்பயன் சைவம் ; கருத்தின் பயன் எழுத்தஞ்சு என்பது அநுபூதிமான்களின் துணிபு. அதனால், திருவாசகத் திருமறையில் சிவபுராணம் எனப்படும் முதற்பாட்டின் தொடக்கமே திருவாசகத்தையும், திருவாச்சி யத்தையும் உணர்த்துகின்றது. அத்தொடக்கம்

''நமச்சிவாய வாஅழ்க!
நாதன் தாள் வாழ்க!

என்பது. சிவ என்னும் இரண்டு எழுத்துக்கள் முறையே பேரின்பச் சிவத்தையும், அருளொளி ஆற்றலையும் குறிப்பன. ''நமச்சிவாய'' என் பது வாசகம்; ''நாதன்தாள்'' என்பது வாச்சி யம்.

சிவபிரான் மும்மூர்த்திகளுக்கும் அப் பாற்பட்டு அவர்களை அதிட்டித்து நின்று முத்தொழில் புரிகின்றான் என்பதைத் திருப் பள்ளி எழுச்சியில்,

''முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர்: யாவர் மற்றறிவார்?''

என வருதலால் அறிதல் கூடும். இறைவன், தான் ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ் சோதியாயுளன் என்பதையும், தான் முதலும் முடிவுமாய் நின்று உயிர்களை ஐந்தொழிற் படுத்துவன் என்பதையும், திருவெம்பாவையில்

''ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும்''

எனவும்,

''போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம்
பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்
கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்

போற்றிமால் நான்முகனும் காணாத புண்
டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண் டருளும்
பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பா
வாய்''

எனவும் உணர்த்துகின்றார் ஆசிரியர்.

முதல்வன், ஒருவனாய், ஒப்பற்றவனாய் உளன் என்பதை, ''ஒருவன் என்னும் ஒருவன் காண்க'' என்கிறார். இத்தொடர் எவன் இவ்வுலகனைத்தையும் தன் ஆளும் ஆற்றலால் ஆளுகின்றானோ, அவ் உருத்திரன் ஒருவனே, இரண்டாவதாக நிற்பான் அல்லன் எனவரும் சுவேதாசுவதர உபநிடதத்தைக் குறிக்கின்றது என்பது திருப்பாதிரிப்புலியூர்த் தவத்திரு ஞானியார் சுவாமிகள் போன்ற சான்றோர்களின் துணிபு. அதற்குச் சான்றாகத் திருவாய்மொழியில் இக்கருத்து,

''ஒளிமணி வண்ணன் என்கோ?....
ஒருவன் என்றேத்த நின்ற—
நளிர்மதிச் சடையன் என்கோ.
கண்ணனெம் மாயனையே''

எனவருதலைக் காட்டுவர். இங்கு உருத்திரன் என்றது சுத்தமாயா புவனாந்தம் சங்கரிக்கும் மாருத்திரன் என்றோதப்படும் பரமசிவனை. சிவபுராணச் செய்யுளில் வரும்,

.. ..''விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய்'' (49,650)

என்னும் பகுதி அங்கி, வாயு, இந்திரன் என்போரால் அறியப்படாது, இயக்கராக நின்ற நிலையைக் கூறும் கேனோபநிடதக் கதையைக் குறிப்பதாக, மறைமலை அடிகள் தமது விரிவுரையில் குறித்துள்ளார்.

இவற்றால், ''வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்'' எனவும், ''வேதத் தலைதரு பொருளாய்'' எனவும் சிவப்பிரகாசம் கூறும் சைவ சித்தாந்தத்திற்குத் திருவாசகம் மூலமாகவும் எடுத்துக்காட்டாகவும் அமைகிறது என்பது விளங்கும்.

ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
(1,4)

''.. .. .. .. வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தஆகன்ற
..
நுண்ணியனே (1, 36, 7)

வான நாடரும் அறியொணாத நீ
மறையில் ஈறுமுன் தொடரொணாதநீ
ஏனை நாடரும் தெரியொணாத நீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடுவித்தவா
உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா
நைய வையகத் துடைய விச்சையே (5,95)

என்றாற்போல வருவன, சைவ சித்தாந்தத்திற் கொள்ளப்படும்.,

''வேதநூல் சைவநூல்என் றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூல்இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல்; அனாதி அமலன் தருநூல் இரண்டும்;
ஆரணநூல் பொது; சைவம் அரும் சிறப்பு
நூலாம்''

—சித்தி; சுபக்—297.

''ஊன நடனம் ஒருபால், ஒருபாலா
ஞானநடம் தான்நடுவே நாடு''
—திருவருட்பயன்-9, 3

என்றாற் போன்ற உண்மைகளுக்கு மூலமாக நிற்பவை.

இறை, உயிர், தளை என்னும் முப்பொருளும் என்றும் உள்ளவை; இவற்றுள் இறை ஒருவனே, தானே உணர்ந்து உயிர்களை உணர்த்தித் தூய்மையும், வலிவும், பேரின்பமும் அருள்வோன். உயிர்கள் பல, உணர்த்த உணர்வன, சார்ந்ததன் வண்ணமாய் உலகையும் இறைவனையும் அழுந்தி அறிந்து நுகர்வன; இறைவனின் திருவருளையே சார்ந்து ஒழுகற்பாலன; தளை ஆணவம், கன்மம், மாயை என முத்திறப்படுவன; அவற்றுள் ஆணவம் உயிர்களின் இயற்கைக் குற்றமாய், ஒன்றேயாய்ப் பலபல சத்திகளை உடையதாய்ப் பகைப் பொருளாய் உள்ளது, உயிர்களுக்கு யான், எனது என்னும் செருக்கைத் தருவது; மாயை உடம்பு, கருவி, உலகு, நுகர்ச்சிப் பொருள் என முதல்வன் திருவருளால் காரியப்பட்டு நின்று ஆணவ நோயைத் தீர்க்கும் மருந்தாய் உள்ளது; கன்மம் என்பது உயிர்கள் உடம்பைப் பெற்று அறிந்து செயல்படுங்கால் யான் எனது என்னும் செருக்குப் பற்றி இறைவன் திருவருளால் அவ்வுயிர்களின் போக்கையும் நுகர்ச்சியினையும் கட்டுப்படுத்துவது; இவ்வாறு முதல்வன் மலங்களின் வழிநின்று செய்யும் உபகாரத்தால் உயிர்கள் மல ஆற்றலின் விடுபட்டுத் தம்மையும் தலைவனையும் உறும் பக்குவ நிலையினைப் பெறும்; அப்போது முதல்வன் குருவாய் வந்து உணர்த்தி, இதுகாறும் உலகினால் உலகை அறிந்து நுகர்ந்து வந்த உயிர், உலகப் பற்றின் நீங்கிச் செம்பொருளாகிய சிவத்தைச் சார்ந்து, அவன் அருளால் அவனை நுகர்ந்து சிவசாமியம் பெற்றின்புறச் செய்வன் என்பது, சைவ சித்தாந்தத்தின் திரண்ட கருத்து. இப் படிநிலைகளையும் முடிந்த பேரின்ப நிலையினையும் விளங்க அடக்கிக் காட்டும் கண்ணாடியாய், திருவாசகம் திகழ்வதைக் காணலாம்.

''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி...
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்
பெருமான்''
சிவபு. 26—31

என்னும் வரிகள், உயிர்கள் பல என்பதையும், அவை பிறந்திறந்து உழல்வன என்பதையும் விளக்குவன.

செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரி
வேனை
மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்
வன்றான்
நம்மையும் ஓர் பொருளாக்கி நாய்சிவிகை
ஏற்றுவித்த
அம்மைஎனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்
சோவே
திருச்சா: 9

என்றதனால் மூன்று மலங்களின் உண்மையும், அவை முதல்வனால் நீங்குமாற்றையும் தெளிய உணரல் ஆகும்.

''சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி
எனையாண்ட—திருச். 1,3

என்னும் அடியால் இறைவன் பசுத்துவ நீக்கமும், சிவத்துவ விளக்கமும் செய்பவன் என்பது விளங்கும்.

''நானார்? என் உள்ளமார்? ஞானங்கள் ஆர்?
என்னையார் அறிவார்?
வானோர் பிரான் என்னை
ஆண்டிலனேல்; மதிமயங்கி
ஊனார் உடைதலையில்
உண்பலிதேர் அம்பலவன்
தேனார்தண் கமலமே
சென்றூதாய் கோத்தும்பீ''

என்பதனால், இறைவன் குருவாக வந்து தத்துவஞானத்தை அருள்கின்றார் என்பதை உணரல் ஆகும். மதிமயங்கி என்பது பெயர்; அறிவு கலங்கி இறைவனை உணராது மயங்கிய பிரமன்; அவன்றன் தலையோட்டில் பலி தேர்பவன் முதல்வன் என்க.

குவளைக் கண்ணி கூறன் காண்க!
அவளும் தானும் உடனே காண்க!

என்பவற்றால், இறைவன் தனது சிற்சத்தியோடு பிரிப்பின்றித் தாதான்மியமாய் உடனிற்பவன் என்பதும், அதுபற்றியே சிவபிரான் விச்சுவரூபி, விச்சுவகாரணன், விச்சுவாந்திரியாமி, விச்சுவாதிகன் என வடமொழி வேதங்களால் துதிக்கப்படுவன் எனவும் உணர்ந்து கொள்ளலாம்.

பொதுவாகத் திருவாசகம் அனுபவ ஞானப்பயனாக உள்ளது என்பதையும், மனம் உருக்கி மலம் முருகக்கக் கூடிய பெருமையினை உடையது எனவும் உணர்தல் வேண்டும்.

பொறுத்தருள்க!

''திருக்கோயில்'' இதழினை அச்சிடுதற்குரிய தாள்கள் கிடைப்பதும், அஞ்சல் தலைகள் கிடைப்பதும் அரிதாக இருத்தலினால், இதழ்களைக் குறித்த காலத்தில் அஞ்சலில் அனுப்புதற்கு இயலாமல் காலதாமதம் நேர்ந்து வருகின்றது. இது குறித்து அன்பர்கள் பொறுத்தருள வேண்டுகின்றோம்.

—ஆசிரியர்

உச்சியான் உச்சியான்

பொருளைப் பெறுதலும், அதனை இழத்தலும், இன்பம் துய்த்தலும், துன்பம் உழத்தலும், நோய்களை அடைதலும், உடல் மெலிதலும் ஆகிய இவைகளெல்லாம், அவரவர் முன்பு செய்த வினைகளுக்கு ஏற்ப வந்து சேரும். ஆதலால், இன்பம் வந்தபோது மகிழ்தலையும், துன்பம் நேர்ந்தபொழுது தளர்தலையும் விட்டொழியுங்கள். எதனாலும் ஒரு பயனை விரும்பாத ஒருவன், எத்தகைய பயனையும் கருதாமல் (நிஷ்காமியமாக) இறைவனைத் துதித்தால், எழில்மிகு பரமபதமாகிய வைகுண்டத்தின் உச்சியிலுள்ள எம்பெருமான், பயன் கருதாமல் அன்புடன் பணிகின்ற நிஷ்காமிய பக்தனின் தலை உச்சியில் வந்து சேர்ந்து, அருள் புரிவான்.

வித்தம் இழவு இன்பம் துன்பம்நோய் வீகாலம்
தத்தம் அவையே தலையளிக்கும்;—அத்தைவிடீர்!
இச்சியான் இச்சியாது ஏத்த எழில்வானத்து
உச்சியான், உச்சியான் ஆம்.

—பிரமேயசாரம்

பலவகைச் செல்வங்களைப் பெறுதலாகிய பேறு, வித்தம் எனப்பட்டது. அவற்றையெல்லாம் அழியவிடுதல், இழவு எனப்பெற்றது. வீழ்காலம்-உடம்பு விழுந்து இறப்பு நேரும்காலம். 'வீழ்காலம்' என்பது 'வீகாலம்' என வந்தது. தத்தம் அவை- தாம்தாம் செய்த வினைகளாகிய பாவ புண்ணியங்கள். தாம் தாம் செய்த வினைப்பயன்களை, அவரவர் தவறாமல் அடைந்தே தீருவர் ஆதலால், ''தத்தம் அவையே தலையளிக்கும்'' என்றார். மகிழ்ச்சி அடைவதனால் மிகப் பெறுவதும், தளர்ச்சி உறுவதனால் குறையப் பெறுவதும் இல்லையாதலின் ''அத்தைவிடீர்'' என்றார். இச்சியான்-எப்பயனையும் விரும்பாத பக்தன். ''உச்சியான்-(பரமபதத்தின் உச்சியிலுள்ள திருமால்), உச்சியான்ஆம்—(பக்தனின் தலை உச்சியின் மேல் எழுந்தருள்வான்)'' என்றது, ஒருவகைச் சொல் நயம்.

—**ஆசிரியர்.**

தித்திக்கும் தெய்விகத் தீந்தமிழ்

தாயுமான சுவாமிகள், நம் தமிழ்நாட்டில் தோன்றியருளிய தவஞானச் சான்றோர்கள் பலருள், தலைசிறந்த ஒருவராவர். அப்பெருந் தகையாரை நினைக்குங்காலெல்லாம், அவர்தம் தூய துறவு நெறிப் போக்கு-தத்துவ ஞானச் சால்பு-யோகஅநுபவ நலம்-அருளியல் உள்ளம் —தாழ்வெனும் பணிவுத்தன்மை-பக்தி மனப் பான்மை-பலகலைநூற் பயிற்சி-உலகியல்அறிவு —அரிய இனிய கவிதைத்திறன்-ஆகிய பற்பல நற்பண்பு நலங்கள், நம்மனோர் மனக்கண் களின் முன்னே தோன்றிக் களிநடம் புரிகின் றன.

''புவிராசர், கவிராசர்
தவராசர் என்றுனைப்
போற்றி, சய போற்றி என்பார்''

என்று தாயுமான சுவாமிகள், தம்முடைய மௌனகுரு வணக்கப் பாடலில் குறிப்பிடுவ தனைத் தழுவி, நாமும் நம்முடைய குருவாகிய தாயுமானவர் பெருந்தகையைக் கவிராசர் என்றும், தவராசர் என்றும் களிப்புறப் போற் றிப் புகழ்ந்து மகிழலாம்.

இத்தகைய பெருநலஞ் சான்ற வித்தக ராகிய தாயுமான சுவாமிகள், சிவபெருமான் மீது கல்லும் கரையும்படி, எவ்வளவோ பல சிறந்த கவிதைகளைப் பாடி, அப்பெருமானின் கருணையைப் பெறக் கற்றாமனம் எனக் கதறி யும் பதறியும் முயல்கின்றார். ஆயினும், அவ ருக்குப் பெருமானின் திருவருள் கிடைப்ப தாகத் தோன்றவில்லை. அங்ஙனம் கிடையா மைக்குக் காரணம் யாதாக இருத்தல் கூடும் என்று, அவர் சிந்திக்கின்றார். ஒன்று சிவ பெருமான் கல்நெஞ்சனாக இருத்தல் வேண்டும்; அல்லது தம்முடைய உள்ளம் உண்மைப் பக்தி யுடையதாக இல்லாதிருத்தல் வேண்டும் எனக் கருதுகின்றார். சிவபெருமான் கல்நெஞ்சன் அல்லன், கருணை வடிவினன் என்பதில், அவ ருக்குச் சிறிதும் ஐயம் தோன்றவில்லை. ஒருகால் தாம்தான் உண்மைப் பக்தியும், இறையருளில் உறுதியான தெளிவும், ஊற்றமும் கொண்டிருக்க வில்லையோ? என்று ஐயுற்றுத், தம்மைத்தாமே அவர் தற்சோதனை புரிந்து கொள்ளுகின் றார். இவற்றில் தம்மாட்டுக் குறை ஏதும் இல்லை என்றே தெளிகின்றார். இவ்விரு காரணமும் இல்லையாகவும், தமக்குச் சிவ பெருமானின் திருவருள் கிடையாமைக்கு, யாது காரணமாக இருத்தல் கூடும்? என்று மேலும் மேலும் சிந்திக்கின்றார்.

அந்நிலையில், அவருக்கு ஓர் உண்மைக் காரணம் புலனாகின்றது. தாம் எவ்வளவோ கனிந்து கசிந்து, கரைந்து நெகிழ்ந்து கதறிப் பதறித் துதித்துப் பாடினாலும், சிவபெருமான் தமக்குத் திருவருள் புரியாமைக்குக் காரணம், சிவபெருமானின் திருச்செவிகளில் தம்மு டைய பாடல்கள் சென்று சேர்ந்திலாமையே என்று, தாயுமானவர் தெளிந்தார். தம்மு டைய பாடல்கள், சிவபெருமானின் திருச் செவிகளில் சேராமைக்குக் காரணம், ''சம்பந் தர் அப்பர் சுந்தரர் என்னும் தேவார முதலிகள் மூவரும், மொழிக்கு மொழி தித்திப்பாக, அருமையாகவும் இனிமையாகவும் பாடியருளிய அற்புதப் பாடல்களில், சிவபெருமானின் திருச் செவிகள் பெரிதும் ஈடுபட்டுத் திளைத்து இன் புறுதலேயாகும். அங்ஙனம் திளைத்து நிற்கும் திருச்செவிகளுக்குத் தம்முடைய பாடல்கள் ஒரு சிறிதும் சென்று எட்டவில்லை; சுவை பயக்கவில்லை'' என்னும் உண்மையைக் கண்டு கொண்டார். இதற்குச் சிவபெருமானை நொந்து கொண்டு பயனில்லை என்று தெளிந் தார். தேவாரத் திருப்பாடல்களின் அருமை பெருமைகளை நினைந்து, உணர்ந்து விதந்து, வியந்து மகிழ்ந்து, தம்மைத் தாமே ஆறுதல் செய்து கொண்டு அமைதி அடைந்தார்.

''தேவரெலாம் தொழச்சிவந்த செந்தாள் முக்கண்
செங்கரும்பே! மொழிக்குமொழி தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும் திருச்செ விக்கு
மூடனேன் புலம்பியசொல் முற்று மோதான்?''

என்பது, அந்நிலையில் நமது தாயுமான சுவாமிகள் நவின்றருளிய, நலம் சிறந்த ஒரு திருப்பாடலாகும். இப்பாடலின் சொற் பொருள் நலங்கள் பெரிதும் சுவைத்து மகிழத் தக்கவை. தாயுமான சுவாமிகளின் தமிழ் நலஞ்சான்ற சைவநெறி உணர்வின் மாட்சிமை யினை, இவ் ஒரு சிறந்த திருப்பாடலே தெளி வுறச் செவ்விதின் விளக்குதற்குப் போதிய தாகும் எனலாம்.

(1) சிவபெருமானை வெறும் தொழு கைப் பொருளாகவும், தியானப் பொருளாக வுமே, தாயுமானவர் கொண்டிலர்; சிவபெரு மானை அன்பினால் வழிபட்டுப் பெரிதும் அனு பவித்து இன்புற்றவர் அவர்! சிவபெருமான் அவருக்கு இனிய தித்திக்கும் பொருளாய்த்

திகழ்ந்தான். ஆதலின் அவனை அவனது இயற்பெயரால் துதியாமல், **கரும்பு** என்றும், அது தானும் சிறப்பும் விழுப்பமும் மிக்க **செங்கரும்பு** என்றும் குறிப்பிட்டார். (2) கரும்பிற்குக் கணுக்கள் உண்டு. அதன் அடிப்பகுதி சிவந்த நிறமுடையதாய்ச் '**செந்தாள்**' என விளங்கும். கரும்பிற்குரிய இவ்விரண்டு இயல்புகளும், சிவபெருமான்பாலும் அமைந்து விளங்குகின்றன. கரும்பிற்குக் கணுக்கள் போலச் சிவபெருமான் மூன்று கண்கள் உடையவனாகத் திகழ்கின்றான். கரும்பின் அடிப்பகுதியாகிய தாள் சிவந்திருத்தல்போல, சிவபெருமானது திருவடிகளும் செந்தாள் எனும் நிலையில், சிவந்து திகழ்கின்றன. (3) சிவபெருமானின் தாள்கள் சிவந்து திகழ்தற்குக் காரணம், தேவர்களெல்லோரும் தம் திருமுடிகள், அப்பெருமானின் திருவடிகளில் படிந்து பொருந்துமாறு, பலகால் விழுந்து பணிதலேயாகும் என்றெல்லாம், சிவபெருமானின் அருமை பெருமைகளை அறிந்துணர்ந்து ''தேவரெலாம் தொழச் சிவந்த செந்தாள் முக்கண் செங்கரும்பே'' என்று விளித்து மகிழ்கின்றார், நம் தாயுமான சுவாமிகள்!

(4) அத்தகைய சிவபெருமான் தம் திருச்செவியால் கேட்டு மகிழும் தேவாரப் பாடல்களின் சிறப்பினை வியந்து நயந்து புகழ்ந்து போற்றி ''மொழிக்கு மொழி தித்திப்பாக மூவர்சொலும் தமிழ்'' என்று போற்றிப் பாராட்டி மகிழ்கின்றார். (5) இத்தகைய பாடல்களைக் கேட்டு இன்புறும் பேறு பெறுதலால் சிவபெருமானின் செவிகளை, வறிதே செவி என்று குறிக்காமல், **திருச்செவி** என்று சிறப்பித்தார். சிவபெருமானின் செவிகள் இயல்பாகவே திருவுடையன வாயினும், தேவாரப் பாடல்களை கேட்கும் பேறு பெறுதலால், மேலும் மிக்க திருவினை உடையனவாயின என்பது கருத்து. (6) '**மூவர்**' என்னும் பொதுச் சொல், ஈண்டுச் சிறப்புமுறையில் சம்பந்தர் அப்பர் சுந்தரர் என்னும் தேவார ஆசிரியர்களையே குறிப்பதாயிற்று. (7) மூவர் பாடும் என்னாமல், '**சொல்லும்**' என்றது, அப்பெருமக்கள் முயன்று முனைந்து வருந்திப் பாடாமல் இயல்பாகவும் எளிதாகவும் இனிதாகவும் பாடியருளினர் என்பது உணர்த்துதற்கு (8) தமிழ் தன் இயல்பிலேயே பலவகைச் சிறப்புகள் உடையதாயினும், தேவார மூவர் முதலிகளால் மேலும் மிக்க பற்பல சிறப்புக்களைப் பெற்றது என்று உணர்த்துவதற்கு, அதனை **''மூவர் சொலும் தமிழ்''** என்று போற்றிப் புகழ்ந்தார். (9) 'மூவர் சொலும் தமிழ் 'கேட்ட திருச்செவி' என்னாமல், '**கேட்கும்**' என்று நிகழ் காலத்தால் கூறியருளிய நுண்பொருட் குறிப்பும் ஈண்டுக் கருதி இன்புறுதற்குரியது. மூவர் முதலிகள் பாடியபோதுதான், சிவபெருமான் தேவாரம் கேட்டு மகிழ்ந்தான் என்பது இல்லை, தேவாரப் பாடல்களை எவர் எக்காலத்தில் பாடினாலும், 'கோழை மிடறாகக் கவிகோளும் இலவாக, ஏழை அடியாரவர்கள் எவ்வாறு பாடினாலும், சிவபெருமான் கேட்டு மகிழ்ந்து, எக்காலத்திலும் திருவருள் புரிகின்றான்' என்பது கருத்து. ''முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச் செப்புவர் நிகழும் காலத் தானே'' என்பது இலக்கண விதி. இதற்கு இயைய ''நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பான்'' சிவபெருமான் என்று, சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்திருத்தலும், நாம் இங்கு அறிந்து மகிழற்பாலது.

(10) தம்முடைய சிறுமையினையும், மூவர்களின் பெருமையினையும் திறம் தெரிந்து உணர்த்தத் தாயுமானவர் தம்மைத் தாமே '**மூடனேன்**' என்றுக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றார். தாம் பாடுவன தமக்கே பாடல்களாகத் தோன்றவில்லை என்பது உணர்த்த அவற்றைச் '**சொல்**' என்றும்; அவற்றைத் தாம் முறையாகவும் இனிமையாகவும் பாடிற்றிலர் என்பது குறிக்கப் ''**புலம்பிய**'' என்றும் அருளிச் செய்கின்றார். தம் அறியாமையில் எழுந்தன ஆதலாலும், பாடல் என்னத் தகுதியற்றனவாதலானும், தாம் ஒப்பாரிபோல அழுது புலம்பியவை யாதலாலும், அவைகள் சிவபெருமானின் செவிகளில் சென்று சேரமாட்டா என்பதனை வலியுறுத்துதற்கு 'முற்றுமோ' என வினவியதோடு அமையாது, '**முற்றுமோதான்?**' என்றும் நீட்டி வினவி, முற்றமாட்டா என்னும் ஆறுதல் அமைதியுணர்வைப் புலப்படுத்திக் கொள்கின்றார், தாயுமானவர்.

இவ்வினிய சிறந்த எழில்மிக்க சிறிய திருப்பாடலால், தாயுமானவர் சிவபெருமான்பால் கொண்டிருந்த பக்தியுணர்வின் மேம்பாடும்; அவருக்குத் தேவாரத் திருமுறைகளிலும், அவற்றை அருளிச் செய்த சம்பந்தர்-அப்பர், சுந்தரர் என்னும் மூவர் பெருமக்கள் இடத்திலும் இருந்த எல்லையற்ற பெருமதிப்பும், பிறவும் நம்மனோர்க்குப் புலனாகின்றன. மொழிக்கு மொழி தித்திக்கும் விழுப்பம் உடையவை என்று தாயுமானவர் பெருந்தகையே போற்றப், புகழ் மிக்குப் பொலிகின்ற மூவர் தமிழாகிய தேவாரத் திருமுறைகளின் சிறப்பினையெல்லாம் உணர்ந்து, நம் தமிழ் மக்கள் அனைவரும் அவற்றைப் போற்றிப் பயின்றுணர்ந்து மகிழ்ந்து, வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து நலம் பெறுவார்களாக!

—ஆசிரியர்.

நடராஜ சிவம்

தவத்திரு "கவியோகி மகரிஷி"
சுத்தானந்த பாரதியார்,
சென்னை-20.

அஞ்சல் என்று அங்கை காட்டி
அழகிய முறுவல் காட்டிக்

குஞ்சித பாதம் காட்டிக்
குறித்தொரு பொருளைக் காட்டிச்

செஞ்சுடர்ச் சோதி காட்டிச்
செகவிளை யாடல் காட்டி

நெஞ்சிலே நடஞ் செய்கின்ற
நிமலனே போற்றி போற்றி!

ஒவ்வோர் உள்ளத்திலும் நாடியிலும் உயிர்த் துடிப்பாய் இருக்கும் சுத்த சக்தி சிவமே, நடராஜா. "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்றும், 'பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே" என்றும் 'அணி வளர் திருச்சிற்றம்பலத் தரசே' என்றும் மாணிக்கவாசகர் பாடியாடிப் பரவினார். அவர் வழிவந்து, திருவாசகத்தையே அடியொட்டிப் பாடிய அருட்சோதி வள்ளலார் நடராஜரையே குருவாகக் கொண்டார். 'மாற்றறியாத செழும் பசும் பொன்னே-தனி நடராஜ என் சத்குருமணியே, திகைடந்த குருமணியே சிவஞான மணியே, சித்தசிகாமணியே என் திருநட நாயகனே" என்று பாடினார். பள்ளியறையிலும் திருவாசகம் படித்தார்.

அடியார்களிற் பெரியாராய, அப்பர், 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயும், குமிழ் சிரிப்பும், இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும்" காணவே மனித்தப் பிறவியை வேண்டினார். சேக்கிழார் "அம்பலத்தாடும் சோதிப் பெருமானை உலகெலாம் உணர்ந்து வாழ்த்தி வணங்கத்தரும் எனப் பாடினார். மண்ணிற் பிறந்த பயன் பேரின்ப வடிவான அம்பலக் கூத்தனைக் கண்டுருகுதலே எனக் குழைந்தார். கருமூலம் களையும் திருமூலமந்திரமோ, நடராஜப் பெருமானையே நவதந்திர யோகமூர்த்தியாகப் போற்றுகிறது. உலகமெல்லாம், உள்ளமெல்லாம் நடராச மயமாகக் காண்கிறார் மூலயோகி.

"தத்துவம் ஆடச் சதாசிவம் தான்ஆடச்
சித்தமும் ஆடச் சிவசக்தி தான்ஆட
வைத்த சராசரம் ஆட; மறையாட
அத்தனும் ஆடினான் அம்பலக் கூத்தே"

என்று திருக்கூத்தைக் காண்கிறார். கண்டு கண்டு கண்குளிர மனங்குளிரப் பேரின்பச் சிலிர்ப்பெடுத்து நுகர்கிறார்.

"புளிக்கண் டவர்க்குப் புனலூறு மாபோல்
களிக்குந் திருக்கூத்தைக் கண்டவர்க் கெல்லாம்
துளிக்கும் அருட்கண்ணீர் சோர்நெஞ்சு
உருக்கும்
ஒளிக்குள் ஆனந்தத்து அமுதூறும்
உள்ளத்தே"

என்று சுவைத்துக் களிக்கூத்தாடுகிறார் மூல யோகி, நவதந்திரச் சித்தர்.

"தோற்றம் துடி யதனில்
தோயும் திதி அமைப்பில்

சாற்றியிடும் அங்கியிலே
சங்காரம்—ஊற்றமாய்

ஊன்று மலர்ப் பதத்தில்
உற்ற திரோதம்; முத்தி

நான்றமலர்ப் பாதத்தே நாடு"

என்பது உண்மை விளக்கமாகும்.

மாயைத் தளையுதறி, வல்வினையைச் சுட்டெரித்து, அருள்நேயத்தால் ஆன்மாவை ஆனந்தவாரிதியில் அழுத்தி, முத்தி தரவல்லது நடராஜ சிவமே என்று எல்லாத் திருத்தொண்டரும் பாடினர். சிதாகாசமான சிதம்பரத்திலே நடனமாடும் சிவசைதன்ய ஜோதியே நடராஜா. எம்பெருமானுக்கு எண்ணிலாப் பெயர் வடிவங்கள் உண்டு. எனினும் அருட்பெருந் திருத்தொண்டர் அனைவரும் நடராஜப் பெருமான் திருவடியே வீடெனப் பற்றினர். அதன் சிறப்பென்ன? அப்பரின் அன்புப் பெருமை, பாலறாவாயர் போல உள்ளறிவு, சுந்தரர் போலே செந்தமிழ்நயம், மணிவாசகர்போல் மாசறு சிவநேயம், திருமூலர்போல் செழுந்தவ யோகம், மெய்கண்டார்போல் உய்நெறிவிளக்கம், வள்ளுவர்போலே இல்லறச் செம்மை, தாயுமானார் போல் ஆய்ந்த வுள்ளனுபவம், பட்டினத்தாரின் பழுதறு துறவு, காரைக் காலம்மையின் ஒரு மனவுறுதி, ஔவையாரின் செவ்விய நல்வழி, எல்லாம் நடராஜ சிவனருளிலே எழுந்தவை.

நமது சமயத்தின் தனிப்பெரும் தன்மை என்னவெனில், உள்ளத்தானாகிய ஒருவனே உலகத்தான், அவனருளில் அனைத்தும் அனைத்துயிரும், எல்லா மக்களும், ஆண்பெண், அறுசமயத்தார் சித்தாந்தம், வேதாந்தம், பௌத்தம், சமணம், கிறித்துவம், இஸ்லாம், எல்லாம் ஒன்று என்பதாம். ''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'' என்றார் பட்டினத்தார்.

கடவுள் ஒன்றே; அதன் ஆற்றல்கள் மிகப் பல. கடவுள் உள்ளறிவின்பம். உயிர்மேனிப் பெருமான். இறைவனுக்கு நமது தமிழிலே தான் பொருத்தமான பெயர் உள்ளது. காந்தியடிகள் உண்மையையே கடவுள் விளக்கமாக உணர்ந்தார். ஒருநாள் அறிஞர் இராதாகிருட்டினர் ''காந்தியடிகளே கடவுளை நீர் கண்டீரா? காட்டுவீரா? கடவுள் தன்மை என்ன?'' என வினாவினார். மகாத்மா ''ஐயா, எனக்கு உண்மையே கடவுள்; கடவுளை மறுக்கலாம்; ஆனால் உண்மையை மறுக்க முடியாது'' என்றார். மகாத்மா காந்திக்கு ஒரு தரம் எனது யோகசித்தியைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் படித்துக் காட்டினேன். அதில் ஒன்று, பின் வரும் குறள்:

*''அன்புண்மை யாக
அமர்ந்த கடவுட்குன்
அன்புண்மை யால்வழிபா டாற்று''

தமிழில் உண்மையின் அரிய கருத்தை விளக்கினேன். உள் + மை—உண்மை, உள்ளத்தின் தன்மை. ''உள்ளமே உள்ளத்தின் உள்ள கருவே'' என்று பாடுகிறார் அப்பர். உண்மை நிலையே கடவுள்நிலை. வாய்மை-வாயின் தன்மை. அதுவும் உண்மை பேசுதலே. மெய்ம்மை-உடலின் தன்மை. அது உடலால் உண்மையான தொண்டு செய்வதே. அதே மாதிரி சத்தியம் என்பதும், சத்துப்பொருளான சிவத்தை உணர்வதே. யோகசித்தி என்பது யோகப் பயிற்சியால் சித்துப் பொருளான சிவ சக்தியை உணர்தலே யாகும். சத்தும் சித்தும் உலகில் ஆனந்தமாக இன்பமயமாக ஆண் பெண்ணாக உலவுகிறது.

''உயிர்மேனி யாக்கொண்டே
ஓங்கும் ஒரு சோதி
பயிலா லயம்உலகு பார்''

உலகம் சிற்சக்தியரங்கம்; அதில் உயிர்களையெல்லாம் திருமேனியாகக் கொண்டு விளையாடுகிறான் இறைவன். தமிழர் அவனது திருவிளையாடல்களை இலக்கியமாக்கி இன்புறுகின்றனர். ஒரே மின்சக்தி ஒளியாக, வெப்பமாக, குளிராக, காற்றாக, ஒலியாக விளக்கமாகிறது. ஒரே நடராஜ சிவமே வானாகி, வளியாகி, வெளியாகி, ஊனாகி, உயிராகி ஆடல் புரிகிறது. அதன் சக்தியே அம்பிகை, சிவகாமி, மீனாட்சி, காமாட்சி, பார்வதி எனப் பெயர் பெறும். கடவுள் என்பது மனத்தைக் கடந்த உள்ளத்தே உள்ளமாய் உள்ளபொருளாகும். அதன் கனல் சிவம், கனலின் சூடு பராசக்தி, நிறம் கணபதி, ஒளி முருகன், கதிர் திருமால்.

கடவுளைச் சிலர் இல்லை என்பார். அவர்கள் இயற்கையை மறுக்க முடியாது. கடல், வானம், மலை, அருவி, மழை எல்லாம் ஒரு சக்தி விளக்கமே. அதை விஞ்ஞானம் இயற்கை என்கிறது. இயற்கையில் ஐம்பூதங்கள், பரிதி, மதி உயிரினம் உள்ளன. அனைத்தும் கடவுளுருவம், கடவுள் விளக்கம், அவை வளரும் உலகம் கடவுளின் ஆடல் என்கிறது சித்தாந்தம். காணும் உயிருலகைக் கண்காணாத நுண்பொருளான கடவுளின் உருவாகக் காண்கிறது. அந்தப் பொருளின் ஆடலே உலகுயிர் வாழ்வாகும். அவனது திருக்கூத்தே உலக நாடகமாகும்.

பலபல எனும் காலை
பாடும்புள் ளோசை போலும்

பாற்கடல் உளம் விம்மி
ஆர்க்கும் கர்ச்சனை போலும்

மலர்களைக் கொஞ்சி வரும்
மந்தமாருதம் போலும்

மதுவுண்ட வண்டினம்
வளர்க்கும் ரீங்காரம் போலும்

தடதட எனப்பொழி
சப்த மேகங்கள் போலும்

மடமட என வரும்
மலையருவியைப் போலும்

கடகட வெனச் செல்லும்
ககன லோகங்கள் போலும்

நடமிடும் சிலம்புடன்
நர்த்தனம் செய்ய நாமும்

ஐங்காரச் சுருதி செய்குவான் நடராஜன்
சங்கீதாம்ருதம் பெய்குவான்!

---

*Love and Truth are
forms of God in sooth
Worship Him with
heart-felt Love and Truth.

Tune the Vina of Existence in full harmony,
Universal Master and shower music nectar!
Strike the gamuts of this harp.
Now like the chorus of birds at the point of dawn
Now like the rapturous heart of surging seas
Now like the gentle breeze kissing blossoms,
And now murmuring like intoxicated bees
Lord, let my music soul dance with Thy jingling feet,
Let my symphonies move in melodious time
Now rapid like mountain torrents,
Now like the gentle music of rolling spheres
Dance dance in my heart
O Nataraja with Thy consort!

"நால்வர் தமிழ்"

இராமலிங்க வள்ளலார், சென்னையில் வாழ்ந்திருந்த காலத்தில், கந்தகோட்டத்திற்கு மட்டுமேயன்றி, திருவொற்றியூர்த் தியாக ராசப் பெருமான் திருக்கோயிலுக்கும், திங்கட் கிழமை வெள்ளிக்கிழமைகளில் சென்று, வழி பட்டு மகிழும் வழக்கமுடையவராக இருந்தார். ஒருநாள் தங்கசாலை வழியாகத் திருவொற்றி யூர்க் கோயிலுக்கு, வள்ளற்பெருமான் விரைந்து நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அவருடன் 'உபயகலாநிதிப் பெரும்புலவர்' திரு. தொழுவூர் வேலாயுத முதலியார் போன்ற அன்பர்கள் சிலரும், உடன் சென்று கொண் டிருந்தனர். விரைவாக நடந்து சென்றுகொண் டிருந்த வள்ளற்பெருமான், தங்கசாலைத் தெருவில் ஓரிடத்தில் திடீரென அசைவற்று நின்றார். அவரது கண்கள் மூடியிருந்தன. மூச்சு மெல்லென நிகழ்ந்தது. முகத்தில் மகிழ்ச்சிக்குறி மலர்ந்தது. உடம்பு பரவச நிலையில் இருந்தது. கண்கள் நீர் சொரிந்தன. இங்ஙனம் ஒருசில நிமிடங்கள் அசைவற்று நின்ற வள்ளற்பெருமான், பின்னர் உணர்வு பெற்றுக் கண்விழித்துத் தொடர்ந்து நடக்கத் தொடங்கினார்.

சுவாமிகள் திருவொற்றியூர்க்குச் செல் லும் வழியில், இங்ஙனம் தம்மை மறந்து பர வசமுற்று நின்றதும், அவர்தம் கண்களில் நீர் சுரந்து சொரிந்ததும் எற்றுக்கு? என்று அன்பர் களுக்குப் புலனாகவில்லை. ஆயினும் அது பற்றி அவர்கள் அடிகளாரிடம் அப்போதுஏதும் கேட்க முற்பட்டிலர். சில நாட்கள் கழிந்து, அடிகளார்பால் இதுபற்றித் தொழுவூர் வேலா யுதமுதலியார், பணிவுடன் வணங்கி வினவி னார். அப்போது அவருக்கு வள்ளற்பெருமான் அந் நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து, அதற்குரிய காரணத்தைக் குறிப்பாக மொழிந்தருளினார். வள்ளற் பெருமான் சென்று கொண்டிருந்த போது, அருகே ஓர் இல்லத்திலிருந்து, யாரோ ஒருவர் இனிய குரலில் தேவாரம் பாடிக்கொண் டிருந்தார். அவ் இனிய தேவார இசைப்பாடல், நம் அடிகளாரின் திருச்செவிகளில் வந்து ஒலித் தது. அத் தேவார இசையினைச் செவிமடுத்த அளவில், அடிகளார் தம்மை மறந்தார், பரவச முற்றார். அவர்தம் திருக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் சுரந்தது என்று, அன்பர்கள் உணர்ந்து மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சியினைச் சுட்டும் வகையில், திருவருட்பாவில் பின்வரும் சிறந்த பாடல் ஒன்று அமைந்திருத்தல் அறிந்து மகிழ் தற்குரியது.

''சேல்வரும் கண்ணி இடத்தோய்! நின்
    சீர்த்தியைச் சேர்த்தி, அந்த
நால்வரும் செய்தமிழ் கேட்டுப்
    புறத்தில் நடக்கச், சற்றே
கால்வரும் ஆயினும், இன்புரு
    ஆகிக் கனிமனம், அப்
பால்வருமோ? அதன்பாற்பெண்
    களைவிட்டுப் பார்க்கினுமே''

—திருவருண்முறையீடு, 163

''சேல்மீன் போன்ற கண்களை உடைய அம்மையை, இடப்பாகத்திற் கொண்ட சிவ பெருமானே! நின்னுடைய ஒப்புயர்வற்ற பெரும் புகழ்களையெல்லாம்ஒருங்கேதொகுத்து உலகமெல்லாம் அறிந்து போற்றுகின்ற பெருமைமிக்க சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நான்கு பெருமக் களும், அருளிச் செய்த தேவார திருவாசக மாகிய தமிழ்மறைப் பாடல்களைக் கேட்டால், அந்த இடத்தை விட்டுப் பெயர்ந்து, வேறு இடங்களுக்குச் செல்லச் சிறிதாவது கால்கள் வருமா? ஒரோவழி கால்கள் பெயர்ந்து செல்ல முற்பட்டாலும், தேவார திருவாசகத் திரு முறைப் பாடல்களைக் கேட்டுத் தன்வயம் இழந்து, துன்பங்களும் கவலைகளும் நீங்கி, இன்பமயமாக மாறி, பக்குவப்பட்டு முதிர்ந்து அன்பினாற் கனிந்த மனம், அவ்விடத்தை விட்டு அப்புறம் பெயர்ந்து செல்லுமோ? பெண் களை விட்டு மயக்க முயன்று பார்த்தாலும்கூட, தேவார திருவாசகப் பாடல்களைக் கேட்டு இன்புற்றுக் கனிந்த மனம், அவ் இடத்தை விட்டு ஒருபோதும் பெயர்ந்து செல்ல மாட் டாது'' என்பது, இத்திருவருட்பாவின் திரண்ட சிறந்த பொருள் ஆகும்.

இத்திருவருட்பாவினால், நால்வர் பெரு மக்கள் அருளிச் செய்த தேவார திருவாசகப் பாடல்களின் சிறப்பும், அப்பாடல்களில், நமது வள்ளற்பெருமான் எத்துணை அளவுக்கு அன் பும் ஆர்வமும் கொண்டு ஈடுபட்டிருந்தார்என்ப

தும், பிறவும் புலனாகும். (1) இதன்கண், சிவ பெருமானின் பரந்து விரிந்த பெரும் புகழ் களையெல்லாம் தேவார திருவாசகப்பாடல்கள் ஒருங்கு தொகுத்து உணர்த்துதல் பற்றி, வள் ளற் பெருமான் ''நின் சீர்த்தியைச் சேர்த்தி'' என்றார். (2) 'நால்வர்' என்னும் தொகைக் குறிப்புச் சொல்,வேறு எவரையும் குறிக்காமல், சம்பந்தர் அப்பர் சுந்தரர் மணிவாசகர் என் னும் நால்வர் பெருமக்களை மட்டுமே, சிறப் பாகக் குறிக்கும் ஆதலின், அவர்களின் பெயர் களைக் கிளந்து கூறாமல், பொதுவாக **நால்வர்** என்று மட்டுமே அடிகளார் குறிப்பிட்டார். (3) 'நால்வர்' எனின் எந்த நால்வர் என்று எவரும் ஐயுற்று வினவாதபடி உலகமறிந்த பெருமையினராதலை உணர்த்த '**அந்த** நால் வர்' எனப்பட்டது.

(4) ஒரு சிலர், தமிழ்மொழி என்றும் வளர்ந்து வரும் இயல்புடையதாதலின், 'இக் கால மக்கள் ஒருசிலர் ஏதோ ஒருவாறு இயற்றி வரும் பாடல்களையும்கூட, நால்வர் பாடல் களுடன் புதிதாகப் புகுத்திச் சேர்த்துத்தொகுத் தால் என்னை? என்று, கருதியும் கூறியும் வருதலை மறுக்கும் வகையில், அந்த நால்வர் களின் வரிசையில் பிறர் எவரும் ஒருங்குவைத்து எண்ணத்தக்கவரல்லர் என்பதை உணர்த்து வதற்கு, இனைத்தென அறிந்த கிளவிகளுக்குப் புணர்த்துதற்குரிய முற்றும்மை கொடுத்து ''அந்த நால்வரும்'' என்று வள்ளற் பெருமான் முடிந்தது முடித்தலாக அளந்தறிந்து மொழிந் தருளினார். (5) தமிழ் என்றாலே அமையு மாயினும், **செய்தமிழ்** என்று மேலும் சிறப் பித்தருளியது, இயல்பாகவே இனிமையுடைய தமிழை, நால்வர் பெருமக்கள் மேலும் இனிமை யும் சிறப்பும் தெய்விகமும் உடையதாகச் செய்தருளியமை பற்றி. 'கேட்டு' என்னும் சொல் 'கேட்டால்' என்னும் பொருள்உணர்த்தி வந்தது. 'கால் வருமாயினும்' என்பதில் உம்மை எதிர்மறை, வராது என்பது கருத்து. இதன் கண் 'கால் வருமோ?' என்னும் வினாத்தொடர் தொக்கு நின்றது. புறத்தில் நடக்கச் சற்றே கால் வராமைக்குக் காரணம், இன்புருவாதல் என்பது சுட்டப் பெற்றது.

(6) இன்புருவாதலின் மேலும் வேறொரு விழு மிய பயன்கூறுவார், மனத்தினைக் **கனிமனம்** என்றார். ''செழுக்கமலத் திரள்அன நின் சேவடி சேர்ந்து அமைந்த பழுத்த மனத்து அடியார்'' என்றும்; ''வாழைப் பழத்தின் மனம் கனிவித்து'' என்றும் வரும் திருவாசக வரிகள் இங்கு நினைந்து இன்புறற்பாலன.(7) சிறந்துயர்ந்த தவமுனிவர்களும் அரம்பை ஊர் வசி மேனகை திலோத்தமை என்னும் தேவ ருலகப் பெண்களால் மயக்கப்பெற்று மனம் திரிந்து தம் தவம் கைவிட்டமையினை, நாம் நம் புராண நூல்கள் புகலக் காண்கின்றோம். தேவார திருவாசகத் திருப்பாடல்களின் தெய் விக இசையைக் கேட்டு, அதன் வயப்பட்ட உண்மை அடியவர்களின் உள்ளம், அத்தகைய பெண்களுக்கும் மயங்க மாட்டாது என்பது, இப்பாடலில் வள்ளற்பெருமானால் தெள்ளத் தெளியக் கூறப்பட்டுள்ள திறம்,வியந்துபோற்றி மகிழற்பாலது. (8) இதனால் நால்வர் தமிழின் நலங்களும், அதன்பால் அளவிலா அன்பும் ஆர்வமும் கொண்டிருந்த இராமலிங்க அடி களாரின் ஈடுஇணையற்ற எல்லையிலாப் பத்தி மையும், செவ்விதின் விளங்குகின்றன.

—ஆசிரியர்.

R. RAJU,
Dy Commissioner H.Qrs
HR&CE Administration Dept

திருவாசகம், தேன்கூடு

இறைவனின் திருவடிகள், தாமரைமலர்! அவற்றில் இடையறாது ஈடுபட்டு இறைஞ்சி வழுத்திய மணிவாசகர், அத்தாமரை மலர்களில் படிந்த வண்டு; அவர்தம் இன்னிசைத் துதியே, வண்டின் மிழற்சி; இறைவனின் திருவடிகளில் ஈடுபட்டு, மணிவாசகர் நுகர்ந்த இன்பமே, தேன்! மணிவாசகராகிய வண்டு, இறைவனின் திருவடியாகிய தாமரை மலரிற் படிந்து, நுகர்ந்த இன்பமாகிய தேனை, நாம் அனைவரும் இனிது உண்டு உவந்து உய்தி பெறும்படி, ஒருங்கே திரட்டி வைத்த, 'பெரும் தேன் கூடுபோல்வதே' திருவாசகச் செந்தமிழ்த் தெய்வ மாமறை! என்று, நாம் சுருங்கக் கூறிக் குறிப்பிடுதல் பொருந்தும்.

''தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேனுண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்பு உடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ''

என்று மணிவாசகர், இறைவனைப் பற்றிப் பாடுவதுபோலவே, திருவாசகமும் நாம் நினைத்தொறும், பேசுந்தொறும், ஓதுந்தொறும், அனைத்தெலும்பும் உள்நெக, நம் உள்ளத்தில் ஆனந்தத்தேன் சொரியும் அளவிலாப் பெருஞ் சிறப்பு உடையதாகத் திகழ்கின்றது.

—ஆசிரியர்.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலை வந்தது. திருவொற்றியூரில் வள்ளலார் நடந்து சென்றபோது, ''இதோ ஒரு மனிதன் போகிறான்'' என்று ஒரு ஞானி மகிழ்ந்து கூறியது. தண்ணீரில் விளக்கு எரித்தது. ஒரேஇரவில் 1596 வரிகளையுடைய அருட்பெருஞ்சோதி அகவலைப் பாடி முடித்தது. பொருளாசை சிறிதும் கொள்ளாது, பணத்திலே சிறிதும் ''ஆசை ஒன்றிலேன் நான்படைத்த அப்பணங்களைப் பலகால் கிணற்றிலே எறிந்தேன், குளத்திலும் எறிந்தேன், கேணியில் எறிந்தனன் எந்தாய்'' என்று கூறிப் பணத்தை எறிந்து வந்தது.

''காராலும், கனலாலும், காற்றாலும், ககனக் கலையாலும், கதிராலும், கடலாலும் கடல்சூழ் பாராலும் படையாலும், பிறவாலும் தடுக்கப் படுதலில்லாத் தனிவடிவம் அளித்தாய்'' எனவும், இறவா வரம் அளித்து என்னை மேல் ஏற்றினாய்,—சாகா நிலை இது தந்தனம் உனக்கே என்றாய்-எல்லாம் வல்ல சித்து எனக்கு அளித்தாய்-அற்புதம் இயற்று, அதிசயம் இயற்று என்றாய் எனவும்; அவரே இறைவனிடம் கூறி மகிழ்ந்தது. இவை அனைத்தும் நம்மை வியப்படையச் செய்வன.

(13) சீர்திருத்தக்காரர் :

வள்ளலார், ஏழை பணக்காரர், மேல்சாதி கீழ்சாதி என்னும் வேறுபாட்டு முறைகளைக் கண்டித்தவர். சமய வேற்றுமைகளைச் சாடியவர். புராண இதிகாசங்களை வெறுத்தவர், கோவில் கட்டியவன் கோவிலுக்குப் போகாத நிலையையும், குளம் வெட்டியவர் தண்ணீர் எடுக்க முடியாத நிலையையும் தாக்கி ஒரு புரட்சியைச் செய்தவர். மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை பாடிய நீதி நூலுக்கு சாற்றுக்கவியும் வழங்கி மகிழ்ந்தவர்.

(14) இதற்கு மேலும், அவரது வரலாற்றை அறியத் துணைபுரிவன :

திருவருட்பாவில் காணப்பெறும் அகச் சான்றுகள். தொழுவூர் வேலாயுத முதலியார் பாடிய ''திருஅருட்பா வரலாறு. அவர் பிரும்ம ஞான சங்கத்தாருக்கு 1882-ல் கொடுத்த வாக்கு மூலம். தென்னாற்காடு மாவட்ட கெஸட். 1906-ம் ஆண்டில் பாலகிருஷ்ணபிள்ளை பதிப்பித்த அருட்பாவில் காணப்படும் சில குறிப்புகள். ஊரன் அடிகளார் பதிப்பித்த அடிகளார் வரலாறு ஆகியவைகளில் அவரது வரலாற்றை இன்னும் விரிவாகக் காணலாம். இதுகாறும் கூறியவை மிகவும் சுருக்கமானது.

(15) சன்மார்க்கம் என்பதன் பொருள் :

'சன்மார்க்கம்' என்பது, நல்வழி எனவும் நன்னெறி எனவும் பொருள்படும். சுத்த சன்மார்க்கம் என்பது தூய்மையான நல்லவழி எனவும், சத்திய சன்மார்க்கம் என்பது உண்மையான நல்லவழி எனவும் பொருள்படும். இவையே இறைவனை அடையும் எளியவழிகள் என்பது வள்ளலார் கருத்து. ''தங்கமேயனையார் கூடிய ஞான சமரச சுத்த சன்மார்க்கம்'' என்பது பிள்ளைச் சிறு விண்ணப்பத்தில் ஒரு அடி. இது சன்மார்க்கத்தினருக்கும் மற்ற மார்க்கத்தினருக்கும் வேற்றுமையைக் காட்டுவதாகும். செம்பும் தங்கமும் ஒரே இனம். ஆனால் செம்பில் களிம்புண்டு. தங்கத்தில் களிம்பு இல்லை என்பதுதான் வேற்றுமை. செம்பிலே உள்ள களிம்பு நீங்கிவிட்டால் அது தங்கமாகி விடுகின்றது. சன்மார்க்கிகள் மன அழுக்கு நீங்கியவர்கள். ஆதலால் அவர்கள் ''தங்கமே அனையார்'' ஆகின்றனர் என்று இதனால் தெரிகின்றது.

(16) வள்ளலாரது கொள்கைகள் :

இளமையில் முருகனைக் கடவுளாகவும், திருஞானசம்பந்தரைக் குருவாகவும், திருவாசகத்தை வழிபடும் நூலாகவும் கொண்டு, பின்னர் ஒற்றியூரில் சிவபக்தராகவும், தில்லையில் நடராஜ பக்தராகவும், முடிவில் அருட்பெருஞ் சோதி அடியாராகவும் விளங்கினார். ''கடவுள் ஒருவரே! அவர் அருட்பெருஞ் சோதியர், சிறு தெய்வ வழிபாடு கூடாது, உயிர்ப்பலிகூடாது, புலால் உண்ணலாகாது, சாதி சமய வேறுபாடுகள் கூடாது, எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ண வேண்டும். ஏழைகளின் பசியைப் போக்க வேண்டும், இறந்தவர்களை எரிக்காமல் புதைக்க வேண்டும், ஜீவகாருண்ய ஒழுக்கமே பேரின்பவீடு பெற உதவும்'' என்பன அவரது கொள்கைகள்.

(17) சன்மார்க்கத்தினரின் வேண்டுகோள் :

''எல்லாமுடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் எவ்விடத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள் மதங்கள் மார்க்கங்கள் என்பனவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலக ஆசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்தில் பற்றாவண்ணம் அருள்செய்யல் வேண்டும்.

சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ் சோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங் கருணைக்கு வந்தனம்! வந்தனம்!'' என வேண்டிக் கொள்வது.

தொடரும்

சிவஞான போதம்

டாக்டர் ச. கங்காதரன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,

சைவசித்தாந்தத் தத்துவத்துறை,

மதுரை-காமராசர் பல்கலைக் கழகம்

Retire. Administ...

சைவ சித்தாந்த அடிப்படை உண்மைகளைத் தருக்க முறையில் தமிழ்ச் சான்றோராகிய மெய்கண்டார் தருகின்றார். தம் சிவஞான போதத்தில் சைவ சித்தாந்த இறையியல் கருத்துக்களை 39 கூறுகளாகப் பிரித்து, பன்னிரண்டு சூத்திரங்களாக அமைத்துத் தருகிறார். முதல் ஆறு சூத்திரங்கள் பொது அதிகாரம் எனவும், பின் ஆறு சூத்திரங்கள் உண்மை அதிகாரம் எனவும், வழங்கப்படும்.

பொது அதிகாரம் பிரமாணஇயல், இலக்கணஇயல் என்ற இரு பகுதிகளை உடையது. பிரமாணம்-பொருள்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவிப்பது. இலக்கணம்-அவ்வாறு இருக்கும் பொருள்களின் தன்மையைத் தெரிவிப்பது. பதி, பாசம், பசு என்ற முறையை நினைவில் வைத்துக் கொண்டால், பிரமாண இயலாகிய முதல் மூன்று சூத்திரங்கள்முறையே பதிஉண்மை, பாசத்தின்உண்மை, பசுவின் உண்மை இவைகளைத் தெரிவிக்கின்றன. இவற்றையே எதிர்நிரல் நிறையாக, இலக்கண இயலின் நான்காம் சூத்திரம், பசுவின் தன்மையைத் தெரிவிக்கிறது. ஐந்து, ஆறாம் சூத்திரங்கள், முறையே பாசத்தின் தன்மையையும், பதியின் தன்மையையும் தெரிவிக்கின்றன எனக் கொள்ளலாம்.

(1) முதல் சூத்திரம், மூன்று பகுதிகளை உடையது. முதல் பகுதி, அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின் என்பது. இது அவன் என்றும், அவள் என்றும், அது என்றும் பிரிக்கும்படியாக அமைந்த தொகுதியாகிய உலகம், மூன்று தொழில்களை உடையதாம் தன்மையால் என்பது. இரண்டாம் பகுதி இவ்வாறு முத்தொழில் உடையதாக உலகம் இருத்தலினால் ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருளே ஆகும். இது மீண்டும் தோன்றும்போது, முன்பு ஒடுங்குதற்கு இடமான ஒடுங்கி எனப்படும் அழிப்புக் கடவுளிடமிருந்தே, ஆணவ மலம் என்னும் குற்றம் நீங்கத் தோன்றும் என்பது. மூன்றாம் பகுதி அந்தமே ஆதி என்பது. அதாவது முற்றழிப்பைச் செய்யும் கடவுளே முதல்வன் என்பது.

(2) இரண்டாம் சூத்திரம், நான்கு பகுதிகளை உடையது. அவையே தானேயாய் என்பது முதல் பகுதி. முதல் சூத்திரத்திலிருந்து அந்தமே ஆதி எனப்பட்ட கடவுளை, இங்கு எழுவாயாகக் கொள்ள வேண்டும். கடவுள் உயிரோடும், உலகத்தோடும் எவ்வாறு இருக்கிறார்? இக்கேள்விக்கு விடையாக இருப்பதே, அவையே தானேயாய் என்னும் பகுதி. அவையேயாய் அதாவது கடவுள், உலகம் உயிர்களோடு கலந்து இருக்கும்போதும், கடவுளுக்கென்று தனித்த தன்மை உண்டு என்பது, தானேயாய் என்பதன் மூலம் குறிக்கப்படுகிறது. அவையே யாகவும், தானேயாகவும் இருப்பதல்லாமல், அவையே தானேயாக உள்ள நிலை—அதாவது உடனாதல் என்னும் சிறப்பான நிலை சைவத்தில் பேசப்படுகிறது. இறைவனின் இம் மூவகை நிலைகளைத் திருஞானசம்பந்தர் தம் திருவீழிமிழலைத் திருப்பதிகத்தில், ''ஈறாய் முதல் ஒன்றாய். இருபெண் ஆண், குணம் மூன்றாய், மாறா மறைநான்காய், வருபூதம் அவை ஐந்தாய், ஆறார் சுவை ஏழோசையொடு எட்டுத் திசைதானாய், வேறாய் உடன் ஆனான் இடம் வீழிம் மிழலையே'' என்று கூறுகின்றார். வீழிமிழலை இறைவன், அவையே யாதலை முதல் ஒன்று, இரு பெண் ஆண், மூன்று குணம், நான்கு மறை, ஐந்து பூதங்கள், ஆறு சுவை, ஏழு இசை, எட்டுத்திசை என இவைகளோடு கலந்து இருப்பவன் என்பதன் மூலம் விளக்குகின்றார். தானேயாதலை வேறாய் என்று கூறுவதன் மூலமாகவும், உடன் ஆதலை 'உடன் ஆனான் இடம் வீழிம்மிழலையே' என்று கூறுவதன் மூலமாகவும் திருஞான சம்பந்தர் விளக்குகிறார்.

இரண்டாம் பகுதி, ஆணையின் இருவினையின் என்பது, உயிர்கள் நுகரும் நுகர்ச்சி அவைகள் செய்த நன்மை, தீமை ஆகிய செயல்களைப் பொறுத்தது என்பது, இந்தியத் தத்துவத்தின் பொதுவான கொள்கை. இப் பொதுப் பின்னணியைப் பின்பற்றிச் சைவசித்தாந்தமும் வினையைக் கொண்டு, வினையின் தொழிற்பாடு இறைவன் அருளால் நிகழ்கிறது எனக் கொள்கிறது. போக்கு வரவு புரிய என்பது இரண்டாம் சூத்திரத்தின் மூன்றாம் பகுதி. போக்கு-இறத்தல். வரவு-பிறத்தல். உயிர், இறத்தல் பிறத்தல் மூலமாகவே வினைகளை நுகர்ந்து கழிக்கவேண்டும் என்பது இதன் பொருள். இவ்வாறு உயிருக்கு உதவி செய்யும் ஆணையாகிய தன் சத்தியோடு, இறைவன் பிரியாது நீக்கம் இன்றி நிறைந்து நிற்பன் என்பது, இரண்டாம் சூத்திரத்தின் நான்காம் பகுதியாகும்.

(3) மூன்றாம் சூத்திரத்தில், உயிர் உளதா என்னும் கேள்விக்கு, உண்டு என்று

ஏழு காரணங்களில் விடையளிக்கின்றார், மெய்கண்டார். இச்சூத்திரத்தில் சூனியான்ம வாதம், தேகான்மவாதம், இந்திரியான்மவாதம், சூக்குமதேகான்மவாதம், பிராணான்ம வாதம், பிரமான்மவாதம், சமூகான்மவாதம் என்னும் ஏழுவகைக் கொள்கைகளை மறுத்து, இவற்றிற் கெல்லாம் வேறாக ஆன்மா உண்டு என நிறுவு கின்றார்.

''இலது என்றலின், ஆன்மா உளது என்பது, இச்சூத்திரம் கூறும் முதற் காரணம். இத்தொடரின் பொருளை இனிது அறிந்து கொள்ளாமையினால்தான், 'இல்லை என்ப தனாலேயே உண்டு என்பது பெறப்படுமா? முயலுக்குக் கொம்பு இல்லை என்றால் உண்டு என்று கொள்ளுதல் தகுமா?' என்று, ஒருசிலர் ஐயுற்று வினவுவர். இத் தொடருக்கு ''ஆன்மா இலது ஆகிய சூனியப்பொருள் என்று சொல் லிக் கொண்டிருத்தலின்'' என்பது பொருள். ஆன்மா இல்லையென்று சொல்லிக்கொண்டிருக் கும் சூனியான்மவாதிகளும் அங்ஙனம் வாளா கூறுதல் அமையாது. ஆதலின் அவர்கள் உடல் ஆன்மா வன்று, பொறிகள் ஆன்மாவன்று, நுண் ணுடல் ஆன்மாவன்று, என்று, இங்ஙனம் ஒவ் வொன்றாகக் கழித்து, இங்ஙனமாதலின் ஆன்மா என்பது வெறும் சூனியமாகிய இல்பொருளே என்னும் முடிவுக்கு வருவர். அவர்கள் கூறு மாறுபோல, ஒவ்வொன்றையும் ஆன்மா அன்று எனக் கழித்துக் கூறிக்கொண்டு நிற்பதற்கு, அறிவு என்பதொன்று வேண்டப்படுதலால், அவ்வறிவே ஆன்மா எனக் கொள்ளப்படும். ஆதலின், ஆன்மா உளது என்பது இத்தொட ரின் பொருள். அவ்வறிவும் சூனியமே எனின் அது 'என்னை ஈன்றாள் மலடி' என்பதனொடு ஒக்கும் பொருந்தாக் கூற்றேயாகும்.

'எனது உடல் என்றலின்' ஆன்மா உடலின் வேறாக உளது என்பது இரண்டாம் காரணம். நான் உடல் என்ற வழக்கு இல்லை, எனது உடல் என்ற வழக்கே காணப்படுகிறது. ஆகவே நான் என்ற சொல்லுக்கு உரிமையானபொருளே ஆன்மா எனப்படுகிறது.

'ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் ஆன்மா உளது' என்னும் பகுதியை இரண்டாகப் பிரித்து 'ஐம்புலன் அறிதலின் ஆன்மா உளது' என் பதை மூன்றாம் காரணமாகவும், 'ஒடுக்கம் அறி தலின் ஆன்மா உளது' என்பதை நான்காம் காரணமாகவும் கொள்ள வேண்டும். ஐம் பொறிகள் ஒன்று அறிந்ததை மற்றொன்று அறி யாது. ஆகவே ஐந்து பொறிகள் அறிவதையும் இணைத்து அறிவதும், ஐம்பொறிகளைத் தனித்தனி அறிவதும் ஆகிய ஆன்மா வேண்டும். ஒடுக்கம் என்பது கனவில் நிகழும் நிகழ்ச்சியைக் குறிக்கும். கனவில் அறிவதை நனவில் மாறி அறிவதால், ஒடுக்கம் ஆகிய கனவு நிலையில் இயங்கும் சூக்கும உடலுக்கு வேறாக ஆன்மா உண்டு என்பதை அறிய வேண்டும்.

'கண்படில் உண்டிவினை இன்மையின் ஆன்மா உளது' என்பது ஐந்தாம் காரணம். கண்படுதல் என்பது உறக்கத்தைக் குறிக்கும். கண்வளருதல் என்றும் இது குறிக்கப் பெறும். உறங்கும்போது பிராண வாயு உளது. பிராண வாயுவே ஆன்மாவாக இருப்பின், அது இருக் கும் உறக்க நிலையில் உண்டியாகிய நுகர்ச்சி யும், வினையாகிய செயலும் இல்லாமல் இருக்க நியாயம் இல்லை. உறங்கும்போது நுகர்ச்சியும் செயலும் இல்லை என்பது அநுபவ உண்மை. ஆகவே பிராணவாயு ஆன்மா அல்ல.

'உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது' என்பது ஆறாம் காரணம். சங்கரர் பிரம்மமே ஆன்மா என்னும் கொள்கையினர். ஆன்மா தானே அறிவது எனில், ஒருவர் உணர்த்த அறியவேண்டிய இன்றியமையாமை இல்லை. ஆன்மா உணர்த்த உணர்கிறது என்னும் அநு பவ அறிவால், தானே அறிகிற கடவுளுக்கு வேறாக ஆன்மா உண்டு என்பதையே உணர்த்த உணர்தலின் ஆன்மா உளது என்பது விளக்கு கிறது.

ஏழாவதாக, தூல உடல் சூக்கும உடல் என்பவை, தனித்தனியாக ஆன்மா அல்ல. இவற்றின் கூட்டத்தை ஆன்மா என்று ஏன் சொல்லக்கூடாது என்பதற்கு விடையாக, மாயையின் காரிய சமூகம் அல்லது தொகுதி யாகிய உடலில் ஆன்மா உளது என்பது, சொல் லப்படுகிறது. ஐம்பொறிகள், சூக்குமஉடல், தூலஉடல் ஆகியவைகளின் கூட்டத்துக்கும் உடல் என்ற பெயர் உளதே தவிர, ஆன்மா என்ற பெயர் இல்லை என்பதை நாம் நோக்க வேண்டும். ஆகவே 'மாயா இயந்திர தநு வினுள் ஆன்மா உளது' எனவே, உடலுக்கு வேறாக, உடலில் ஆன்மா உளது என்பது பெறப்படுகிறது.

(4) நான்காவது சூத்திரத்தில் முதலில் ஆன்மா என்பதற்கான எட்டாவது காரணத் தைக் கூறி, மெய்கண்டார் முடிக்கின்றார். அப்பகுதி, 'அந்தக்கரணம் அவற்றின் ஒன்றன்று அவை சந்தித்தது ஆன்மா' என்பதாகும். 'அந்தர்+கரணம்' அந்தக் கரணம் என்றாகும். அந்தர் யோகம் என்ற தொடரில் உள்ள அந்தர் என்ற சொல்லுக்கு, உள் என்பதே பொருள். அதுபோலவே இங்கும் அந்தக் கரணம் என்பது உட்கருவிகள் எனப்படும். அவை மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்பவை. மனம் பொருள் களைப் பற்றும், புத்தி பற்றிய பொருளை இன்னது என நிச்சயிக்கும். புத்தி நிச்சயிப்ப தற்கு அகங்காரம் எழுச்சியைத் தோற்றுவிக்க வேண்டும். சித்தம் என்னும் கருவி புத்தி நிச்சயிப்பதற்குத் தன் பழைய நினைவுகளில் இருந்து உதவி செய்யும். இவ் அந்தக் கர ணங்கள் நான்கும், நான்கு தொழில்கள் செய்வ தால், இந்தக் கருவிகளைத் துணையாகக் கொண்டு, ஆன்மா அறிகிறது. இதற்கு ஒப் புமை ஒன்று இங்குக் கூறப்படுகிறது. அரசன் எவ்வாறு அமைச்சர்களோடு கூடிச் செயல் படுகிறானோ, அதுபோல அந்தக் கரணங்களைக் கூடி ஆன்மா அறிந்து செயல் செய்கிறது என் பதே அது.

இவ்வாறு அறியக்கூடிய திறமையுள்ள ஆன்மா, ஆன்மா என்று உண்டோ, அன்றிலிருந்து குற்றமாக உடன் பிறந்துள்ள-அதாவது சகச மாக உள்ள-ஆணவ மலத்தினால் அறிவதில்லை. இந்த அறியாமை நீங்க உயிர் உடலில் உள்ள

கருவிகளோடு கூடியும் பிரிந்தும், நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் என்னும் ஐந்து வகை அவத்தைகளை அடையும். அவத்தை என்பது உணர்வுநிலை.

(5) ஐந்தாம் சூத்திரத்தில் இறைவனின் திரோதான சத்தி, அதாவது மறைப்புச் சத்தியை ஆசிரியர் விளக்குகின்றார். கண் பொருளைப் பார்க்கும். ஆனால் நான் பார்க்கின்றேன் என்று கண் அறியாது. இது போன்று பிறபொறிகளும் செயல்படுகின்றன. பொறிகளைப் போல, இறைவன் அருளால் உயிர் அறியும். ஆனாலும் இறைவன் அருளால்தான் அறிகிறோம் என்ற உண்மையை அறியாது. கடவுள், உணர்வுக்கு முதலாகக் குறிப்பிடப்படுகிறார். இரும்புத்துண்டு(அதாவது பசாசம்) எவ்வாறு காந்தத்தினால் ஈர்க்கப்படுகிறதோ, அதுபோல உணர்வின் தமி எனப்படும் முதல்வன் அருளால் உயிர்கள் செயல்பட்டாலும், அவ்வாறு முதல்வன் அருளால் செயல்படுகிறோம் என்ற உண்மை, உயிருக்குத் தெரியாது என்பது சூத்திரத்தின் பொருள்.

(6) கடவுள் அறியப்படுவாரா? அறியப்படமாட்டாரா? என்னும் கேள்விக்கு விடையாக ஆறாம் சூத்திரத்தை மெய்கண்டார் அருள்கின்றார். இதன் முதல்பகுதி உணர்உரு எனின் அசத்து என்பது. நம் சாதாரண அறிவால் உணரக்கூடிய பொருள் கடவுள் எனின், சாதாரண அறிவால் உணரக்கூடிய மேசை முதலிய பொருள்கள் அழிபொருள் ஆகின்றன. ஆகவே அவர் மேசை முதலிய பொருள்களில் ஒருவர் ஆக மாட்டார். இதைத் தவிர்க்க, கடவுள் நம் அறிவால் அறியமுடியாத பொருளாயின், நமக்கு எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை. ஆகவே 'உணராத பொருள் எனின் இன்றாம்' என்கிறார் மெய்கண்டார். பின் எவ்வாறு கடவுளை உணர முடியும்? 'இருதிறன் அல்லது சிவசத்தாம் என இரண்டு வகையின் இசைக்கும் மன் உலகே' என்பதுதான் அவர் தரும் பதில்.

சாதாரண அறிவால் அறியக்கூடியது, நம் அறிவின் எல்லைக்குள் வாராதது என்னும்இந்த இரண்டு வகையில் அல்லாமல், சிவமும் சத்தும் என்னும் இரண்டு வகையாக இறைவனைக் கூறுவர். சிவம் என்பது இங்கே சித்து, அல்லது அறிவு என்னும் பொருளில் உள்ளது. இறைவன் அறிவு வடிவாக உள்ள உள்பொருள் என்பது சிவசத்து என்பதன் கருத்து.

(7) பின் ஆறு சூத்திரங்கள் இறைவனது உண்மை இயல்பைக் கூறுகின்றன. அவ்இயல்பு சாதனம், பயன் என்பவற்றைக் கூறுதலால் விளங்கும். ஏழாம் சூத்திரம் யாருக்குச் சாதனம் தேவை என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இறைவன் அறிவே வடிவானவன், அவன் உலகத்தை நுகர வேண்டிய அவசியம் இல்லை. உலகத்துப் பொருளுக்கு அறிவே இல்லை, ஆகவே அது இறைவனை அறிய முடியாது. இரண்டையும் அறிந்து அநுபவிப்பது உயிர். இறைவனை மாறுபடாத செம்பொருள் அதாவது சத்து என்றும், உலகத்தை அசத்து என்றும், உயிரைச் சதசத்து என்றும் கூறுவது சைவ நூல் மரபு.

சத்து என்னும் வடசொல்லின் நேரான தமிழ்ச் சொல்லாக வருவது செம்பொருள் என்பது. இந்தப் பொருளிலேயே 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு' என்னும் திருக்குறளில் திருவள்ளுவர் ஆள்கின்றார்.

'இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா' என்பது, மெய்கண்டார் உயிரைப் பற்றி விளக்கும் தொடர். ''இருதிறன் அறிவுளது'' என்பதை, இருதிறனையும் அறியும், இரு திறனாலும் அறியும், இரு திறனின்கண் நின்றும் அறியும் என மூன்று வகையில் விரித்துப் பொருள் கொள்ள வேண்டும். உயிர் அசத்தாகிய உலகை அசத்தால் (அதாவது உலகப் பொருளால்) அறிந்து அசத்தாகவே நிற்கும். சத்தாகிய செம்பொருளாக உள்ள இறைவனை, சத்தாகிய அவன் திருவருளால் அறிந்து, சத்தின்கண் இருப்பது உயிர். 'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி' என்பது திருவாசகம் அல்லவா?

(8) எட்டாம் சூத்திரம் வீட்டுக்கு நேர்ச் சாதனமான ஞானத்தை உணரும் முறையை விளக்குகிறது. இதன் முதல் பகுதி எல்லாம்வல்ல இறைவனே, உயிரின் பக்குவம் கருதி குருவடிவாகவும் எழுந்தருளி வந்து அருள் செய்கிறார் எனும் 'தம்முதல் குருவுமாய்' என்பது. இரண்டாம் பகுதி அவ்வாறு இறைவன் அருளைப் பெற, இறப்பில் தவம் எனப்படும் சரியை, கிரியை, யோகம் என்னும் தவத்தை உயிர் மேற்கொள்ள வேண்டும் என்பது.

மூன்றாம் பகுதி, உயிரானது நிலைத்த இன்பத்தை நுகரக்கூடிய உரிமை வாய்ந்தது. ஆனால் பழக்க முறையால் ஐம்பொறிகள் மூலமாக வரக்கூடிய இன்பத்தையே நிலையாகக் கருதக் கூடியது. இதை விளக்கச் சிவஞான போதத்தில் ஒரு செய்தி சொல்லப்படுகிறது. அரச குமாரன் ஒருவன் இளமைப் பருவத்தில் வேடரிடத்தில் தங்கி வளர்கின்றான். இதை அறியும் அரசன் தன் மகனுக்கு உணர்த்தினால் உணரக்கூடிய பக்குவம் வரும்போது, உண்மைத் தன்மையை உணர்த்தி அருள்வான் என்பது அது. இதைப்போல உணரக்கூடிய பக்குவம் வரும்போதே குருவடிவில் இறைவன் நமக்கு உணர்த்துவர். அவ்வாறு உணர்த்தும்போது, இறைவனே நமக்குச் சார்பு என்பது விளங்கும்.

'விட்டு அந்நியம் இன்மையின் அரன்கழல் செலுமே' என்பது நான்காம் பகுதி. இதை மெய்கண்டார் வார்த்திகப் பொழிப்பில் 'ஊசல் கயிறு அற்றால் தாய் தரையேயாம் துணையான்' என்று விளக்குகிறார். ஊசல் ஆடும்போதும் அதற்குச் சார்பு தரைதான். ஆனால் அந்த உண்மை, கயிறுக் அற்று கீழே விழும்போதுதான் தெரிகிறது. இதைப்போல ஐம்பொறி இன்பம் நிலையானது என எண்ணும் போதும்கூட நமக்கு நிலைத்த சார்பு இறைவனே என்பதை, ஐம்பொறி இன்பத்தை விட்ட

பிறகுதான் அறிய இயலும் என்பது இந்த உதாரணத்தின் மூலம் விளங்குகிறது.

(9) ஞானம் வரும் முறை தெரிந்தால் மட்டும் போதாது. அம்முறையைப் பின்பற்றி நடைமுறை வாழ்வில் ஞானத்தை அடையும் முறையை ஒன்பதாம் சூத்திரத்தில் மெய்கண்டார் விளக்குகின்றார். பசுஞானத்தாலும் பாசஞானத்தாலும் அறிய முடியாதவராகப் பதி உள்ளார். அவரை ஞானக்கண் மூலமாகசிந்தை எனப்படும் தன் அறிவில் நாடவேண்டும். 'ஊராத் துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவ' என்பது மெய்கண்டார் வாக்கு. ஊரா-யாவராலும் ஊராத அல்லது செலுத்தப்படாத. துனை-விரைவு. யாரும் ஏறிநின்று செலுத்தாத விரைவையுடைய பேய்த்தேர், அதாவது கானல். கானலானது நீர்போலத் தோன்றும் தோற்றம். கானல் நீர் எவ்வாறு உண்மையான தாகத்தைத் தணிக்காதோ, அதே போன்றது உலக இன்பம் என்று உணர்ந்து, பின் ஞானக் கண் மூலம் சிந்தையில் இறைவனை நாடினால் அப்போது தண்நிழல் போல இறைவன் தோன்றுவன். அவ்வாறு தோன்றும் இறையின் நினைவு நீங்காதிருத்தற்பொருட்டு இறைவன் திருவைந்தெழுத்தை முறையாக எண்ண வேண்டும்.

(10) இறைவனை அடைவதால் உண்டாகும் பயன் பாசவீடு, சிவப்பேறு என இருவகைப்படும். அவற்றுள் பாசவீடு பத்தாம் சூத்திரத்தாலும், சிவப்பேறு பதினொன்றாம் சூத்திரத்தாலும் கூறப்படுகின்றன. கட்டு நீங்குமுன் இறைவன் உயிரை முன்னே வைத்து, அதன் விருப்பத்திற்கேற்பச் செயல்படுகிறார். இறைவன் உயிருக்கு உதவும் உண்மையை அறிந்த போது, உயிரானது இறைவன் நோக்கத்தை முன்வைத்து, அதற்கேற்பச் செயல்பட வேண்டும். இதுவே ஏகனாதல் எனப்படுகிறது. இதனுடன் இறையால் பணிக்கப்படும் செயல்களைச் செய்தலாகிய இறைபணியையும் கடைப்பிடிக்க வேண்டும். ஏகனாதலால் ஆணவமலமும், இறைபணி நிற்றலால் மாயை, கன்மம் ஆகியவையும் நீங்குகின்றன.

(11) சிவப்பேறு கூறும் பதினோராம் சூத்திரத்தில் இறைவன் செய்யும் காட்டும் உபகாரத்தோடு, காணும் உபகாரத்தை விளக்குகிறார் ஆசிரியர். "காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்' என்பது சிவஞானபோதத் தொடர். ஆன்மாவின் அறிவு விளக்கத்திற்கு இறைவன் செய்யும் உதவி காட்டும் உபகாரம் எனப்படுகிறது. உயிர் பொருளை அறிந்து அதில் அழுந்தி நிற்றற்கு இறைவன் உடனின்று பொருள்களைத் தானும் கண்டுவருதல், காணும் உபகாரம் எனப்படும்.

காணும் உபகாரத்தை விளக்கக் கண்ணையும், அது செயல்படுவதற்கான கருத்தையும்-அதாவது உயிரையும் உவமையாகக் கூறுகிறார். கண்தான் காண்பது என்றாலும், அதற்குச் சார்பாக உயிரின் உதவி இருந்தால்தான் கண் காண முடியும். இது குறிப்பிட்ட ஒருவரைச் சந்திக்க நாம் செல்லும்போது, குறிப்பிட்ட அவரைத்தான் கண்ணும் கருத்தும் சேர்ந்து நோக்கும். பிறரைக் கண் பார்த்தாலும் கருத்துச் சேராததனால் அவரைப் பார்ப்பதில்லை. இவ்விருவகை உபகாரங்களும் உயிர்களுக்குப் பிறப்பு, வீடு என்னும் இருநிலையினும் இறைவனால் செய்யப்படுகின்றன. சிவஞானம் பெற்றவன் இவ்வுபகாரத்தைத் தனது தெளிந்த அறிவில் மறவாது கடைப்பிடித்து நிற்கின்றான். அந்த அறிவின் பயனாக முதல்வனிடத்து இடையறாத பேரன்பு சிவஞானிக்கு உண்டாகும். அவ் அன்பே தன் வடிவமாகக் கொண்டு பரமுத்தி நிலையில் முதற்பொருள் பேரின்ப வடிவாய் அநுபவப்படுகிறது. அவ் அநுபவத்தில் முத்தான்மா அழுந்தி நின்று, தான்வேறு முதல்வன்பேறு என்பதின்றி ஒன்றுபட்டு இன்புறுகிறது. இதுவே அயரா அன்பின் அரன்கழல் செலுமே என்னும் தொடரால் குறிக்கப்படுகிறது. இதுதான் இன்புறுநிலை எனப் பேசப்படும் முத்திநிலை ஆகும்.

(12) பன்னிரண்டாம் சூத்திரத்தில் இத்தகு வீடுபேறு பெற்றவர்கள் உலகமுகப்படும் போது எவ்வாறு இருப்பார்கள் என்பதை மெய்கண்டார் விளக்குகிறார். 12-ஆம் சூத்திரத்தின் முதல்பகுதி 'செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா அம்மலங் கழீஇ' என்பது. செம்மையாகிய தாமரைமலர் போன்ற வலிமையுடைய இறைவன் தாள்களைச் சேர ஒட்டாதபடி தடுக்கும் ஆணவ மலத்தைக் கழுவுக என்பது பொருள். இரண்டாம் பகுதி'அன்பரொடு மரீஇ' என்பது. இது அத்தகைய ஆணவ மலத்தை நீக்கியவர்களைச் சேர வேண்டும் என்பது. 'மால்அற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம்தானும் அரன்எனத் தொழுமே' என்பது அடுத்தபகுதி. குற்றம் நீங்கிய அன்பை உடைய அடியவர்களின் திருவேடத்தையும், இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்களையும் இறைவன் எனவே எண்ணி வழிபட வேண்டும். 12-ஆம் சூத்திரம், சிவஞானிகள் அறிவும் விருப்பமும் செயலும் உலகமுகப்படும்போது எவ்வெவற்றைப் பொருளாகக் கொள்ளும் எனக் காட்டுகிறது. அவர்களுடைய அறிவு மலத்தின் வழிப்படாது இருத்தலை எண்ணுகிறது. அவர்களுடைய விருப்பம் சிவனடியார்களைச் சேர்கிறது. அவர்கள் செயல் திருவேடத்தையும் ஆலயத் திருமேனிகளையும் வழிபடுகிறது.

சிவஞானபோதத்தின் இறுதிச் சூத்திரங்களை இந்த முறையிலும் கருதலாம். 8-ஆம் சூத்திரம் கேட்டலைக் குறிக்கிறது. 9-ஆம் சூத்திரம் சிந்தித்தலைக் குறிக்கிறது. பத்தாம் சூத்திரம் தெளிதலைக் குறிக்கிறது; பதினொன்றாம் சூத்திரம் நிட்டையைக் கூறுகிறது. எட்டாம் சூத்திரம் அதிபரிபக்குவம் உடையவர்களுக்குக் கேட்ட மாத்திரத்திலேயே நிட்டை கூடுதல் உண்டாகிறது என்பதைத் தெரிவிக்கிறது. ஏனைய சிந்தித்தல், தெளிதல், நிட்டை எனும் படிமுறையால் ஞானம் எய்துதற்குரிய முறைகளை 9, 10, 11 என்னும் சூத்திரங்களால் தெரிவித்து, 12-ஆம் சூத்திரத்தில் அணைந்தோர் தன்மையைக் கூறுகிறார் மெய்கண்டார்.

—ooOoo—

சிவஞான சுவாமிகளின் உவமைக் கவித்திறன்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

முன்னுரை:

ஒரு கவிதையின் சிறப்புக்குக் காரணமாக அமைவன, பலப்பல. அவைகளுள் உவமை என்பதும் ஒன்று. உவமையானது கவிதைக்கு அழகும் சுவையும் அளிக்கின்றது; கருத்து வளத்தினைப் பெருக்குகின்றது; கவிதையின் பொருளைப் பயில்வார் உள்ளத்திற் கவினுறப் பதியும்படி செய்கின்றது. ''அணியிலாக் கவிதை பணியிலா வனிதை'' என்பது பழமொழி. கவிதைக்குரிய அணிகளுள், முதன்மையும் தலைமையும் வாய்ந்தது உவமை அணியே. ஏனைய எல்லா அணிகளுக்கும் உவமையே அடிப்படையும் உயிரும் ஆகும்.

உவமை:

அதுபற்றியே ஆசிரியர் தொல்காப்பியர், பிற அணிகளை விதந்து ஓதாமல், உவமை ஒன்றனையே சிறப்பாகக் கொண்டு, உவமையியல் என ஒரு தனி இயலை வகுத்து, அதனை மட்டுமே விரித்து அழகுற விளக்கியருளினார். இங்ஙனமே,

''உவமை என்னும் தவலரும் விறலி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய அரங்கிற் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவர் இதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்பநடிக் கும்மே''

என அப்பைய தீட்சிதர் என்பவரும், தாம் இயற்றிய ''சித்திர மீமாம்சை'' என்னும் நூலில், எல்லா அணிகளும் உவமையின் அடியாகவே தோன்றின எனக் குறிப்பிடுகின்றார்.

கற்பனை செறிந்த நல்ல
கவிதையாம் அரங்கம் தன்னில்
பொற்புறும் உவமை என்னும்
புகழ்மிகும் விறலி தானே,
பற்பல வேடம் பூண்டு,
பண்பமை சுவைஞர் உள்ளம்
நற்பெரு மகிழ்ச்சி ஓங்க,
நடனம்செய் தின்பம் நல்கும்! (1)

நலமிகும் உவமை என்னும்
நல்லெழில் விறலி தானே,
பலவகைச் சிறந்த கோலம்
பாங்குறப் புனைந்து போந்து
கலைநிறைந் துயர்ந்து நிற்கும்
காவிய அரங்கில் தோன்றிப்
புலவர்தம் உள்ளத் தின்பம்
பொங்கிட நடிப்பள் நன்றே! (2)

—ந. ரா. மு.

சிவஞான சுவாமிகள்:

சிவஞான சுவாமிகள் இற்றைக்கு ஏறத்தாழ 200 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த தமிழ்ப் பெருஞ் சான்றோர்! தமிழ்நாட்டில் அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்த தமிழ்ப் பெருங்கவிஞர்களின் வரிசையில் தலைசிறந்த ஒருவராக மதித்துப் போற்றத் தக்க பெருஞ் சிறப்புடையவர் இவர்! தமிழ்ப் புலமை உலகிலும், சைவ சித்தாந்தத் தத்துவ உலகிலும், தனிப்பெரும் சிறப்பிடம் சிவஞான சுவாமிகளுக்கு உண்டு.

சிவஞான சுவாமிகள் தோன்றியருளிற்றிலராயின், சைவசித்தாந்தத் தத்துவக் கொள்கை, இந்நாளில் இத்துணை விளக்கம் பெற்றிருத்தல் இயலாது. வடமொழி தென்மொழி என்னும் இருபெரு மொழிகளிலும் புலமை நிரம்பப் பெற்றுத், தமிழில் மிகச் சிறந்த எழில் நலம் சான்ற உரைநடை வரையும் திறனும்வாய்ந்து, தாம் இயற்றியருளிய பற்பல அரும்பெறல் நூல்களால், நம் தமிழ் மொழியினைப் பொற்புற மிகவும் வளப்படுத்திப், பெருந்தொண்டாற்றியருளியவர் நம் சிவஞான சுவாமிகள்! 'சிந்தனைத் திறன் மிக்க தென்னக மக்களின் பேரறிவின் பெருவிளைவு' எனப் புகழ்ந்து ஓதப்பெறும் சைவ சித்தாந்த மெய்ப்பொருள் நுட்பங்களை விளக்குதலில், சுவாமிகள் ஆற்றியுள்ளதொண்டு அளப்பரியது.

அத்துவிதம்:

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பினை உலகிலுள்ள பல்வேறு சமயங்களும் வெவ்வேறு வகைகளில் தத்தமக்கு ஏற்ப விளக்குகின்றன. நமது இந்து சமயம் அதனை 'அத்துவிதம்' என்னும் சொல்லாற் குறிப்பிடுகின்றது. அத்துவிதம் என்னும்இவ்வரும்பெறற் சொற்றொடரின் பொருட்டிறம் குறித்துச், சங்கரர் இராமானுசர் மத்துவர் முதலிய பற்பலரும், தத்தமக்கு ஏற்ப ஒவ்வொரு வகையில்

விளக்கம் செய்துள்ளனர். அவ்விளக்கத்திற்கு ஏற்ப எத்தனையோ பல நூல்களும், கொள்கைகளும், மரபுகளும், சமயப் பாகுபாடுகளும் ஏற்பட்டு நிலவி வருகின்றன.

அத்துவிதம் என்னும் இச் சொற்றொடருக்குச் சைவ சித்தாந்தப் பெருஞ் சான்றோராகிய ஆசிரியர் மெய்கண்டார் பெருமானும், தமக்கு முற்பட்ட தமிழகத்துச் சிவநெறிச் சான்றோர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பொருள் விளக்கம் கண்டுள்ளார்.

''பொய்கண்டார் காணாப்
புனிதம்எனும் அத்துவித
மெய்கண்ட நாதன்அருள்
மேவும்நாள் எந்நாளோ?''

என வேதாந்த சித்தாந்த சமரச ஞானச் சான்றோராகிய தாயுமான அடிகள், அத்துவிதச் சொற்றொடருக்கு மெய்கண்டார் விளக்கியருளிய பொருளை வியந்து போற்றியிருத்தல் காணலாம்.

இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பை, ஒரு சிலர் பொன்னும் பணியும் போல் அபேதம் என்பர்; மற்றும் சிலர் இருளும் ஒளியும்போல் பேதம் என்பர்; வேறு சிலர் சொல்லும் பொருளும்போற் பேதாபேதம் என்பர். இறைவனும் உயிர்களும் தம்முள் பொருட்டன்மையால் இரண்டாயினும், பிரிக்க முடியாத கலப்புத் தொடர்புடையன என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. 'அத்துவிதம்' என்னும் சொற்றொடருக்கு ஆசிரியர் மெய்கண்டார் 'இரண்டு அன்மை' எனப் பொருள் விளக்கினார். பிரிக்க முடியாதபடி சேர்ந்துள்ள இருபொருள்களின் கலப்பே, அத்துவிதம் எனப்பெறும்.

இவ் அத்துவிதமாகிய கலப்பு ஒன்றாய் நிற்றலா? வேறாய் நிற்றலா? உடனாய் நிற்றலா? எனின், இம்மூன்றுமாயும் நிற்றலே, அத்துவிதம் என்பது சைவ சித்தாந்தம். உயிர்கள் நிலைத்தற்கு இறைவன் அவற்றோடு ஒன்றாய் நிற்கின்றான். பொருள்களை உயிர்கள் அறியும்படி செய்தற்கு, இறைவன் உயிர்களுக்கு வேறாக நிற்கிறான். பொருள்களை உயிர்கள் நுகரும்படி செலுத்துவதற்கு, இறைவன் உயிர்களோடு உடனாக நிற்கிறான்.

கலத்தற்றன்மையால் உடலின் உயிர் போல் உயிர்களோடு ஒன்றாகியும், பொருட்டன்மையால் கண்ணிற் சூரியன் போல உயிர்களுக்கு வேறாகியும், உயிர்க்கு உயிராதற்றன்மையால் கண்ணொளியின் உயிருணர்வுபோல உயிர்களுக்கு உடனாகியும், இறைவன் நிற்கின்றான். உயிர்கள் நிலைத்தல், அறிதல், நுகர்தல் என்னும் மூன்று பயன்களையும் எய்துதற்கு, இறைவன் உயிர்களோடு முறையே ஒன்றாகவும்-வேறாகவும்-உடனாகவும் நிற்பது, இன்றியமையாததாக இருக்கின்றது எனச் சைவ சித்தாந்த நூல்கள் பலவும் சாற்றுகின்றன.

சிவஞானசுவாமிகளின் செய்யுள் :

சிவஞான சுவாமிகள், சைவசித்தாந்தம் கூறும் இம்முத்திற நிலைகளையும் பற்றிப் பின் வரும் அழகிய இனிய செய்யுளாற் சுருங்கத் தொகுத்து விளங்க வகுத்து உணர்த்துகின்றார்

பண்இசை, வெம் பரிதிமதி, திலதயிலம்,
தீஇரும்பு, பாணி உப்பு,
விண்அநிலம், உடல்உயிர், நீர்நிழல், உச்சிப்
பளிங்கு, பகல் விளக்கு, பால்நீர்,
கண்இரவி, உணர்வுஒளிபோல், பிரிவரிய
அத்துவிதக் கலவி காட்டித்,
தண்ணளிவைத் தெனையாண்ட துறைசைநமச்
சிவாயகுரு, சரணம் போற்றி!

இறைவனோடு உயிர்க்கு உள்ள இயைபுகளை விளக்கும் திறனில், இச்செய்யுள் பெருஞ் சிறப்புடையதாகத் திகழ்கின்றது. அளவாற் சிறியதாயினும், பொருளின் நுணுக்கத்தால், இச்செய்யுள் மிக்க மாட்சிமை வாய்ந்து திகழ்கின்றது. சிவஞான சுவாமிகளின் சிறந்த புலமை நலனை உணர்த்துதற்கு, இச்செய்யுள் ஒன்றுமட்டுமே இனிய எடுத்துக் காட்டாக அமைதற்குப் போதியதாகும்.

இனிய இச்செய்யுளின்கண், திறம் தெரிந்து தேர்ந்தெடுத்த (13) உவமைகளைச் சிவஞான சுவாமிகள் மிகப் பொருத்தமாக அருளிச் செய்துள்ளார். இறைவன் உயிர்களோடு ஒன்றாய் நிற்றற்கு (3) உவமைகளும், வேறாய் நிற்றற்கு (3) உவமைகளும், உடனாய் நிற்றற்கு (7) உவமைகளும், இச்செய்யுட்கண் முறையே கூறப்பட்டுள்ளன. இவ்வுமைகளின் இனிய பொருத்தத்தினை இங்கு நாம் ஒரு சிறிது ஆராய்வோம்.

ஒன்றாதல் :

(1) பண் என்பது ஒலியின் வேறுபாடு. ஒலியைவிடப் பண்வேறு அன்று. ஆயினும் ஒலியெல்லாம் பண் ஆகாமையின், பண் ஒலியும் அன்று. ஒலியும் அன்றாய் ஒலியின் வேறுபாடே ஆகிய பண்ணானது ஒலியை விட்டுத் தனித்து நில்லாதவாறு போலச் சித்தின் பேதமாகிய சீவன்,சிவனுகிய சித்தன்றாய்ச் சிவனையின்றித் தனித்து நில்லாது. ஆதலின் அதனை உணர்த்தப் 'பண்ணும் இசையும்' போல் என உவமை கூறினார்.

(2) அங்ஙனமாயின், ஒலியின் வேறுபாட்டையே பண்ணென்றாற்போலச் சிவத்தின் வேறுபட்டதே சீவன் என்னலாமோ? எனின், சூரியனின் ஒளியையின்றிச் சந்திரனுக்கு ஒளியில்லையாயினும் பொருளால் வேறு காணப்படுமாறு போலச் சிவனையின்றிச் சீவன் தனித்து நிற்றலில்லை யாயினும், 'பொருளால் வேறு ஆகும்' என்பதை உணர்த்த 'வெம்பரிதியும் மதியும்' உவமை கூறப்பட்டன.

(தொடரும்)